REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 பெப்ரவரி 7 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 32 | Monday 07,February, 2022 | 16பக்கங்கள் | 30/-

நாளை மறுதினம் அநுராதபுரத்தில்

பொதுஜன பெரமுனவின் முதலாவது பிரசார கூட்டம்

ஷம்ஸ் பாஹிம்

அரசாங்கத்தின் அரசியல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து பொது மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நாடு முழுவதும் தொடர் கூட்டங்களை நடத்துவதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது. 06

பெரும்போகத்தில் ஏற்பட்ட குறைகள் சிறுபோகத்தில் நிவர்த்தி

உரிய காலத்தில் பசளைகளை விநியோகிக்க ஜனாதிபதி பணிப்பு

சிறுபோகத்துக்குத் தேவையான பசளைகளை, உரிய காலத்துக்குள் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பசளைச் செயலணிக் கூட்டத்தின் போது ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். பல்வேறு தொழில்நுட்ப முறைமைகள் பயன்படுத்தப்பட்டு, தேசிய அளவில், பெரியளவில் சேதனப் பசளை வகைகள் உற்பத்தி 06

G.C.E (A/L) பரீட்சை இன்று முதல் ஆரம்பம்

அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி என அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிவரை குறித்த பரீட்சை இடம்பெறவுள்ளது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார். 06

இலங்கைக்கு ஆதரவளிக்கும் கடமைப்பாடு எமக்குள்ளது

தெற்காசிய உலக வங்கி பணிப்பாளர் டுவிட்டரில் பதிவு

இலங்கைக்கு ஆதரவளிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளதாக உலக வங்கியின் மாலைத்தீவு, நேபாளம் மற்றும் இலங்கை மற்றும் தெற்காசியாவிற்கான பணிப்பாளர் அறிஸ் ஹடாட் சர்வோஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பகுதியில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

உங்கள் விருந்தோம்பலுக்கு நன்றி.நான் முக்கிய அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்தேன், உற்பத்தித் 06

உண்மையான நல்லிணக்கத்திற்கு சர்வதேசத்தின் தலையீடு பாதிப்பு

காயங்களை ஆற்றுவதற்கு பதில் மேலும் மோசமாக்கும் என்கிறார் அலிசப்ரி

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு உள்நாட்டு பொறிமுறை காணப்படுவதோடு அவை செயற்படுத்தப்பட்டு வருவதாக நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

மூன்றாம் தரப்பு தலையீடானது உண்மையான நல்லிணக்கத்தை எதிர்மறையாக பாதிக்கும் என்பதோடு காயங்களைக் குணப்படுத்துவதற்குப் பதிலாக நிலைமையை மோசமாக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மார்ச் மாதம் நடைபெற உள்ள ஜெனீவா அமர்வு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இதனை குறிப்பிட்டார். சகோதர பத்திரிகையான சண்டே ஒப்சேவர் ஆங்கில ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், காணாமல்போனோர் அலுவலகம் இழப்பீட்டு அலுவலகம் போன்றவை வலுப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே உலகிற்கு நாங்கள் இவற்றை காண்பித்து இங்கு மாற்றங்கள் இடம்பெறுகின்றன என்பதை அங்கீகரிக்குமாறு கோரவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.பிரச்சினைகளுக்கு உள்நாட்டு பொறிமுறை தான் சரியான தீர்வாகும் அவ்வாறான உள்நாட்டு பொறிமுறைகள் காணப்படுகின்றன. அவை செயல்படுத்தப்படுகின்றன. சர்வதேச சமூகத்தின் மூன்றாம் தரப்பு 06

வடக்கு, கிழக்கில் பிரச்சினைகள் உள்ளன. அவற்றை இனங்கண்டு படிப்படியாக தீர்த்து வைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது

துறைமுக நகரை பார்வையிட பெருந்திரளான மக்கள் வார இறுதி நாட்களில் வருகை தருகின்றனர். துறைமுக நகரின் அழகிய தோற்றத்தை காணலாம்.

தணிக்கைகள் மூலமாக அல்ல

மேற்பார்வை மூலமே கௌரவமான ஊடக கலாசாரத்தை உருவாக்கலாம்

03

IMF உடன் பேச்சு நடத்துவதில் எமக்கு பிரச்சினை எதுவுமில்லை

அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு பேச்சு நடத்துவது எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தப்படும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, 06

13 ஆவது திருத்தத்தை

முழுமையான தீர்வாக நாம் ஏற்கவில்லை

நாவலப்பிட்டி சுழற்சி, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நாம் முழுமையான தீர்வாக ஏற்கவில்லை. அதனை வைத்துக்கொண்டு முன்னோக்கி நகர வேண்டும். மாறாக இருப்பதையும் இழக்கும் விதத்தில் செயற்படக்கூடாது என்று தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி 06

கிறிஸ்தவ- முஸ்லிம் சமூகங்களை பிரித்த அதே சக்திகள்

இந்துக்கள், முஸ்லிம்களை பிளவுபடுத்த பகீரத முயற்சி

அவதானமாக இருக்க அதாவுல்லா எம்.பி கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மூலம் கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களையும் பிரித்த அதே சக்திகள், இன்று இந்துக்களையும், முஸ்லிம்களையும் பிரிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கின்றனர் என்று சிந்திக்க நேர்ந்து உள்ளது என்று தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ. எல். எம். அதாவுல்லா எம். பி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் 06

லதா மங்கேஷ்கர் நேற்று காலமானார்

சோகத்தில் திரையுலகம்

பிரபல பின்னணி பாடகி லதா மங்கேஷ்கர் (Lata Mangeshkar) உடல் நிலை குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மும்பையில் மரணமடைந்துள்ளார்.பாடகி லதா மங்கேஷ்கர் மரணமடைந்த தகவல் வெளியாகிய நிலையில் திரையுலகம் பெரும் சோகத்தில் ஆழ்ந்தது. 06

தடுப்பூசி போடாதவர்கள் இனி பொது இடங்களுக்கு செல்வதற்குத் தடை

ஏப்ரல் 30 முதல் புதிய நடைமுறை

கொவிட்19 க்கு எதிராக முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் ஏப்ரல் 30 முதல் பொது இடங்களுக்குள் நுழைய தடை செய்யும் விசேட வர்த்தமானி அறிவிப்பை சுகாதார அமைச்சர் நேற்று முன்தினம் (05) காலை வெளியிட்டுள்ளார். அதற்கமைய, ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் பொது இடங்களில் காதார வழிக்காட்டல்களை மீறுபவர்களுக்கு 06

அரசியல் கைதிகள் சகலரும் விரைவில் விடுவிக்கப்படுவர்

நல்லாட்சியில் இல்லாத முயற்சி இடம்பெறுகிறது

ஓமந்தை விசேட நிருபர்

அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க முயற்சி எடுத்துள்ளதாக ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் கே. மஸ்தான் தெரிவித்துள்ளார்.வவுனியாவில் (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன் போதுகருத்துவெளியிட்ட அவர், 'நல்லாட்சி காலத்தில் எத்தனை அரசியல் கைதிகளை விடுவித்தார்கள். எனினும் தற்போதைய ஜனாதிபதி பொறுப்பேற்றவுடன் அரசியல் கைதிகளின் 06

அரசை வீழ்த்தும் சூழ்ச்சிக்கு இடமளிக்க தயாரில்லை

-டயானா கமகே எம்.பி சூளுரை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை வீழ்த்த ஒருபோதும் இடமளிக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்தார்.

கம்பளை பகுதியில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா மகளிர் அமைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்கள் குறித்து அரசியல் மட்டத்தில் பல் வேறுப்பட்ட கருத்துக்கள் குறிப்பிடப் படுகின்றன. 06

திருவள்ளுவரை பெருமைப்படுத்திய ஐக்கிய அமெரிக்கா

உலக பொதுமறையான திருக்குறளை எழுதிய திருவள்ளுவரை சிறப்பிக்கும் வகையில், இந்தியாவின் தென்கோடி முனையான கன்னியாகுமரியில், தமிழக அரசு சார்பில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. 06

பிணங்களை வைத்து அரசியல் செய்ய வேண்டாம்

அமைச்சர் ஜோன்ஸ்டன் கோரிக்கை

03

லங்கா IOC நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்தது

03

காணாமல் போன மாலைதீவு மாணவன் சடலமாக மீட்பு

03

நெருக்கடிகளுக்கு தீர்வு காண சர்வகட்சி மாநாட்டைக் கூட்டவும்

அரசாங்கத்திடம் SLFP கோரிக்கை

உள்ளூராட்சி சபைத் தேர்தலை தொடர்ந்தும் தாமதிக்காது நடத்துவது சம்பந்தமாக கலந்துரையாடவும் நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு தீர்வு காணவும் சர்வ கட்சி மாநாட்டை நடத்துமாறு அரசாங்கத்தின் பிரதான கூட்டணிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன் போது 15 தீர்மானங்களை அகில இலங்கை செயற்குழு 06

உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கியிருந்த

முன்னாள் எம்.பிக்கள் எண்மருக்கு அபராதம்

பாராளுமன்றத்தினால் அறிவித்தல்

அனுமதியின்றி உத்தியோகபூர்வ இல்லங்களில் தங்கியிருந்தமைக்காக செலுத்தவேண்டிய உரிய அபராதத் தொகையை விரைவில் செலுத்துமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டு பேருக்கு பாராளுமன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியடைந்த பின் தமது உத்தியோகபூர்வ இல்லங்களைவிட்டு வெளியேறாது, இதுவரையில் அபராதத்தையும் 06

மீனவர்களின் கோரிக்கைக்கு நீதித்துறை மதிப்பளிக்க வேண்டும்

TNA பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் கருத்து

யாழ்.குறூப் நிருபர்

நீதித்துறைக்கு மதிப்பளித்த மீனவர்கள் வீதியை மறிக்காது விட்டதைப் போல அவர்களுடைய கோரிக்கைக்கு மதிப்பளித்து நீதித் துறை சரியானதை செய்ய வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இழுவை மடி தடைச் சட்டத்தினை சரியாக 06

விக்கல் வீராச்சாமி

அண்ணே, ஐ. நாவுக்கு கொடுக்க எண்டுவடக்கு கிழக்கில கையெழுத்து வேட்டை ஒண்ட ஆரம்பிச்சு இருக்கினம் பாத்தீங்களோ, அது ஏன்...

தம்பி, மார்ச் மாசம் வரப்போகுது, அதால இவை இப்படி ஒவ்வொரு விளையாட்டா காட்டுவினம், இனிப் பாரும் ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் சூடு பறக்கும்...!!!

ஆழ்துளை கிணற்றில் 4 நாள் சிக்கியிருந்த சிறுவன் மரணம்

ஆழ்துளை கிணற்றில் கடந்த நான்கு நாட்களாக சிக்கி இருந்த ஐந்து வயது மொரோக்கோ நாட்டு சிறுவன் ரயான் கடுமையான மீட்பு நடவடிக்கையின் பின் உயிரிழந்துள்ளான்.

கிணற்றில் இருந்து சிறுவன் வெளியேற்றப்பட்டதும் விரைவில் சிறுவன் உயிரிழந்த அறிவிப்பை மொரோக்கோ அரசு வெளியிட்டது.

இந்த சிறுவனை காப்பாற்றும் முயற்சி மொரோக்கோவில் பெரும் அவதானத்தை பெற்ற நிகழ்வாக மாறியதோடு அந்த கிணற்றை சூழ நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டதோடு சிலர் அங்கேயே முகாமிட்டிருந்தனர்.

இந்த குறுகலான கிணற்றில் 32 மீற்றர் (104 அடி) ஆழத்தில் சிறுவன் சிக்கிக்கொண்டான். மண் சரிவு பற்றிய அச்சம் மீட்பு நடவடிக்கைக்கு இடையூறாக அமைந்தது.

கடும் போராட்டத்தின் பின் கடந்த சனிக்கிழமை மாலை அந்த சிறுவன் வெளியே கொண்டுவரப்பட்டான்.

சிறுவனின் நிலை பற்றி உறுதி செய்யப்படாத நிலையில் அவன் மீட்கப்பட்டது தொடர்பில் கொண்டாட்டங்கள் மற்றும் பாராட்டுகள் குவிந்தன. எனினும் ரயான் உயிரழந்ததான அறிவிப்பு வெளியானதை அடுத்து அனைவரும் கவலையில் ஆழ்ந்தனர். அந்நாட்டு மன்னர் சிறுவனின் மரணத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டுள்ளார்.

வடக்கில் உள்ள சிறு நகரான டம்ரோட்டில் அந்த ஆழ்துளை கிணற்றை சிறுவனின் தந்தை சீரமைத்துக் கொண்டிருந்தபோதே சிறுவன் அதற்குள் விழுந்துள்ளான்.

ஒரு நொடி அவன் மீதிருந்து கண்ணை திருப்பிய நேரத்தில் குழிக்குள் விழுந்துவிட்டான் என்று ரயானின் தந்தை உள்ளூர் ஊடகம் ஒன்றுக்கு குறிப்பிட்டுள்ளார்.

குறுகலான கிணற்றில் இருக்கு சிறுவனின் முணுமுணுப்பு சத்தம் கேட்டு கெமராவுடனான கைபேசியை உள்ளே அனுப்பியே அங்கு சிறுவன் இருப்பதை உறுதி செய்ததாக சிறுவனின் உறவினர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். “என்னை தூக்கு என்று அவன் அழுதான்” என்று அவர் குறிப்பிட்டார்.

இதனை அடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை மொரோக்கோவின் சிவில் பாதுகாப்பு பணியகம் மீட்பு நடவடிக்கையை ஆரம்பித்தது.

அந்த கிணற்றுக்குள் இருந்து கடந்த வியாழக்கிழமை எடுக்கப்பட்ட படத்தில் சிறுவன் உயிரோடு உணர்வுடன் இருப்பது தெரியவந்தது. சிறுவனுக்கு ஒட்சிசன், உணவு மற்றும் குடிநீர் வழங்க மீட்பாளர்கள் முயன்றபோதும் அதனை சிறுவன் பயன்படுத்தியது பற்றி உறுதி செய்யப்படவில்லை.

மணல் மற்றும் பாறை கலந்த அந்த கிணற்றை திறப்பது அபாயகரமானதாக இருந்தது மீட்பு நடவடிக்கையில் சிரமத்தை ஏற்படுத்தியது. இதனால் கிணற்றுக்கு அருகே புல்டோசர்களை பயன்படுத்து ஆழமான பள்ளம் தோண்டப்பட்டது. தொடர்ந்து கிடைமட்டமாகத் தோண்டி மீட்பாளர்கள் சிறுவனை அடைந்தனர். எனினும் மீட்பாளர்கள் சிறுவனை அடையும்போது அவன் உயிரிழந்த நிலையில் இருந்துள்ளான்.

இந்த மீட்பு பணிகள் இரவு பகல் என இடைவிடாது இடம்பெற்ற போதும், கிணறு சரிவது அல்லது மண் விழுவதில்லை என்பதை உறுதி செய்வதற்காக பல தடவைகள் நிறுத்தப்பட்டது. அந்தத் துளைக்கான பாதுகாப்பான வழி ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் மீட்புக் குழுவினர் மிகப் பெரிய குழாய்களை பயன்படுத்தினர்.

இந்த மீட்பு நடவடிக்கைகளை பார்வையிட அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கானவர்கள் மதப் பாடல்களை பாடியும், பிரார்த்தனை மற்றும் அல்லஹு அக்பர் என்று கோசம் எழுப்பியும் வந்தனர். சிலர் அங்கேயே முகாமிட்டு தங்கி இருந்தனர்.

2019 இல் ஸ்பெயினின் மலகா நகருக்கு அருகில் இதேபோன்ற ஆழ்துளை கிணறு ஒன்றில் விழுந்த இரண்டு வயது சிறுவன் உயிரிழந்த சம்பவத்தை நினைவூட்டுவதாக இந்த நிகழ்வு இருந்தது.

25 சென்டிமீற்றர் அகலம் மற்றும் 70 மீற்றர் ஆழம் கொண்ட கைவிடப்பட்ட கிணற்றில் விழுந்த ஜூலன் ரெசெல்லோ என்ற அந்த சிறுவனை காப்பாற்ற 13 நாள் மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் அவன் உயிரிழந்த நிலையிலேயே மீட்கப்பட்டான்.

சர்வதேச செய்திகள்

ஆப்கான் மனிதாபிமான நெருக்கடி பற்றி கவலை

ஆப்கானிஸ்தானில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி குறித்து மீண்டும் கவலை தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத் தலைவர் டேவிட் பீஸ்லி, அந்நாட்டு மக்கள் உயிர்வாழ்வதற்காக தம் குழந்தைகளையும், உடல் உறுப்புகளையும் விற்பனை செய்யத் தொடங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பட்டினியில் வாடுவதால், அவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை விரைவுபடுத்துமாறு சர்வதேச சமூகத்தினரிடம் அவர் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் தடையில் விலக்கு

ஈரான் அணுசக்தி திட்டங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் சிலவற்றுக்கு அமெரிக்கா விலக்கு அளித்துள்ளது.

வல்லரசு நாடுகளுடன் மேற்கொண்டுள்ள அணுசக்தி ஒப்பந்த நிபந்தனைகளை மீண்டும் நிறைவேற்றுவதற்கு ஈரானை சம்மதிக்கவைக்கும் நோக்கில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தைத் தக்கவைப்பதற்காக ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ள நிலையில் அமெரிக்கா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

புதிய உத்தரவின்கீழ், சர்வதேச நிறுவனங்கள் ஈரான் அணுசக்தி திட்டங்களுக்கு பொருட்களையும் சேவைகளையும் விற்பனை செய்வதற்கான தடையில் விலக்கு அளிக்கப்படுகிறது.

லோர்ட் அஹமதுக்கு ஐந்தரை ஆண்டு சிறை

இரு சிறுவர்கள் மீது 1970களில் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பிரிட்டன் லேபர் கட்சியின் முன்னாள் அரசியல்வாதியான லோர்ட் அஹமதுக்கு ஐந்தரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறுமி ஒருவர் மீது கற்பழிப்புக்கு முயற்சித்தது மற்றும் சிறுவன் ஒருவனுக்கு எதிராக பாலியல் தாக்குதலில் ஈடுபட்டதாக கடந்த ஜனவரியில் அவர் குற்றங்காணப்பட்டார்.

அவர் பதின்ம வயதில் இருக்கும்போது ரொட்டர்ஹாமில் இந்த குற்றங்கள் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான வழக்கு செஃபீல்ட் கிரவுன் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது.

தென் மாகாணம்;

கொரோனா தொற்று பரீட்சார்த்திகளுக்கு மூன்று வைத்தியசாலைகளில் வசதிகள்

வெலிகம தினகரன் நிருபர்

தென் மாகாணத்திலிருந்து இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தொற்றும் மாணவர்களுள் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுக்காக தென் மாகாணத்திலுள்ள மூன்று வைத்தியசாலைகளில் பரீட்சைக்கு தோற்ற வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தென் மாகாண கல்விப் பணிப்பாளர் நிமல் திஸாநாயக்க தெரிவித்தார்.

இதன் பிரகாரம் காலி மாவட்டத்தில் கரன்தெனிய பிரதேச வைத்தியசாலை, மாத்தறை மாவட்டத்தில் கம்புருகமுவ வைத்தியசாலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலை ஆகியன பரீட்சை மண்டபங்களாக செயற்படவுள்ளன.

இப் பரீட்சை மண்டபங்கள் சுகாதார வழிகாட்டலுக்கு அமைய இடம்பெறவுள்ளதோடு, பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் மேற்பார்வையாளர்களுக்கு மேலதிகமாக இரு வைத்தியர்கள் வீதமும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

74 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பேருவளை நகரசபைத் தலைவர் மஸாஹிம் முஹம்மத் தலைமையில் நகர சபை வளாகத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் (04) சிறப்பாக நடைபெற்றது. தேசிய கொடி ஏற்றப்பட்டபின் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. நகர பிதா மஸாஹிம் முஹம்மத், பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார மற்றும் நகர சபை உறுப்பினர்கள், நகர சபை ஊழியர்கள், நகர சபை பாலர் பாடசாலை சிறார்கள் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். பேருவளை விசேட நிருபர்

74 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நிககொள்ள ஜும்மா பள்ளிவாயல் நிருவாக சபை ஏற்பாட்டில் நிககொள்ள சிறிய குளம் நேற்று முன்தினம் துப்புரவு செய்யப்பட்டது.

படம்: மாத்தளை சுழற்சி நிருபர்

றுஹுனு சேவைக்கு 42 வருடங்கள் பூர்த்தி

மாத்தறை தினகரன் நிருபர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் றுஹுனு சேவை ஆரம்பிக்கப்பட்டு ஜனவரி மாதம் 3ந் திகதியுடன் 42 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

இதனை முன்னிட்டு மாத்தறையிலுள்ள றுஹுனு சேவை வளாகத்தில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பெப்ரவரி 5ந் திகதி மாத்தறை மாவட்டத்தில் வறிய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு இலவச கண்சிகிச்சை முகாம் இசைக் கச்சேரிகள் என்பன வளாகத்தில் நடைபெற்றன.

1980ம் ஆண்டு பெப்ரவரி 3ந் திகதி றுஹுனு சேவையை அப்போதைய இராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

லொறி விபத்தில் இளைஞன் பலி

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் கொழும்பு பிரதான வீதியின் சிலாபம் பண்டாரவத்த பகுதியில் (5) இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை கோனாகொல்ல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடை இளைஞர் ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற (5) சிலாபம் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த லொறியொன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வீதியோரத்தில் நின்ற மா மரமொன்றில் மோதியுள்ளது.

இதன்போது லொறியில் பயணம் செய்த குறித்த இளைஞர் காயமடைந்த நிலையில், அங்கிருந்தவர்களால் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சிலாபம் பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொலன்னறுவயில் இரு யானைகள் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

பொலன்னறுவ பகுதியில் ஹக்கபட்டஸ் சினை உட்கொண்ட இரு காட்டு யானைகள் உயிரிழந்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் (05) பொலன்னறுவ பொலிஸ் பிரிவின் கந்தேகம மற்றும் எல்லேவெவ பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலன்னறுவ பொலிஸார் தெரிவித்தனர். ஹக்கபட்டஸ் சினை உட்கொண்டு காயமடைந்திருந்த யானைகள் இரண்டையும் காப்பாற்றுவதற்காக வேண்டி வனஜீவராசிகள் திணைக்கள மிருக வைத்தியர்கள் சிகிச்சையளித்துள்ள போதிலும் காப்பாற்றுவதற்கு முடியாமல் போயுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்காக பொலிஸாரும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் தனித்தனியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஈரான் திரைப்பட விழா 2022

ரூசைக் பாருக்

ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் 43 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக ஈரான் கலாசார நிலையம் ஏற்பாடு செய்துள்ள ஈரான் திரைப்பட விழா இன்று திங்கட்கிழமை முதல் 11ம் திகதி வரை கொழும்பு தேசிய நூலகத்தில் நடைபெறவுள்ள து. அங்குரார்ப்பண நிகழ்வு இன்று காலை 11. 00 மணிக்கு இலங்கைக்கான ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் ஹஷேம் அஷ்ஜாஸ்த்சே தலைமையில் நடைபெறும். தேசிய நூலகத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ. சுனில், ஈரான் நாட்டின் கலாசார பிரிவின் பொறுப்பாளர் பஹ்மான் மொஸாமில் மற்றும் எஸ்.எல். மதனி ஆகியோர் சிறப்பு அதிதியாக கலந்து கொள்வர்.

கினலன் பாடசாலைக்கு செயற்பாட்டு அறை

கினலன் தோட்டப் பாடசாலைக்கு, செயற்பாட்டு அறையாக பயன்படுத்த கட்டடம் ஒன்றை இ.தொ.கா உப தலைவரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கோரிக்கைக்கு அமைய, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2022 பெப்ரவரி 7 திங்கட்கிழமை

தொழுகை நேரம்

சுபஹ்	05.11
லுஹர்	12.26
அஸர்	03.48
மஃரிப்	06.21
இஷா	07.33

இன்றைய சுபதினம்

பிலவ வருடம் தை 25

ராகுகாலம்	: பகல்	: 07.30	- 09.00வரை
சுபநேரம்	: காலை	: 06.00	- 07.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சப்தமி

இராசி பலன்கள்

மேஷம்	வெற்றி
ரிஷபம்	பாராட்டு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	சுகம்
துலாம்	நன்மை
விருச்சிகம்	நிறைவு
தனுசு	முயற்சி
மகரம்	பொறுமை
கும்பம்	மறதி
மீனம்	செலவு

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இந்தியா விஜயம்

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இந்தியாவுக்கு சென்றுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட அரச பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த வாரம் ஜெனீவா அமர்வு நடைபெற உள்ள நிலையில் இந்த சந்திப்பு இடம்பெறுகிறது.

தணிக்கைகள் மூலமாக அல்ல

மேற்பார்வை மூலமே கௌரவமான ஊடக கலாசாரத்தை உருவாக்கலாம்

கௌரவமான ஊடக கலாசாரத்திற்கு தணிக்கைகள் மூலமாக அன்றி முறையான மேற்பார்வையே அவசியமானது என தகவல் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மக்களின் கருத்தை கையாளும் ஊடகங்களின் பலம் அரசியல் நிறுவனங்களின் பலத்தை விட மிக அதிகம் எனவும், அந்த பெரும் பலத்துடன் ஊடகங்களுக்கு பாரிய பொறுப்பும் இருப்பதாகவும் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டார்.

தற்போதைய ஊடகங்களை அர்த்தமுள்ள, தரமான மற்றும் ஒழுக்கமான திசையை நோக்கி செலுத்துவதற்கு, சில சட்ட சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்காக விரிவான மற்றும் பயனுள்ள கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும். சுய ஒழுங்குமுறையே சிறந்த நடவடிக்கை என்றும் அமைச்சர் கூறினார்.

ஊடக சட்ட மன்ற உறுப்பினர்களுடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஊடகத்துறை

06

மக்களை கொன்று பிணங்களை வைத்து அரசியல் செய்ய முயற்சிக்க வேண்டாம்

தொழிற்சங்கங்கள், எதிரணியிடம் அமைச்சர் ஜோன்ஸ்டன் கோரிக்கை

மக்களை கொன்று பிணங்களை வைத்து அரசியல் செய்ய முயற்சிக்க வேண்டாம் எனவும் மின்சாரத்தை துண்டித்து அதிகாரத்தைப் பெற முயற்சிக்காதீர்கள் எனவும் தொழிற்சங்கங்களிடமும் எதிர்க்கட்சிகளிடமும் நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

நிக்கவெரட்டியவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த அவர்,

கேஸ் பிரச்சினையே பின்னால் யாரோ இருப்பதாகச் சொன்னேன். அப்போது நிறைய பேர் என்னை விமர்சித்தார்கள். இப்போது கேஸ் வெடிப்பதை பார்த்திருக்கிறீர்களா? முகநூலில் உள்ள அனைத்து ஜே.வி.பி காரர்களும் என்னைக் குற்றம் சாட்டத் தொடங்கினர். கெட்ட வார்த்தையில் என்னை ஏசினார்கள்.

அவர்கள் முகநூல் ஊடாக ஜேவிபியின் ஒழுக்கத்தை நீங்கள் நன்றாகக் கவனிக்கலாம். மின்சாரத்திலும் இதே போன்ற பிரச்சினை உள்ளது. மாதக்கணக்கில் மூடப்படுகிறது. இந்த மின் நெருக்கடிக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது என்பதை மக்கள் உணரவில்லையா? இதன் பின்னணியில் சதி உள்ளது.

06

நீர் கட்டணங்களை செலுத்தாத

முன்னாள், தற்போதைய அமைச்சர்கள் எம்.பிக்கள் தொடர்பில் ஆராய்வு

நீர் கட்டணங்களை செலுத்தாத முன்னாள் மற்றும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிக்கவுள்ளதாக நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

45 முன்னாள் மற்றும் இந்நாள் அமைச்சர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அமைச்சு மட்டத்தில் தமக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுள்ளதால், செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை அந்தந்த அமைச்சுக்கள் ஊடாக பெற்றுக் கொள்ளுமாறு சிலர் தமக்கு அறிவித்துள்ளதாக நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இத்தகைய முறைமையொன்று இல்லாத நிலையில் தம்மால் கட்டணங்களை செலுத்த இயலாதென அமைச்சின் அதிகாரிகள் கூறியுள்ளதாக நீர் வழங்கல் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலைமை தொடர்பில் அமைச்சரவைக்கு அறியப்படுத்தி இறுதித் தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சரவையினால் வழங்கப்படும் பதிலுக்கு அமைவாக செயற்படாத, கட்டணத்தை செலுத்துவதில் இருந்து தவறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மீண்டும் கொவிட் தொற்று அதிகரிப்பு

உயிரிழப்போர் தொகையும் கூடியது

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் ஆயிரத்து 243 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 17 ஆயிரத்து 189ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 5 இலட்சத்து 80 ஆயிரத்து 770 பேர் தொற்றில் இருந்து குணமடைந்துள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றினால் மேலும் 28 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் ஆண்கள் 20 பேரும் பெண்கள் 08 பேரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லங்கா IOC நிறுவனம் எரிபொருள் விலைகளை நள்ளிரவு முதல் அதிகரித்தது

லங்கா ஐஓசி நிறுவனம் நேற்று (06) நள்ளிரவு முதல் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது. இதன் பிரகாரம் பெற்றோல் விலை 7 ரூபாவினாலும் ஒட்டோ டீசல் விலை 3 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 92 ஒக்டென் பெற்றோல் விலை 177 ரூபாவில் இருந்து 184 ரூபாவாகவும் ஒட்டோ டீசல் விலை 121 ரூபாவில் இருந்து 124 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சரின் பிரதிநிதி அமைச்சர் டக்ளஸுடன் பேச்சு

கச்சதீவு திருவிழாவில் இந்திய பக்தர்கள் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று உறுதியளித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, திருவிழாவில் கலந்து கொள்ளும் இலங்கை இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு இடையில கலந்துரையாடலை நடத்தி இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்களினதும் எதிர்காலத்திற்கான ஆரோக்கியமான சூழலை உருவாக்குவது தொடர்பாகவும் பிரஸ்தாபித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிளில் நடைபெறவுள்ள கச்சதீவு திருவிழாவில் இந்தியாவில் இருந்து பக்தர்கள் கலந்து கொள்வதற்கு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அனுமதி வழங்குவதில்லை என்று ஏற்பாடு குழு தீர்மானித்திருந்தது. இந்நிலையில், தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலினின் ஆலோசனையின்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் உரையாடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வலம்புரி கவிதா வட்ட ஸ்தாபக குழு நடத்திய

கவிதைப் போட்டியின் பரிசளிப்பு விழா

வலம்புரி கவிதா வட்ட ஸ்தாபக குழு இயக்கம் நடத்திய மறைந்த வகவம் ஸ்தாபக பொதுச் செயலாளர் கவிஞர் கவின்கமல் ஞாபகார்த்த சர்வதேச கவிதைப் போட்டியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 13 ஞாயிறு காலை 10.00 மணி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும். இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்பதிதியாக சுபர் லைட் கார்மண்ட் தலைவர் எஸ். ரவீந்திரன் கலந்து கொள்கிறார்.

வகவம் ஸ்தாபக குழு இயக்கம் தலைவர் டாக்டர் தாஸிம் அகமது தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் இயக்க பொருளாளர் டாக்டர் எம். எச். நூர்தீன் வரவேற்புரை நிகழ்த்துவதோடு தமிழ்மாமணி 'அல்அசூமத் ''பரிசுபெற்ற கவிதைகள் ஒரு பார்வை'' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார்.

இதன் போது கவின்கமல் நினைவு மலர்' நூல் வெளியீடு 'இடம்பெற உள்ளதோடு இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் முதற்பிரதி பெறுவார். இந்த நிகழ்வில் கவிஞர் முல்லை முஸ்ரிபா கௌரவிக்கப்பட இருப்பதோடு மேமன்கவி பாராட்டுரை நிகழ்த்துவார். இது தவிர டாக்டர் தி.ஞானசேகரன் (பிரதம ஆசிரியர், ''ஞானம்'') திருமதி வசந்தி தயாபரன்; (செயலாளர், தகவம்) ஆகியோர் கருத்துரைகள் நிகழ்த்த இருப்பதோடு கலைக்கமலின் நன்றியுரையும் இடம்பெறும்.

இராஜதந்திர உறவுகள், மீனவர் வாழ்வாதாரம்;

கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு பாதிப்பில்லாத வகையில் தீர்வு

யாழ். கடற்றொழிலாளர் சம்மேளன தலைவர் வலியுறுத்து

இலங்கை – இந்திய இராஜதந்திர உறவுகளைப் பாதிக்காத வகையில் இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்ட விரோதச் செயற்பாடுகள் தொடர்பான விவகாரம் தீர்க்கப்பட்டு தமது வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அ. அன்னராசா, தென்னிலங்கை கடற்றொழிலாளர்களின் ஒத்துழைப்பினையும் கோரியுள்ளார்.

கொழும்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற தேசிய கடற்றொழிலாளர் மஹா சம்மேளனத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், கடந்த கால யுத்தம் காரணமாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் நாட்டின் ஏனைய பிரதேச கடற்றொழிலாளர்களுடன் ஒப்பிடுகின்ற போது பின்தங்கிய தொழில் முறைகளையே பின்பற்றி வருகின்ற நிலையில், வடக்கு கடற்றொழிலாளர்கள்

06

நிலைபேறான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்காக

நாடளாவிய ரீதியில் மொபிடெல் மரநடுகை திட்டம் ஆரம்பம்

SLT MOBITEL, நாடளாவிய ரீதியில் "நாடு முழுவதிலும் சுவாசமும் உரமும் பயிரிடுவோம்" எனும் மர நடுகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. காற்றின் தரத்தை மேம்படுத்தவும், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை குறைப்பதில் பங்களிப்பு வழங்கும் வகையிலும் நிலைபேறான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான உறுதியான அர்ப்பணிப்பாக இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. மொனராகலை, மீயாகல ஸ்ரீமெத் தாராம விகாரையில் இந்தத்திட்டம் அண்மையில் SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ, SLT குழுமபிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLTMOBITEL இன் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் பிராந்தியத்தைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளின் பங்கேற்புடன் ஆரம்பிக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் முதல் அங்கமாக, மீயாகல ஆரம்ப

06

இராணுவத்தின் 13வது குழு லெபனான் பயணம்

லெபனான் ஐக்கிய நாடுகளின் செயலணியின் (UNIFIL) 13 வது குழு புறப்படும் படையினருக்கு வாழ்த்துகள் தெரிவிக்கும் நிகழ்வுகள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இராணுவ பதவி நிலை பிரதானி மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே தலைமையில் இடம்பெற்றது.

10 அதிகாரிகள் மற்றும் 115 சிப்பாய்களை கொண்ட குழுவினர்களில் முதற்கட்டமாக 08 அதிகாரிகள் மற்றும் 67 சிப்பாய்கள் லெபனான் நோக்கி புறப்பட்டனர்.

லெபனான் ஐக்கிய நாடுகளின் இடைக்கால செயலணி (UNIFIL) நடவடிக்கையில் முதன்முறையாக இலங்கை இராணுவ மகளிர் படையணியை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரி ஒருவரும் ஏழு பெண் சிப்பாய்களும் இணைந்து கொண்டமை இக்குழுவின் விசேட அம்சமாகும். இலங்கை சிங்க படையணியின் 12 வது குழுவினர் தற்போது இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் சிறப்பாக செயல்பட்டமைக்காக பாராட்டப்பட்டுள்ளனர்.

காணாமல் போன மாலைதீவு மாணவன் சடலமாக மீட்பு

காணாமல் போனதாக கூறப்பட்ட 24 வயதுடைய மாலைதீவைச் சேர்ந்த மாணவன் சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தை கடற்கரையில் நேற்று கண்டெடுக்கப்பட்ட இரண்டு சடலங்களில் ஒன்று காணாமல் போன மாலைதீவைச் சேர்ந்த மாணவனுடையதென அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹிவளையில் வசித்து வந்த 24 வயதுடைய இளைஞன் வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக மாலைதீவு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந் நிலையில் வெள்ளவத்தை பகுதியில் நேற்று கண்டெடுக்கப்பட்ட இரு சடலங்களில் ஒன்று மாலைதீவு பிரஜையுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மற்றைய சடலத்தை இதுவரை பொலிஸார் அடையாளம் காணாத நிலையில், இது தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தினகரன்
THINAKARAN
நிகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 25ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 05

குறள் தரும் சிந்தனை

அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி

நெறியற்றவர்களை ஒரு பணிக்குத் தேர்வு செய்வது கூடாது. அவர்கள் உலகத்தைப் பற்றிக் கவலைப்படாமல், பழிக்கு நாணாமல் செயல்படுவார்கள்.

கொவிட் சவால் மிகுந்த சூழலில் மக்கள் முன்பாகவுள்ள பொறுப்பு

உலகுக்கு பெரும் சவாலாக விளங்கிக் கொண்டிருக்கும் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தையும் பாதிப்புகளையும் பல மிழக்கச் செய்வதில் கொவிட் 19 தடுப்பூசி முக்கிய பங்காற்றி வருகின்றது. இதன் பயனாக இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளும் தாக்கங்களும் பெரிதும் குறைவடைந்துள்ளதோடு உயிராபத்து அச்சுறுத்தலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன் விளைவாக இத்தொற்று தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்பட்ட அச்சம், பீதி பெரிதும் குறைவடைந்துள்ளது. அதிலும் இத்தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளவர்கள் மத்தியில் கொவிட் 19 தொற்றின் அச்சுறுத்தல் தொடர்பில் அலட்டிக் கொள்ளாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கொவிட் 19 தொற்றின் தாக்கத்தையும் பாதிப்புகளையும் கட்டுப்படுத்துவதற்கு பெரும் பங்களிப்பை நல்கி வரும் இத்தடுப்பூசியின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள ஒவ்வொரு நாடும் அதனைத் தம் பிரஜைகளுக்கு பெற்றுக் கொடுப்பதில் அதிக கவனம் எடுத்துக் கொள்கின்றது.

அந்த வகையில் இலங்கை, தம் பிரஜைகளில் பெரும் பகுதியினருக்கு இத்தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் ஏற்கனவே பெற்றுக் கொடுத்துள்ளது. இதன் பயனாக கொவிட் 19 தொற்றின் தாக்கமும் பாதிப்புகளும் மாத்திரமல்லாமல் உயிரிழப்புகளும் கூட பெரிதும் குறைவடைந்துள்ளன. இந்த நிலையில் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அத்தடுப்பூசியையும் கணிசமான தொகையினர் இற்றை வரையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஆனால் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிக்கு எதிராக முன்னெடுக்கப்படுவது போன்ற எதிர்ப் பிரசாரங்கள் பூஸ்டர் தடுப்பூசி தொடர்பாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றைப் பொருட்படுத்தாமல் பெரும்பாலானவர்கள் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்கின்றனர். இத்தடுப்பூசியின் பிரதிபலன்களை அறிந்து கொள்ளும் எவரும் அதனைப் பெற்றுக் கொள்ளாது இருக்க மாட்டார்கள்.

அதேநேரம், அதிகாரம் உள்ள அதிகாரிகளினால் விடுவிக்கப்பட்டுள்ள நபர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து நபர்களும் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் இந்நாட்டின் விதிமுறையாகும். பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உடலில் கொவிட் 19 தொற்றுக்கு எதிரான நோயெதிர்ப்பு சக்தி மேலும் பலமடையும் என்று மருத்துவ நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தச் சூழலில் கொவிட் 19 தடுப்பூசி தொடர்பில் புதிய விதிமுறைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு இலங்கை சுகாதார அமைச்சு தீர்மானம் எடுத்திருக்கின்றது. இத்தீர்மானம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் முதலிரு டோஸ்களையும் பூஸ்டர் டோஸையும் பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்துவதற்கான தடுப்பூசி அட்டை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மூன்று தடுப்பூசியையும் பெற்றுக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான தடுப்பூசி அட்டையைக் கொண்டிராதவர்கள் பொது இடங்களுக்கு செல்லவோ பொதுப் போக்குவரத்தில் பயணிக்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இங்கு 'பொது இடங்கள்' என சுகாதார அமைச்சு வரையறுத்திருப்பவை, கட்டணம் செலுத்திய மற்றும் கட்டணம் செலுத்தாத இடங்கள், அழைப்பிதழ் மற்றும் அழைப்பிதழ் இல்லாத இடங்கள் ஆகியனவாகும். அவ்வாறான இடங்களுக்கு செல்லவும் பொதுப்போக்குவரத்தில் பயணிக்கவும் இந்த தடுப்பூசி அட்டை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு 'நடைமுறையிலுள்ள சுகாதார வழிகாட்டல்களை முறையாகக் கடைப்பிடிக்காமல் அவற்றை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ள இவ்வர்த்தமானி அறிவித்தல் அதன் கட்டளைகள், விதிவிலக்குகள் காரணமாக இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் மற்றும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வயதினர் அல்லாதோர் போன்றோருக்கு பொருந்தாது' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசியின் பிரதிபலன்களை மக்களால் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. அதனால் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதிலும் சுகாதார வழிகாட்டல்களை ஒழுங்கு முறையாகக் கடைப்பிடிப்பதிலும் அதிக கவனம் செலுத்தப்படுவது அவசியம்.

ஆகவே கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் மூன்று டோஸ்களையும் பெற்றுக் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கான தடுப்பூசி அட்டையைக் கட்டாயப்படுத்தும் விதிவிலக்கு நடைமுறைக்கு வர முன்னர் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் பொதுஇடங்களுக்குச் செல்லவும் பொதுப் போக்குவரத்தில் பயணிக்கவும் முடியாத நிலைமை ஏற்படும். அத்தோடு அடிப்படை சுகாதார வழிகாட்டல்களை முறையாகக் கடைப்பிடிக்கவும் தவறக் கூடாது.

editor.tkn@lakehouse.lk

இருநாட்டு மீனவர் மோதலில் குளிர்காயும் சில தரப்புகள்!

தொப்புள்கொடி உறவு பற்றி பேசும் தமிழ்த் தலைமைகள் மௌனம் காப்பது ஏன்?

தமிழகத்திலுள்ள தமிழர்கள் எமது 'தொப்புள்கொடி உறவுகள்' எனக் கூறும் தமிழ் தேசியம் பேசுகின்ற வடக்கு, கிழக்கு அரசியல் தமிழ்த் தலைமைகள் எவருமே அண்மைக் காலமாக இடம்பெற்று வருகின்ற தமிழக_ இலங்கை மீனவர்கள் மோதிக் கொள்ளும் விடயத்தில் வாய் திறக்காது மௌனம் காப்பது சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, இலங்கை தமிழர் விடயம் தொடர்பாக கவனம் செலுத்துமாறு கோரி தயாரித்து அனுப்பிய ஆவணத்திற்கு உந்துசக்தியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நாடகமாகவே அண்மைக் கால மீனவர் மோதல் சம்பவங்கள் அமைந்துள்ளனவோ எனும் சந்தேகம் எழுவதில் நியாயம் உள்ளது.

இந்திய இலங்கை மீனவர்கள் கடற்பிராந்தியத்தில் மோதிக் கொள்ளும் விடயம் இன்று நேற்று எழுந்த ஒரு பிரச்சினை அல்ல. கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் செயலில் இரு தரப்பினருமே ஈடுபட்டு கைதாகி, அவர்களது வள்ளங்கள், படகுகள் கைப்பற்றப்படும் சம்பவங்கள் இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்றன.

யுத்தகாலத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மீனவர்கள் தமது கடல் பிராந்தியத்தில் ஒரு குறிக்கப்பட்ட தூரத்திற்கு அப்பால் சென்று மீன்பிடிக்க முடியாத நிலைமை காணப்பட்டது. அவ்வாறு செல்லும் மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக மீதமாக இருந்த இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களது வருகை யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் சுதந்திரமாகவும் தாராளமாகவும் காணப்பட்டது.

இலங்கை கடற்படையினர் அவ்வப்போது இலங்கை கடல் எல்லைக்குள் மீறி வருகின்ற இந்திய மீனவர்கள் மீது சிறுசிறு தாக்குதல்களை நடத்தியதும், அவர்களது வளங்களை விரட்டி அடித்தமையும் வரலாற்றுப் பதிவுகளில் உள்ளன. ஆனால் யுத்தம் முடிந்து நிலைமை வழமைக்கு திரும்பியதும் இலங்கை மீனவர்கள் தமது கடற் பிராந்தியத்தில் சுதந்திரமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட பின்னர் இந்திய மீனவர்களுக்கு அது ஒரு தடங்கலான செயலாக அமைந்துள்ளது.

தமிழக மீனவர்கள் சுதந்திரமாக ரோலர் படகுகள் மற்றும் இழுவைப்படகுகள் மூலம் இலங்கை கடல் எல்லைக்குள் வந்து நமது நாட்டு மீன் வளங்களை சூறையாடி மீன்பிடித்த செயற்பாடுகளை இலங்கை மீனவர்கள் முடக்கி விட்டனர். இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் தற்போது இரு தரப்பு மீனவர்களுக்குமிடையே மோதல் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன என்றும் கூறலாம். இவற்றை தடுத்து நிறுத்த இரு நாட்டு அரசாங்கங்களும் எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டன. இரு நாட்டு மீனவ சமூகங்களும் பல்வேறு முயற்சிகளை எடுத்தன. ஆனால் அவை எவற்றாலும் இரு தரப்பு மோதலையும் இன்றுவரை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை.

இன்றுவரை முடிவுக்கு கொண்டு வர முடியாத மீனவர் மோதல் பின்னணியில் அரசியல் காய்நகர்த்தல்கள் ஏதேனும் உள்ளதோ எனும் சந்தேகம் எழுவதில் நியாயம் உள்ளது.

அவர் இலங்கை மீனவர்களுக்கு சார்பாக எத்தனையோ கருத்துகளை முன்வைத்துள்ளார். 'ஆயிரம் படகுகளுடன் சென்று நடுக்கடலில் இந்திய மீனவர்களுக்கு பாடம் புகட்டுவோம்' என்று கூட அவர் இலங்கை மீனவர்களுக்கு அழைப்பு விடுத்து உறுதியளித்திருந்தார். ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் இது தொடர்பாக பேச்சுக்களையும் நடத்தி இருக்கின்றார். ஆனால் இது தொடர்பாக இந்தியத் தரப்பிலிருந்து சாதகமான சமிக்ஞை எதுவும் வரவில்லை என்றே கூற வேண்டியுள்ளது.

அதேசமயம் அமைச்சரது முயற்சிகளுக்கு செவிசாய்க்காது இலங்கை மீனவர்களும் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். இந்நிலையில் இந்த போராட்டங்களின் பின்னணியில் அரசியல் காய்நகர்த்தல்கள் உள்ளனவா என்ற சந்தேகம் எழுவதில் நியாயம் உள்ளது. அதனை விடவும் பிரதான காரணமாக இந்த இரு தரப்பு மீனவர்கள் மோதிக் கொள்ளும் விடயத்தில் இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

அமைவது என்னவெனில், இந்த 'தொப்புள் கொடி உறவுகள்' பற்றி அடிக்கடி அறிக்கை விட்டு பேட்டிகள் கொடுத்து வரும் தமிழ் தேசியம் பேசுகின்ற வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் தலைமைகள் மௌனம் காப்பது ஏன்?

இந்திய அரசின் கவனத்தை தமது பக்கம் திருப்புவதற்காக தமிழ் அரசியல் தலைமைகள் இந்த விடயத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்துகின்றனவா எனும் சந்தேகமும் உள்ளது. உண்மையில் அவர்கள் மீனவர்களை மோதவிடும் செயலை செய்வார்களேயானால் அதனை விடவும் துரோகத்தனமான செயல் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

இரு நாட்டு மீனவர்களுமே தமது அன்றாட வாழ்வாதாரத்திற்காக தொழில்ரீதியாக மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார்கள். இரு நாட்டிலுமே அவர்களை நம்பி பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்களது எதிர்கால வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அரசியல் தலைமைகள் ஒருபோதும் ஈடுபடக் கூடாது.

இலங்கையில் கடற்றொழில் அமைச்சராக இந்த அரசாங்கத்தில் டக்ளஸ் தேவானந்தா இருக்கின்றார். அதேபோன்று தமிழகத்திலே இலங்கை தமிழர் விடயத்தில் அதிக அக்கறை கொண்டு செயல்படும் முதல்வராக மு.க ஸ்டாலின் இருக்கின்றார்.

எனவே இந்த மீனவர் பிரச்சினையை இரு நாட்டு மத்திய அரசாங்கங்களுக்கு கொண்டு செல்ல வேண்டிய தேவை இல்லாமலேயே தமக்குள் பேசி முடிக்கக் கூடிய ஒரு சூழல் இருக்கின்றது. அதனை இருதரப்பும் சரியாகப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

தமிழ் தேசியம் பேசுகின்ற வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் தலைமைகள் இவ்விடயத்தில் இருநாட்டு மீனவர்களுக்கும் அறிவுரை கூறி அவர்களை முன்னரைப் போன்று தொப்புள் கொடி உறவுகளாக மாற்றி அமைப்பது காலத்தின் தேவையாகும்.

எண்பது வருட காலமாக தொடர்ந்த இசைப்பயணம்

36 மொழிகளில், தேனாக இனித்த பல்லாயிரம் பாடல்கள் தந்த இசைக்குயில் லதா மங்கேஷ்கரின் மறைவினால் ரசிகர்கள் பெருந்துயர்

இந்தியாவின் இசைக்குயில் என அழைக்கப்படும், பிரபல பின்னணி பாடகி லதா மங்கேஷ்கர் நேற்று காலமானார். மும்பையில் உள்ள பிரீச் கேண்டி தனியார் மருத்துவமனையில் சுமார் ஒரு மாத காலமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக்காலை அவரது உயிர் பிரிந்தது. அவருக்கு வயது 92. அவரது மறைவுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள், சினிமா பிரபலங்கள் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அவர் கொரோனா தொற்று காரணமாக கடந்த மாதம் 11ம் திகதி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்தார். அவரது உடல் நிலை தேறி வந்தது. அவருக்கு பொருத்தப்பட்டு இருந்த செயற்கை சுவாசமும் அகற்றப்பட்டது.

ஆனால் திடீரென நேற்றுமுன்தினம் மீண்டும் அவரது உடல்நிலை மோசமடைந்தது. டொக்டர்கள் தீவிர சிகிச்சையளித்து வந்தனர். லதா மங்கேஷ்கரின் சகோதரி ஆஷா போஸ்லே நேரில் வந்து பார்த்துச் சென்றார். நேற்று காலையில் சிகிச்சை பலனலிக்காமல் அவர் உயிரிழந்தார் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கொரோனாவிற்கு பிந்திய சிகிச்சையின் போது பல்வேறு உடல் உறுப்புகள் செயல் இழந்ததால் காலை 8.12 மணிக்கு லதா மங்கேஷ்கர் மரணம் அடைந்ததாக டொக்டர் சந்தானம் தெரிவித்தார். இந்தியாவின் உயரிய விருதான 'பாரத ரத்னா' உட்பட அனைத்து முக்கிய விருதுகளையும் பெற்றுள்ளார் லதா மங்கேஷ்கர்.

பொதுமக்களின் அஞ்சலிக்காக லதா மங்கேஷ்கர் உடல் தாதர் சிவாஜி பார்க்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பொதுமக்களின் அஞ்சலியை தொடர்ந்து நேற்று மாலை இறுதிச்சடங்குகள் நடைபெற்றன.

இந்தியாவின் நைட்டிங்கேலாக கருதப்படும் லதா மங்கேஷ்கர் 1929 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 ஆம் திகதி பிறந்தார். லதா மங்கேஷ்கர் தனது தந்தையிடம் இளம் வயதிலேயே இசை கற்றுக் கொண்டார். கடந்த 1942 ஆம் ஆண்டு முதன் முதலாக 'கிதி ஹசால்' என்ற மராத்தி பாடலைப் பாடினார். அதே ஆண்டில் அவருடைய தந்தையும் இறந்து விடவே குடும்பம் கடுமையான நிதி நெருக்கடிக்குள்ளானது.

அந்த நேரத்தில் இசையமைப்பாளர் குலாம் ஹைதர் என்பவர் 'மஜ்பூர்' என்ற திரைப்படத்தில் பாட வாய்ப்பு அளித்தார். இது அவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது எனலாம். இதனைத் தொடர்ந்து வந்த 'மகால்', 'அந்தாஸ்', 'பர்சாத்', 'துலாரி' போன்ற படங்கள் இவருக்கு பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தன.

தந்தை இறந்த பிறகு மும்பை வந்த லதா மங்கேஷ்கர் 80 ஆண்டுகளாக இசைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். 1942 முதல் சினிமா துறையில் பாடத் தொடங்கிய அவர் அனில் பிஸ்வாஸ், ஷங்கர் ஜெய்கிஷன், நவ்ஷத், எஸ்.டி. பர்மன், சி. ராம் சந்த்ரா, ஹேமந்த் குமார், சலீம் சவ்திரி, கய்யாம், ரவி, சஜ்ஜத் ஹுசைன், ரோஷன், கல்யாண்ஜி, ஆனந்த்ஜி, வசந்த் தேசாய், சுதிர் பாட்கே, ஹன்ஸ்ராஜ் பெல், மதன் மோகன், மற்றும் உஷா கன்னா, ராகுல் தேவ் பர்மன், ராஜேஷ் ரோஷன், அனு மாலிக், ஆனந்த் மிலிந்த், ஷிவ் ஹரி, ராம் லட்சுமண், ஏ.ஆர் ரஹ்மான், இளையராஜா என சுமார் எல்லா இசையமைப்பாளர்களின் இசையில் பாடியுள்ளார்.

36 பிராந்திய மொழிகளில் பல்லாயிரம் பாடல்களை பாடியிருக்கும் லதா மங்கேஷ்கர் திருமணமே செய்து கொள்ளாமல் இசைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தமிழில் இளையராஜா இசையில் கமல்ஹாசன் நடித்த சத்யா படத்தில் 'வளையோசை' பாடல் மிகப் பிரபலமானது.

1974 ஆம் ஆண்டு அதிக பாடல்களை பாடியதற்காக கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த லதா மங்கேஷ்கருக்கு அவரின் 90வது வயதில் 'இந்திய மகள்' விருதை கொடுத்து மத்திய அரசு கௌரவித்தது.

லதா மங்கேஷ்கர் மறைவையடுத்து நாடு முழுவதும் நேற்றும் இன்றும் 2 நாட்கள் தேசிய துக்க தினமாக அனுசரிக்கப்படுகிறது. நாடு முழுவதும் இரு நாட்களுக்கு தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்படுகிறது. அரசு மரியாதையுடன் நேற்று இறுதிச்சடங்கு நடைபெற்றது.

இந்தியாவினால் 29 வருடங்களாக தேடப்பட்டு வந்த அபூபக்கர் கைது!



மும்பையில் 257 பேரை பலி கொண்ட தொடர் குண்டுவெடிப்பை நடத்திய சூத்திரதாரியான அபூபக்கர் 29 வருடங்களுக்குப் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய பொலிசார் தெரிவித்தனர். இந்தியாவினால் நீண்ட காலமாகத் தேடப்பட்டு வருகின்ற பிரபல தாதாவான தாவூத் இப்ராஹிமின் சகாவான அபூபக்கர் வளைகுடா நாடான ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மும்பையில் 1993 ஆம் ஆண்டு நடந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தில் 257 பேர் உயிரிழந்தனர். 700க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். உலகத்தையே உலுக்கிய இந்த வெடிகுண்டுத் தாக்குதலை நடத்திய தாவூத் இப்ராஹிம் தற்போது பாகிஸ்தானில் தலைமறைவாக இருக்கிறார். அவருக்கு பாகிஸ்தான் அடைக்கலம் கொடுத்து வருவதாக இந்திய தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது. தாவூத் இப்ராஹிமுடன் சேர்ந்து வெடிகுண்டை வெடிக்கச் செய்த அவனுடைய சகாக்கள் பாகிஸ்தான் மற்றும் வளைகுடா நாடுகளில் மறைந்து வாழ்கின்றனர்.

இந்தக் குண்டுவெடிப்பு சம்பவத்தில் தாவூத் இப்ராஹிமுடன் சேர்ந்து செயல்பட்ட அபூபக்கர் என்பவர் ஐக்கிய அரேபிய எமிரேட்ஸில் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். அபூபக்கர் பாகிஸ்தானுக்குச் சென்று வெடிகுண்டுகளை எப்படித் தயாரிப்பது, அதை எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்து கற்றுக்கொண்டு வந்தவரென்று இந்திய பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு மும்பை தொடர் வெடிகுண்டுத் தாக்குதலுக்குத் தேவையான ஆர்.டி.எஸ் வெடிமருந்துகளை பாகிஸ்தானிலிருந்து கொண்டு வரவும் அபூபக்கர் முக்கிய காரணமாக இருந்து செயல்பட்டார் என்று இந்திய மத்திய உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மும்பை குண்டுவெடிப்பு வழக்கில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் அபூபக்கர், ஐக்கிய அரேபிய எமிரேட்ஸில் தங்கியிருப்பதை இந்திய உளவுத்துறை சமீபத்தில் தெரிந்து கொண்டு அந்த நாட்டுக்குத் தகவல் கொடுத்தது.

இதையடுத்து அபூபக்கர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இதற்கு முன்பும் அவர் 2019 ஆம் ஆண்டில் இதே நாட்டில் கைது செய்யப்பட்டார். ஆனால், முறையான ஆவணங்கள் இல்லாத காரணத்தால் அப்போது தப்பி விட்டார். இந்தியாவில் மிகவும் தேடப்படும் குற்றவாளியாகக் கருதப்படும் அபூபக்கரை 29 ஆண்டுகளாக சி.பி.ஐ தேடி வந்தது. தற்போது கைது செய்யப்பட்டுள்ள அபூபக்கரை இந்தியாவுக்கு நாடு கடத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அபூபக்கரின் உண்மையான பெயர் அபூபக்கர் அப்துல் கஃபார் ஷேக். தாவூத் இப்ராஹிமின் நெருங்கிய சகாவான அபூபக்கர், தாவூத்தின் சகாவான முஸ்தாபா தோஷா என்பவருடன் சேர்ந்து வளைகுடா நாடுகளிலிருந்து தங்கம், எலெக்ட் ரோனிக்ஸ் போன்ற பொருள்களை மும்பைக்குக் கடத்தி வரும் தொழில் செய்து வந்தார். இந்தியாவிலிருந்து தப்பிச் சென்ற பிறகு பாகிஸ்தான் மற்றும் துபாயில் மாறி மாறி வசித்து வந்த அபூபக்கர், ஈரான் பெண் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டு துபாயில் தொழில் செய்து வந்தார். அவரைக் கைது செய்ய 1997 ஆம் ஆண்டு சிவப்பு எச்சரிக்கை நோட்டீஸ் விடப்பட்டது. மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் யாகூப் மேமன் என்பவருக்கு மட்டும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அபு சலேம் என்பவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ரத சப்தமி

தட்சிணாயன காலத்தில் தெற்கு நோக்கி பயணிக்கும் சூரிய பகவான், உத்திராயனம் தொடங்கும் தை மாதம் முதல் நாளில் வடக்கு நோக்கி திரும்புவார். அதனால்தான் தை முதல் நாளில் அவருக்கு பொங்கல் வைத்து வழிபாடு செய்கிறோம்.

தை முதல் நாளில் வடக்கு நோக்கி பயணிக்கத் தொடங்கினாலும், ஏழாவது நாளான சப்தமி தினத்தன்றுதான், அவரது 7 குதிரை பூட்டிய தேர், முழுமையாக வடக்கு நோக்கி திரும்புகிறதாம்.

எனவேதான் தை மாதம் வரும் சப்தமி திதியானது, 'ரத சப்தமி' என்று அழைக்கப்படுகிறது.

சப்த ரிஷிகளில் முக்கியமானவர், காசியபர். இவருக்கு பல மனைவியர் உண்டு. அவர்களில் ஒருத்தியான அதிதி, கர்ப்பவதியாக இருந்தாள். அப்போது ஒரு நாள் வாசலில் சத்தம் கேட்டு, வெளியே வந்து பார்த்தாள்.

அவளது இல்லத்தின் முன்பாக முதியவர் ஒருவர், யாசகம் கேட்டு நின்று கொண்டிருந்தார்.

உணவு எடுத்துவருவதாகக் கூறிச் சென்ற அதிதி, கர்ப்ப அவதி காரணமாக மெதுவாக நடந்து சென்று உணவை எடுத்து வந்தாள். இதனால் தாமதம் உண்டானது.

அப்போது அந்த யாசகர், "ஏன் இவ்வளவு தாமதம். நீ என்னை அவமதித்து விட்டாய். உன் வயிற்றில் வளரும் பிள்ளை, இறந்து போகும்" என்று சபித்தார். இதனால் பதறிப்போன அதிதி, இதுபற்றி தனது கணவர் காசியபரிடம் கூறினாள்.

அவரோ "நீ வீணாக பதற்றம் கொள்ள வேண்டாம். அமிர்த உலகத்தில் இருந்து அழிவே இல்லாத ஒரு மகன் நமக்கு கிடைப்பான்" என்றார்.

அந்த வாழ்த்தின்படி பிரகாசமான ஒளியோடு பிறந்தவர்தான், சூரிய பகவான். ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில், உலகை வலம் வந்து உலக உயிர்களை காப்பதால், திதிகளில் ஏதாவது திதியான சப்தமி நாளில் இவரை நினைத்து விரதம் இருப்பது சிறப்புக்குரியது.

அதிலும் ரத சப்தமி அன்று விரதம் கடைப்பிடிப்பது, நமக்கு பல்வேறு பலன்களைப் பெற்றுத்தரும்.

சைவ மஞ்சரி

மானுடவியல் (தொடர்)

கண்ணப்ப நாயனார்

59

அந்தத்திண்ணனார் வேட்டைக் கோலங்கொண்டு வேடர்களோடும் வனத்திலே சென்று வேட்டையாடினார், வேட்டையாடும்பொழுது, ஒரு பன்றியானது வேடராலே கட்டப்பட்ட வலையறும்படி எழுந்து, மிகுந்த விசையுடனே ஓடியது. அதைக் கண்ட திண்ணனார் அதைக்கொல்ல நினைந்து, அதைத் தொடர்ந்து பிடிக்கத்தக்க விசையுடனே அது செல்லும் அடிவழியே சென்றார்.

"நாணன்" மற்றும் "காடன்" என்கின்ற இரண்டு வேடர்கண்மாத்திரம் அவருக்குப் பின் ஓடினார்கள். அந்தப்பன்றி நெடுந்தூரம் ஓடிப்போய், இளைப்பினாலே மலைச்சாரலிலே ஒருமரத்தின் நிழலிலே நின்றது. திண்ணனார் அதைக் கண்டு அதனைச் சமீபித்து, உடைவாளை யுருவி அதனை இருதுண்டாகும்படி குத்தினார்.

நாணனும் காடனும் இறந்துகிடந்த அந்தப் பன்றியைக் கண்டு திண்ணனாரை வியந்து வணங்கி, "நெடுந்தூரம் நடந்து வந்த படியால் பசி நம்மை மிகவருத்துகின்றது. நாம் இந்தப் பன்றியை நெருப்பிலே காய்ச்சித் தின்று, தண்ணீர் குடித்துக் கொண்டு வேட்டைக்காட்டுக்கு மெல்லப்போவாம்" என்றார்கள்.

திண்ணனார் அவர்களை நோக்கி, "இவ்வனத்திலே தண்ணீர் எங்கே இருக்கின்றது" என்று கேட்டார்.

நாணன் "அந்தத் தேக்கமரத்துக்கு அப்புறம் போனால், மலைப்பக்கத்திலே பொன்முகலி யாறு ஓடுகின்றது" என்றன்.

அதைக்கேட்ட திண்ணனார் "இந்தப் பன்றியை எடுத்துக் கொண்டு வாருங்கள்; நாம் அங்கே போவோம்" என்றார். மலையே நோக்கி நடந்து, அரைக்காதவழி தூரத்துக்கு அப்பால் இருக்கின்ற திருக்காளத்தி மலையைக் கண்டனர். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

ஸ்ரீ கைலேஸ்வரம் அறநெறி பாடசாலை

மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் தேவாலயத்தில் ஸ்ரீ கைலேஸ்வரம் அறநெறி பாடசாலை அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீகைலாசநாதர் சுவாமி தேவஸ்தான பரிபாலன சபை சார்பில் சி. மகேந்திரன் செட்டியார், த. ஹரிசுதன் மற்றும் ம. உமாதர்ஷன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். அவர்களோடு எமக்கு பெரும் ஒத்துழைப்பை வழங்கிய மருதானை இந்துக்கல்லூரி அதிபர் கே. செல்வகுமார் மற்றும் சக ஆசிரியர்கள், ஆலய முகாமையாளர் க. இராமநாதன், ஆலய பிரதம குருக்கள், யோ. ரஞ்சித குருக்களுடன் தி. விக்னேஸ்வரராஜ சர்மாவும் மேலும் சிறப்பு விருந்தினர்களாக சபையை அலங்கரித்த எஸ். செல்வராஜா, லச்சுதன், எ.டி. நிக்கலஸ் மற்றும் ஸ்ரீ கைலேஸ்வரம் அறநெறி பாடசாலை மன்றத்தினர், அறநெறி பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் இவர்களுடன் அறநெறிப் பாடசாலையில் புதிதாக இணைய வந்திருந்த மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் என அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

திருமதி இராஜேஸ்வரி பத்மநாதனின் தேவாரப் பாடலுடன் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து ஆசியுரை, வாழ்த்துரை மற்றும் இந்து மதத்தில் தற்கால நிலை எனும் தலைப்பில் சிறப்புரையொன்றும் இடம்பெற்றது. அதன் தொடர்ச்சியாக கே. நந்தகுமாரினால் அன்பளிக்கப்பட்ட புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதோடு விண்ணப்பப்படிவமும் விநியோகிக்கப்பட்டது. இறுதியாக நன்றியுரையைத் தொடர்ந்து தேவார பாடலுடன் இனிதே நிறைவுற்றது.

இவ் அறநெறி பாடசாலை ஆரம்பித்தமைக்கான முக்கிய நோக்கமானது சிறந்த எண்ணம், சிந்தனை, பகுத்தறிவு, பண்பு, தர்மம், நீதி மற்றும் நல்லொழுக்கம் கொண்ட சமுதாயத்தை கட்டியெழுப்புவதேயாகும். அதனை நாம் சிறார்களிடமிருந்தே ஆரம்பிக்க முடியும். இவ் அறநெறி கல்வியானது இந்து இளம் சிறார்களுக்கு அவர்கள் மனம் ஏற்கின்ற சிறு பருவத்திலேயே வாழ்வின் உயரிய மதிப்பீடுகள், நற்பழக்கங்கள், சிந்தனைகள், நற்பண்புகள் போன்றவற்றை வளர்ப்பதற்கும் அவர்களை நீதி நெறியின் வழி செல்வதற்கும் உதவுகிறது.

எமது வேண்டுகோளாக குறிப்பாக பெற்றோர்களுக்கு நாம் இங்கே கூறிக்கொள்ள விரும்புவது யாதெனில் எமது பாரம்பரிய பெருமைகளை காத்து இளம் சந்ததியினரிடம் ஒப்படைக்க வேண்டிய கடப்பாடு எம் அனைவருக்கும் உள்ளது. ஆகையால் அதனை உணர்ந்து உங்களது பிள்ளை

திருமதி சிந்தூரி பத்மராஜ் ...

களைஅறநெறிக் கல்வியில் இணைத்து அவர்களது ஆர்வத்திற்கு ஊக்கமளிக்கு மாறு அன்புடனும், ஆதங்கத்துடனும் கேட்டுக்கொள்கிறோம்.

மருதானை இந்துக் கல்லூரியில் நடைபெறும் ஸ்ரீ கைலேஸ்வரம் அறநெறி பாடசாலையானது ஞாயிறுதோறும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். சிறந்த ஆசிரியர் குழாமைக் கொண்டு செல்முறை ரீதியான கல்வியை 4 வயது முதல் 18 வயது வரையான மாணவர்கள் இணைந்து கொள்ளலாம். பாடசாலை சமயபாட வகுப்புக்கள் இலவசமாக கற்பிக்கப்படுவதுடன் யோகாசன வகுப்புக்களும் இலவசமாக கற்றுத்தரப்படும். சர்வதேச பாடசாலை மாணவர்களும் இந்த அறநெறிப் பாடசாலையில் இணைந்துகொள்ளலாம்.

இத்தருணத்தில் இவ் அறநெறி பாடசாலையில் கற்கையை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்பாடு செய்து தந்து தவிய மருதானை இந்துக்கல்லூரி அதிபர் கே. செல்வகுமாருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அறநெறி அறிவுநொடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

1872) கருவறையில் திரை போடும் போது சந்நிதியை தரிசனம் செய்வதோ சுற்றி வலம் வருவதோ கூடாதா?

ஆம் கூடாதுதான். ஒருவரை சந்திக்கச் செல்கிறோம். அவர் நம்மை சந்தித்துப்பேசும் நிலையில் விழித்துக் கொண்டிருந்தால் தானே சந்திப்பு என்பது நிகழும். அதுபோலத் தான் திரைப்போடப்பட்ட சந்நிதியும்! அப்போது தரிசிப்பது வலம் வருவது போன்றவை செய்யக் கூடாது.

இது போன்ற சமயங்களில் விமான கோபுரங்கள் உள்ளன. அவற்றை தரிசித்தாலே சுவாமி தரிசன பலம் கிட்டும்.

1873) திருமாங்கல்யத்தில் "சிவாயநம" என எழுதி வழங்கலாமா?

திருமாங்கல்யம் என்பது பரம்பரை பரம்பரையாக பழக்கத்தில் செய்து வருகிற ஒன்று. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு மாதிரி அமைந்துள்ளது. நம் குடும்பத்துப் பெரியவர்கள் கூறும் முறைப்படி செய்வது தான் நல்லது. சுவாமி அம்பாள் உருவங்கள் பொறிப்பது தான் வழக்கம். எழுத்துக்கள் எழுதுவது இல்லை.

நாதப் பிரம்ம யோகம் - 05

பிரஞ்சு விலங்கியலாளர் Dr. Vastive Andre விலங்குகளில், மீன்களில், பறவைகளில் இசை எப்படியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றித் தெளிவாக ஆராய்ந்துள்ளார். இந்த முடிவுகளின் படி இசை ஒவ்வொரு உயிரினத்தினதும் மூளை, உளவியல் என்பவற்றில் பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. மெல்லிசை விலங்குகளினதும் பறவைகளினதும் மூளையில் ஒருவித இனிமையான உணர்வினை உருவாக்கி உடலில் ஆற்றலைத் தூண்டுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதேபோல் இயற்கையானஅதிர்விற்கு அப்பாற்பட்ட அதிர்வுகளைப் பாவிக்கும் போது அவை உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பினை ஏற்படுத்துவது அறியப்பட்டுள்ளது. ஊது குழல் மூலம் உருவாக்கப்படும் ஒலியின் மூலம் பல்வேறு வகையான பற்றீரியாக்கள் கொல்லப்படுவது அறியப்பட்டுள்ளது. ஜேர்மானிய அறிவியலாளர்கள் ஒரு சில பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் உரியதகுந்த இசை எது என்பதைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்கள். இசையைப் பாவித்து விலங்குகளின் உணர்வுகளைக் தற்காலிகமாக கட்டுப்படுத்தலாம் என்று கண்டுபிடித்துள்ளார்கள். இதன் மூலம் பயங்கரமான விலங்குகளை முகாமைத்துவம் செய்யமுடியும் என்று நம்புகிறார்கள்.

இசை என்பது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குரிய மிக உகந்த வழியாகும். வார்த்தைகள் இல்லாமல் குறித்த தாளக் கட்டினை ஏற்படுத்துவதன் மூலம் உணர்ச்சிகளை மனதில் ஏற்படுத்த முடியும். வார்த்தைகளோ, மொழியோ இல்லாமல் இசையின் மூலம் உணர்ச்சிகளைத் தூண்டமுடியும். இசை உணர்ச்சிகளைத் துண்டுகிறது. இது நன்கு அனைவராலும் உணரப்பட்ட, அறியப்பட்ட ஒன்று. மெல்லிசை ஏதாவது துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் ஒருவருக்கு மன உடல் சோர்வினை நீக்கும் வல்லமை உடையது.

மகா கவி ஹோமர் 'மனச் சோர்விற்குரிய மருந்து வெளிப்படையாக அழுவதிலோ, உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதிலோ அல்லது மெல்லிசையிலோ இருக்கிறது' என்கிறார்.

புராதன இந்திய இசை நூலான சங்கீத பாரி ஜாதம் இப்படிக் கூறுகிறது ஒருவன் இறை நாமத்தை ஒரு தாளத்துடனும், சுரத்துடனும் பாடும் போது அது ஸாமகானம் எனப்படுகிறது.

கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் இசையின் மிக உயர்ந்த விளைவுகள் பற்றிக் கண்டுபிடித்துள்ளார். அவரது கருத்துப்படி 'இசையின் தோற்றுவாய் மனிதனின் சாதாரண மனதிற்கு அப்பால் இருந்து அதி மனிததளத்திலிருந்து வருகிறது.

அதனால் மனிதனுடைய உணர்வினை எல்லாத் துன்பங்களிலிருந்து, வழமையாக உலகியல் செய்கைகளிலிருந்து விடுபடச் செய்யும் ஆற்றல் இசைக்கு உண்டு. கேட்பவர், பாடுபவர் இருவரது உணர்வினையும் அழகியல் தளத்திற்கு உயர்த்தி இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றம், மற்றும் இருப்பின் வரை மனித உணர்வைக் கொண்டு செல்லும் ஆற்றல் இசைக்கு உண்டு.

(தொடரும்)

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

உடப்பு தமிழ் கிராமத்தில் தைப்பொங்கல் நிகழ்வு 2,3ந் திகதிகளில் உடப்பு ஆலய முற்ற வெளி மற்றும், அறுவாய் பகுதிகளில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இளைஞர் சம்மேளனத்தின் ஆதரவுடன் இடம்பெற்ற இவ்விழாவில் இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த, ஆராய்ச்சிக் கட்டு பிரதேச சபைத் தலைவர் க.தெட்சணாமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டார்கள். பின்னர் விஷேட பூஜைகளிலும் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(படம்: உடப்பு குறூப் நிருபர்)

மேற்பார்வை மூலமே...

(03ஆம் பக்கத் தொடர்)

அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இந்த கலந்துரையாடலில் ஊடக சட்ட மன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளும் முன்வைக் கப்பட்டது. அமைச்சர் மேலும் தெரிவிக் கையில்...

“ஊடகத்திற்கு வரலாற்றில் நம்பகத் தன்மையும் மரியாதையும் அதிகம் என்பது நாம் அனைவரும் அறிந்ததே, ஆனால் அந்த நற்பெயரும் நம்பகத் தன்மையும் இன்று அந்த நம்பகத் தன்மை இருகிறதா?அதில் குறைபாடு ஏற்பட்டுள்ளது.

ஊடகத்துறையில் நமது நம்பகத் தன்மை ஐந்து முக்கிய புள்ளிகளின் கீழ் களங்கம் அடைந்துள்ளது என்று நான் நம்புகிறேன்.ஒன்று முதலாளி யின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாகும். அரச ஊடகங்க ளுக்கு அரசு தான் முதலாளி. இரண்டா வது தீவிர அரசியல்மயமாக்கல், அதை நாம் அனுபவிக்கிறோம்.இது தவிர தனி யுரிமை எல்லைகள் மிகத் தீவிரமான முறையில் மீறப்படுகின்றது.

அடுத்தது , தகவல் சார்ந்தாக அன்றி மனப்பாங்கின் அடிப்படையிலான போலிச் செய்திகளால் மக்கள் ஏமாறுகி றார்கள்.மேலும் தேசியம் மற்றும் மதம் சார்ந்த வெறுப்புப் பேச்சுகளை அடிக்கடி காணுகிறோம்.

.இதில் இருந்து விடுபடுவது எப்படி? இதற்கு தணிக்கைதான் சரியான தீர்வு என்று சிலர் கருத்து தெரிவிக்கின்றனர். அது சரியான தீர்வல்ல என ஊடகத் துறை அமைச்சராகிய நான் நம்புகி றேன். நான் அதை நிராகரிக்கிறேன். ஆனால் எங்களுக்கு ஒருவித மேற் பார்வை அவசியமானது. அதை யாரும் நிராகரிக்க முடியாது என்று நான் நினைக்கிறேன்

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்க ழக கல்வி முறைகளில் ஊடகம் என்ற பாடத்தை நடைமுறைச்சாத்தியமான பாடமாக மாற்றுவது அவசியமாகும். இதற்கு முப்பரிமாண அணுகுமுறையை முன்வைக்க விரும்புகிறோம். முதலில் ஒரு தொழில்சார் பத்திரிக்கையாளரை உருவாக்க வேண்டும். பொறுப்பான பத் திரிகையாளரை எப்படி உருவாக்குவது என்பது இங்கு முக்கியம். அதற்காக பட்டய பத்திரிகையாளர் நிறுவனத்தை ஆரம்பிக்க இருக்கிறோம். இந்த நிறு வனம் பயிற்சி மற்றும் தொழில்சார் சூழல், தொழில்முறை கண்ணியம் என் பவற்றை வழங்கும். பல்கலைக்கழக கட்டமைப்பிற்குள் ஊடகத்துறை ஒரு பாடமாக ஐந்து சிங்களப் பல்கலைக்க ழகங்களிலும், மூன்று தமிழ் மற்றும் ஆங்கிலப் பல்கலைக்கழகங்களிலும், காணப்படுகிறது.. கடந்த வருடம் இரு பத்தி மூவாயிரம் மாணவர்கள் இந்த பாடத்தை ஒரு பாடமாக படித்து கடந்த ஆண்டு பரீட்சைக்கு முகங்கொடுத் தார்கள். எ 3042 பாடசாலைகளில் குறைந்தது 2000 பாடசாலைகளிலா வது சகல ஊடக நிறுவனங்களின் பங் கேற்புடன் ஊடக கழகங்களை உருவாக் வேண்டும். தெரிவு செய்து ஒவ்வொரு மாவட்டத்திலும் இதனை நடைமுறைப் படுத்துவோம் என நம்புகிறோம்... பல்கலைக்கழகத்துக்குள்ளும் பபாடசா லைக்குள்ளும் மாணவர்களுக்கு ஊடக அறிவை வளர்க்க எதிர்பார்க்கிறோம் என்றார்.

நாடளாவிய ரீதியில்...

(03ஆம் பக்கத் தொடர்)

பாடசாலையில் நாட்டிலுப்பை தாவரக் கன்றுகள் நடப்பட்டன. மீயாகலகிராமத் தைச் சேர்ந்தவர்களுக்கு 500 கன்று கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்தத்திட்டம் தொடர்பாக SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், “பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில், நாம்சுவாசிக்கும் காற்றின் தரத்தை மேம்படுத்துவது, காலநிலை மாற்றத் துக்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் எமதுபொதுவான சுகாதாரம் மற்றும் நலனை மேம்படுத்துவது போன்ற வற்றில் பங்களிப்பு வழங்குவதற்கு எம்மை உறுதியாக அர்ப்பணித்துள் ளோம். பசுமையான சூழலுக்காக நாம் எமது நாடளாவிய ரீதியிலான திட்டத்தை ஆரம்பித்துள்ளதுடன், சூழலை பாது காப்பதற்கான எமது அர்ப்பணிப்பை உறுதிசெய்துள்ளோம்.

எம்ஒவ்வொருவராலும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என் பதில் உறுதியான நம்பிக்கை கொண் டுள்ளோம்.” என்றார். SLT MOBITEL இன்சூழல், சமூக மற்றும் ஆளுகை நிகழ்ச்சிகளின் ஒருஅங்கமாக அமைந் துள்ள மரநடுகைத் திட்டத்தினூடாக, வனாந்தரங்களை ஊக்குவித்தல், இயற்கை காபன் சமநிலையை பேணி, பச்சைஇல்லவாயுக்களை குறைத்தல், வளிசுத்திகரிப்புக்கு பங்களிப்பு வழங் கல், உயிரியல் பரம்பலை பாதுகாத்தல், சேதன உரத்தை தயாரித்தல் போன்ற வற்றை இலக்காகக் கொண்டுள்ளது.

IMF உடன் பேச்சு நடத்துவதில்...

சர்வதேச நாணய நிதியமாக இருக்க லாம். சர்வதேச அமைப்புகளாக இருக் கலாம். அவற்றுடன் பேச்சு நடத்துவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. ஆனால், மேற்படி தரப்புகளால் முன் வைக்கப்படும் நிபந்தனைகளே முக்கி யம்.

அவை நாட்டுக்கு எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது பற்றி ஆராய வேண்டும். இறுதியில் நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படாத தேர்வையே நாம் நாட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

மக்களை கொன்று...

(03ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த இடமளிப்பதில்லை . இந்த விடயங்களுக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது. கேஸ் வெடிப்பு விவ காரம் வெளியில் வந்தது போன்று இந்த விடயங்களும் எதிர்காலத்தில் வெளிச் சத்துக்கு வரும். நமது ஜனாதிபதி இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகி றார் . பொலிஸார் சாமர்த்தியமாக அவற் றையெல்லாம் அம்பலப்படுத்துவர். இந்த நாட்டு மக்களின் வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம் என தொழிற் சங்கங்களுக்கு கூறுகின்றோம். இதன் பின்னணியில் முழுமையாக சூழ்ச்சி காணப்படுகிறது. நாங்கள் தேர்தலை எதிர்கொண்டு மக்களின் விருப்பத்திற்கு இடமளிப்போம். மக்களை கொன்று பிணங்களை வைத்து அரசியல் செய்ய முயற்சிக்காதீர்கள். மின்சாரத்தை துண் டித்து அதிகாரத்தைப் பெற முயற்சிக்கா தீர்கள். அவை தவறான செயல்களா கும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் உரையாற்றிய அமைச்சர்,

எவ்வளவு தான் விமர்சித்தாலும் அதனை எதிர்கொள்ளும் வலிமை எங் களிடம் உள்ளது. சில குறைபாடுகள் இருந்தாலும், அவற்றைக் கடந்து முன் னேறும் திறன் நமது அரசுக்கு உள்ளது. எங்களை எளிதில் வீழ்த்த முடியாது.

சில அரசு அதிகாரிகள் தொலைக் காட்சியில் பேசியதை நாம் மறந்துவிட வில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை புத்திசாலித்தனமாக ஆட்சி செய்கிறார். அவரின் புண்ணியத்தில் இன்று உயிருடன் இருக்கிறோம். அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லா செய்திகளும் உண்மையல்ல. எனவே மக்களை ஏமாற வேண்டாம் என்றும் தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்...

(03ஆம் பக்கத் தொடர்)

தம்மை தகவமைத்துக் கொள்வதற்கு ஏனைய பிரதேசத்தவர்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், “கடந்த 2 மாத காலப் பகு தியில் 3 கடற்றொழிலாளர்கள் உயிரி ழந்த நிலையில் அவர்களுக்கான காப்பு றுதிகளை வழங்குவதற்கு கடற்றொழில் அமைச்சு மற்றும் சம்மந்தப்பட்ட தரப் புக்கள் ஒரு பொறிமுறையினை உரு வாக்க வேண்டும்.

அதேபோன்று, கடற்றொழில் சார்பான சட்டங்கள் உருவாக்கப்படு கின்போது, வடக்கு மாகாண கடற்றொ ழிலாளர்களின் சாதக பாதகங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இல்லாத நிலையில் வடக்கு கடற்றொழி லாளர்கள் தேவையற்ற அசௌகரியங் களை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

2022 ஆம் இண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக பல்வேறு விடயங்கள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமையினால், அவை வடக்கு கடற்றொழிலாளர்கள் பூரண நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் அமைய வேண்டும்” எனவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக இந்தியக் கடற்றொழிலா ளர்களின் அத்துமீறி எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் முறைகளில் ஈடுபடுவதனால் வடக்கு கடற்றொழிலா ளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக்கூறிய சமாசத் தலைவர், இராஜதந்திர ரீதியாக அணுகி அதனை விரைவில் தீர்ப்பதற்கு கடற் றொழில் அமைச்சு உரிய நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும் எனவும் தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் அதற்கான தார்மீக ஆதரவினை தமக்கு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

தடுப்பூசி போடாதவர்கள் இனி பொது...

எதிராக கடுமையான சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. 'பொது இடங்கள்' மற்றும் 'முழு தடுப்பூசி' பற்றிய வரையறைகள் பின்னர் அறிவிக்கப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைக்கு ஆதரவளிக்கும்...

திறன் கொண்ட நாடுகளின் செயல் திறன் மதிப்பாய்வுக் கூட்டத்தை நடத்தி னேன் . கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்ட பொருளாதார மன்றத் கூட்டத்திலும் பங் கேற்றேன் என்று குறிப்பிட்டுள்ள அவர், இலங்கைக்கு ஒத்துழைக்க கடமைப் பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (பா)

முன்னாள் எம்.பிக்கள்...

செலுத்தாத முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டு பேருக்கே இவ்வறி விப்பு வெளியிடப்பட்டுள்ளது.மேலும் நீர் மற்றும் மின்சாரக்கட்டணங்களையும் உடனடியாக செலுத்துமாறு இரண்டா வது தடவையாக அறிவித்தல் விடுக்கப் பட்டுள்ளதுடன், இவ்வறிவிப்புக்களை அவர்கள் புறக்கணித்தால் நீதிமன் றத்தை நாட வேண்டிய நிலைமை ஏற் படுமென பாராளுமன்றம் தெரிவித்துள் ளது.அனுமதியின்றி உத்தியோகபூர்வ இல்லத்தில் ஒருநாள் தங்குவதற்கு 500 ரூபாய் அபராதம் விதிக்கப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது.

உண்மையான நல்லிணக்கத்திற்கு...

தலையிடுவதை விட காயங்களை ஆற்றுவதற்கு இவை பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பா டாகும். மூன்றாம் தரப்பு தலையீடானது உண்மையான நல்லிணக்கத்தை எதிர் மறையாக பாதிக்கும் மற்றும் காயங்க ளைக் குணப்படுத்துவதற்குப் பதிலாக நிலைமையை மோசமாக்கும். எனவே, எங்களின் நிலைப்பாடு நிறைய முன் னேற்றம் அடைந்துள்ளது, மேலும் இதில் முன்னேற்றகரமான நிலை ஏற்படும். உண்மை நிலைமையை எடுத்துரைக்க நாம் பின்வாங்க மாட்டோம். வடக்கு, கிழக்கில் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளன.

தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணமலாக்கப்பட்ட நபர் கள் தொடர்பான அலுவலகம், இழப் பீடுகளுக்கான அலுவலகம் என்பன பலப்படுத்தப்பட்டு, நிலையான வளர்ச்சி இலக்குகள் அடையப்படுகின்றன. எனவே, நமது முன்னேற்றத்தை உலகிற் குக் காட்ட விரும்புகிறோம், மேலும் இந்த மாற்றங்களை அங்கீகரிக்கும்படி அவர்க ளிடம் கேட்டுக்கொள்கிறோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் (PTA) திருத்தம் கொண்டு வர நடவடிக்கை எடுத் துள்ளோம். நல்லாட்சி அரசில் அதைச் செய்ய முடியவில்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், பலருக்கு மன் னிப்பு வழங்கப்பட்டது. ஆக மொத்தத் தில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம் என்றார்.

தேசிய ஐக்கிய மற்றும் நல்லிணக்க அலுவலகம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கொக்குவில் இந்துக் கல்லூரியில் 12 ஸ்மார்ட் வகுப் பறைகளுடன் கூடிய மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தோம். 2018 ஆம் ஆண்டில், இந்தப் பாடசாலையைச் சேர்ந்த சுமார் 70 மாணவர்கள் வெள் ளத்தின் போது உதவ தெற்கில் உள்ள காலிக்குச் சென்றனர். எனவே, அவர் களை அங்கீகரித்து வடக்கிற்கும் தெற் கிற்கும் இடையில் பாலங்கள் அமைக்க உதவிகளை வழங்க விரும்புகின்றோம். புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களின் முன்னேற்றத்தை கருத்திற்கொண்டு அவர்களுடனான சந் திப்பையும் இந்த அலுவலகம் ஏற்பாடு செய்தது. யாழ்.பல்கலைக்கழக மாண வர்கள் மற்றும் கல்வியியலாளர்களுடன் நல்லிணக்கத்தை எவ்வாறு மேம்படுத்து வது என்பது குறித்து அவர்களின் கருத் துக்களைப் பெறுவதற்காக நாங்கள் கலந்துரையாடினோம். காணாமற்போ னோர் தொடர்பில் சுமார் 400 முறைப்பா டுகள் கிடைத்துள்ளதோடு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களின் பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்கு உதவி வழங்கி வருகிறோம். குழந்தைகளை இழந்த பல பெற்றோர்களிடம் பேசும் வாய்ப்பு எனக்கு தனிப்பட்ட முறையில் கிடைத் தது, அவர்களுக்கு நாம் எப்படி உதவ லாம் என்பதை அறிய விரும்பினேன். எனவே, உண்மையான பிரச்சினைக ளைப் புரிந்துகொண்டு மக்களுக்கு உத வவும், இனங்களுக்கு இடையில் பாலம் அமைக்கவும் இது ஒரு நல்ல திட்டமாக இருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார். (பா)

இந்துக்களையும் முஸ்லிம்களையும்...

ஏற்பாட்டில் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாவுல்லா அஹமட் ஷக் கியின் தலைமையில் அக்கரைப்பற்று புதிய நீர் பூங்காவில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் நாட்டின் 74 ஆவது சுதந் திர தின விழா கொண்டாடப்பட்டது. சர்வ சமய பிரார்த்தனைகள், சுதந்திர போராட்ட வீரர்களுக்கான நினைவேந் தல், சர்வ இன கலாசார கலை நிகழ் வுகள் ஆகியவற்றோடு இடம்பெற்ற விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசியபோது அதாவுல்லா எம். பி மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை திருநாடு இறைவன் அருளால் அனைத்து வளங்களும் நிறைய பெற்று இருக்கின்றன. இதனால் உலக நாடுகளும், உலகில் உள்ள சண் டியர்களும் எமது நாட்டையும், எம் மையும் அடிமைப்படுத்தி வைத்திருக்க முயல்கின்றனர். எமக்கு 74 வருடங் களுக்கு முன்னர் சுதந்திரம் கிடைத்து விட்டது. ஆனால் எம்மை நிம்மதியாக வாழ விடுகின்றார்கள் இல்லை. நாம் சுதந்திரம் அடைந்த பிற்பாடுகூட இந்த நாட்டின் அரசியல் அமைப்பு, பொருளா தார கொள்கை ஆகியவற்றில் வல்லரசு கள் தலையிட்டு கொண்டே உள்ளன,

இன ஒற்றுமை குலைக்கப்படுகி றது. பொருளாதார ரீதியாக தாக்கப் பட்டவர்களாகவும், பொருளாதாரத்தை கட்டி எழுப்ப முடியாதவர்களாகவும் நாம் தொடர்ந்தும் இருந்து வருகின் றோம். வல்லரசுகளின் ஆக்கிரமிப்புகள் தற்போது மிக தந்திரமான முறைக ளில் நடத்தப்பட்ட வண்ணம் உள்ளன. வெளிநாடுகளின் ஒத்திசைவோடு தான் ஈழ போராட்ட குழுக்கள் செயற்பட்டன. சகோதர படுகொலைகளும் நடந்தன. உரிமையின் பெயரால் இரத்த ஆறு ஓடியது. மனிதர்களை மனிதர்கள் 35 வருடங்களாக கொன்றனர். இன வாதம், இன துவேசம், இன கலவரம் மூலம் நாட்டை கைப்பற்றுகின்ற பாரிய வியூகம் முன்னெடுக்கப்பட்டது.

சில முஸ்லிம்களையும், முஸ்லிம் ஆலிம்கள் என்கிற பெயரில் சிலரையும் குண்டுதாரிகளாக பாவித்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நடத்தினார் கள்.

கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களை யும் பிரிய செய்தனர். இவை திட்டமிட்டு நடத்தப்பட்டவை என்று மக்களே தெட்ட தெளிவாக இன்று பேசி கொள்வதை செவிமடுக்க முடிகிறது. அவ்விதம் கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களை யும் பிரித்த அதே சக்திகள்தான் இன்று இந்துக்களையும், முஸ்லிம்களையும் பிரிக்க பகீரத முயற்சிகள் மேற்கொள் கின்றன. அதன் ஒரு அம்சமே திருகோ ணமலையில் நடந்தேறுகின்றது. இந் துக்களையும், முஸ்லிம்களையும் மூட்டி விட பார்க்கின்றனர்.

எதிர்கால செல்வங்களான பாடசாலை பிள்ளைகளின் மனங்களில் இப்போதே இனவாதம் விதைக்கப்ப டுகின்றது. ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும். ஒரு இனத்தவரின் உடை, உணவு, கலாசாரம், சமயம் சார்ந்த சுதந்திரங்களை மற்றைய இனத்தவர் கள் மதிக்க வேண்டும். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம் என்று வாழ வேண்டும்.

பெரும்போகத்தில் ஏற்பட்ட குறைகள்...

செய்யப்பட்டு வருகின்றன.

அதனால், அவற்றின் பயன்பாடுகள் தொடர்பில் விவசாயிகளுக்கு உரிய அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட வேண் டியதன் அவசியத்தை நான் வலியு றுத்தியதுடன், அதற்காக நிபுணத்துவ உதவிகளை வழங்குமாறு பசளைச் செயலணியின் உறுப்பினர்களுக்கு ஜனாதிபது அறிவுறுத்தினார்.

“சேதனப் பசளைப் பயன்பாடு தொடர்பில் போதிய அறிவுறுத்தல் கள் வழங்கப்படாமை காரணமாகவே, கடந்த போகத்தின் போது பல விவசாயி கள் தோல்வியைச் சந்திக்க நேரிட்டது.

இம்முறை அந்தக் குறைகளைத் தவிர்த்து, விவசாய ஆராய்ச்சி உதவி யாளர்கள் ஊடாக விவசாயப் பெருமக் களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங் கப்பட வேண்டும்.

அவ்வாறான அறிவுறுத்தல் வேலைத் திட்டங்களில் கலந்துகொள்வதற்கு சில அதிகாரிகள் தயக்கம் காட்டுவதாகத் தெரியவந்துள்ளது.

உரிய அதிகாரிகள் அனைவரும் இந்த வேலைத்திட்டத்தில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் விவசாயிகளின் வருமானம் குறைவதற்கு வழியமைக்கக் கூடாது.

அது தொடர்பான நம்பிக்கையை விவசாயப் பெருமக்கள் மத்தியில் கட்டி யெழுப்ப வேண்டும்.

கடந்த காலங்களில் எதிர்கொண்ட வெற்றியளிக்காத அனுபவங்கள் கார ணமாகவே, சேதனப் பசளை விவசா யத்துக்கு விவசாயிகள் ஆர்வம் காட்ட வில்லை.

தேசிய பசளை உற்பத்தியாளர்க ளுக்குத் தேவையான நிதி உதவிகளை வழங்க அரசாங்கம் அவதானம் செலுத் தியுள்ளது.

உயர் தரத்திலான சிறந்த பசளை களை உரிய காலத்துக்கு வழங்கி, தமது தொழிற்றுறையைக் கட்டியெழுப்பும் பொறுப்பு உரிய நிறுவனங்களுக்கு உள்ளது.

இரசாயனப் பசளை இறக்குமதிக்காக வெளிநாட்டவர்களுக்கு பல வருடங்க ளாகச் செலவளிக்கப்பட்ட பில்லியன் கணக்கான ரூபாய்கள் நிதி, தற்போது இந்தத் தொழிற்றுறையினருக்குக் கிடைக்கப்பெறுவதால் புதிய தேசிய தொழிற்றுறை ஒன்று கட்டியெழுப்பப் படுகிறது.

இதன் மூலம், தேசிய தொழில் முயற்சியாளர்கள் மேலும் பலமடைவர் என்றும் ஜனாதிபதி கூறினார்.

தவறான பிரசாரங்களுக்கு விவசாயி கள் உள்ளானதால், உயர் தரத்திலான பசளைகளை அவர்கள் பயன்படுத் தாத சந்தர்ப்பங்கள் பலவும் பதிவாகி யுள்ளன.

நஞ்சற்ற உணவு வேளை ஒன்றை மக்களுக்கு வழங்கும் அரசாங்கத்தின் கொள்கைக்குத் தாங்கள் கட்டுப்பட்டிருப் பதாக, சேதனப் பசளை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

வெற்றியீட்டிய பல உதாரணங்கள் காணப்படுகின்ற போதிலும், தோல்வி யடைந்த சில சம்பவங்கள் மாத்திரமே ஊடகங்கள் வாயிலாகப் பிரசாரப்படுத் தப்படுகின்றன” என்பதை இந்த கூட்டத் தின் போது அதிகாரிகள் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

25 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் விவசாயிகள், விவசாயத் துறை அதிகாரிகள், பசளை உற்பத்தி நிறுவனங்கள், அரச அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ள டங்கலாகக் குழுக்கள் உருவாக்கப்பட்டு பசளை உற்பத்தி மற்றும் விநியோக வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன் னெடுக்கப்படும் என்பதை இராஜாங்க அமைச்சர் ஷஷீந்திர ராஜபக்ஷ தெரி வித்தார்.

G.C.E (A/L) பரீட்சை...

இம்முறை 2 ஆயிரத்து 437 பரீட்சை மையங்களில் உயர்தரப் பரீட்சை இடம் பெறவுள்ளதுடன், 3 இலட்சத்து 45 ஆயிரத்து 242 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ளதாகப் பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

அவர்களில், 2 இலட்சத்து 79 ஆயி ரத்து 141 பாடசாலைப் பரீட்சார்த்திக ளும் 66 ஆயிரத்து 101 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பரீட்சை எழுதவுள்ள னர்.

திருவள்ளுவரை பெருமைப்படுத்திய...

மேலும் தமிழகத்தில் பல்வேறு பள்ளி கள், கல்லூரிகள், சாலைகளுக்கு திரு வள்ளுவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் திருவள்ளுவரின் சிறப்பு என்பது தேசங்களை கடந்து பரவி இருக் கிறது என்பதற்கு சான்றாக, தற்போது அமெரிக்காவில் முதல் முறையாக ஒரு சாலைக்கு திருவள்ளுவரின் பெயர் சூட் டப்பட இருக்கிறது.

அமெரிக்காவின் விர்ஜினியா மாகா ணத்தில் உள்ள பேர்பேக்ஸ் பகுதியில் இந்த சாலை அமைந்துள்ளது. ஆங்கி லத்தில் ‘Valluvar Way’ என்றும் தமிழில் ‘வள்ளுவர் தெரு’ என்றும் இந்த சாலை அழைக்கப்படும் என தெரிவிக்கப்பட் டுள்ளது. இந்த அறிவிப்பை விர்ஜினியா சபை பிரதிநிதி டான் ஹெல்மர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அரசை வீழ்த்தும் சூழ்ச்சிக்கு...

நான் வழங்கிய ஐக்கிய மக்கள் சக்தி கட்சியை கூட எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவினால் சிறந்த முறையில் நிர்வகிக்க முடியாத நிலைமை தோற்றம் பெற்றுள்ளது. அவர் எவ்வாறு நாட்டை பாதுகாப்பார்.

முட்டாள் தனமான யோசனைகளி னால் ஐக்கிய மக்கள் சக்தி தற்போது ஐந்தாக பிளவடைந்துள்ளது .கட்சியின் பெயரில் மாத்திரமே ஐக்கியம் (சமகி) உள்ளது. உண்மையில் கட்சிக்குள் பாரிய முரண்பாடுகள் காணப்படுகின் றன.கட்சியை சீர்செய்ய எதிர்க்கட்சி தலைவர் உரிய நடவடிக்கைகளை முன் னெடுக்கவில்லை.

மின்விநியோக துண்டிப்பு திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

லதா மங்கேஷ்கர் நேற்று...

மஹாராஷ்டிராவின் மும்பையை சேர்ந்த, தமிழ், 'பாலிவுட்' பின்னணி பாடகி லதா மங்கேஷ்கர் (92 வயது). கடந்த 70 ஆண்டுகளாக பல்வேறு மொழிகளில் 30 ஆயிரத்திற்கும் மேற் பட்ட பாடல்களை பாடியுள்ளார்.

இவருக்கு கடந்த 8 ஆம் திகதி கொரோனா தொற்று உறுதியானது. தெற்கு மும்பையில் உள்ள 'பிரீச் கேண்டி' மருத்துவமனையில் அனும திக்கப்பட்டார். 'வென்டிலேட்டர்' மூலம் சுவாசித்து வந்தார். அவரது உடல்நிலை யில் முன்னேற்றம் ஏற்பட்டதாக சில நாட்களுக்கு முன்னர் டாக்டர்கள் தெரி வித்திருந்தனர்.

இருப்பினும், லதா மங்கேஷ்கரின் உடல்நிலை மீண்டும் மோசமடைந்து அவர் கவலைக்கிடமாக இருந்த நிலையில் தொடர்ந்து அவசர சிகிச்சை பிரிவில் டாக்டர்களின் கண்காணிப்பில் தொடர்ந்து இருப்பார் என அறிக்கை யில் கூறப்பட்டிருந்த நிலையில் நேற்று மரணமடைந்தார். இச்சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மீனவர்களின் கோரிக்கைக்கு ...

நீதித்துறை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரி சகல மீனவர்கள் சார்பாக விரைவில் உச்ச நீதிமன்றத்தை நாடவுள்ளோம். சுப்பர் மடத்தில் நடத்தப் பட்ட போராட்டம் மிகவும் சிறப்பானது. வீதியை மறித்து போராட வேண்டாம் என நீதித்துறை கட்டளையிட்டபொழுது அதனை மதித்து வீதியை விட்டு விலகி னர்.

நீதித்துறைக்கு மதிப்பளித்த மீனவர் கள் வீதியை மறிக்காது விட்டதைப் போல அவர்களுடைய கோரிக்கைக்கு மதிப்ப ளித்து நீதித்துறை சரியானதை செய்ய வேண்டும்.

இது மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச் சினை மாத்திரமல்ல. தொடர்ச்சியாகப் பல சந்ததிகள் இங்கே தொழில் செய்வ தற்கு வளங்கள் இருக்க வேண்டும்.

எங்களுடைய கடல் சுற்றுச்சூழல் இந்த விதமாக பாதிக்கப்படுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது. அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்றார்.

முழுமையான தீர்வாக நாம்...

ஆகிய வற்றின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். நாவலப் பிட்டி கெட்டபுலா உச்சிமலை கீழ்பிரிவு தோட்டத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற ஆலய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்,

இந்த நாட்டிலே விஷயம் புரியாத நபர்கள் பலர் தெற்கிலும் உள்ளனர். வடக்கிலும் வாழ்கின்றனர். தெற்கில் உள்ள நபர்களில் ஜனாதிபதி முதன்மை யானவர்.

இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு. அனைவரும் ஒன்றிணைந்தால் தான் நாடு முழுமைப்படும். அதுவ ரைக்கும் இந்த நாடு உருப்படாது. நாம் அனைவரும் இலங்கையர்கள். அதற்கு பிறகுதான் இனம் எல்லாம்.

13ஆவது திருத்தச்சட்டத்தை நாம் முழு தீர்வாக ஏற்கவில்லை. அதேபோல சிங்கள மக்களின் ஆசியின்றி தீர்வை பெறமுடியாது. இது எனக்கு மட்டுமல்ல அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள் ளிட்டவர்களுக்கும் தெரியும். எனவே, இருப்பதையும் இழக்காமல், முன் னோக்கி செல்வோம் என்பதை விஷயம் புரியாதவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

அரசியல் கைதிகள் சகலரும் ...

விடுதலை இடம்பெற்றுள்ளது.

அது மாத்திரமின்றி அரசியல் நோக் கத்திற்காக கைது செய்யப்பட்ட அனை வரையும் விரைவாக விடுதலை செய்வ தற்கான முனைப்பினை சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் ஜனாதிபதியுடன் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பி னர்கள் என்ற வகையில் பேசி தொடர் முயற்சிகளை எடுத்துள்ளோம்.

அத்துடன் உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையும் அவ்வப்போது விளக்கம் கொடுத்து அதற்கான ஏற்பா டுகளையும் செய்யலாம் என்ற முழு நம் பிக்கையில் இருக்கின்றோம்.

இந்தியாவில் இருந்து வரும் மீன வர்கள் எமது மீனவர்கள் பாதிக்கும் வண்ணம் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றனர்.

எனவே இரண்டு நாடுகளுக்கிடை யில் முரண்பாடு வராத வகையில் ஒரே மொழி பேசும் சமூகம் என்பதனை உணர்ந்து இந்தியாவில் இருந்து வரும் மீனவர்கள் எமது மீனவர்களின் வாழ் வாதாரத்தினை பாதிக்காத வகையில் அவர்களது எல்லையில் இருந்து மீன்களை பிடிக்க வேண்டும் என்ப தனை ஒரு கோரிக்கையாக வைக்கின் றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வகட்சி மாநாட்டை கூட்டவும்...

நிறைவேற்றியுள்ளது. மக்களின் வாக் குரிமையை உறுதிப்படுத்துவதற்காக தாமதமின்றி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது அதில் ஒரு தீர்மானமாகும்.

அரசியல் பேதங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களை ஒதுக்கி வைத்து விட்டு, சர் வகட்சி மாநாட்டை நடத்தி நாடு எதிர் நோக்கியுள்ள பல்வேறு நெருக்

காசல்ரி நீர் தேக்கத்தில் நீரை சேமிக்க பலூன் மேல் இயங்கும் வான்கதவுகள்

அமெரிக்க தொழில்நுட்பத்தில் வேலைத்திட்டம்

ஹற்றன் விசேட நிருபர்

காசல்ரி நீர்தேக்கத்தின் நீரின் கொள்ளளவை விரிவுப்படுத்தி நீரை சேமிப்பதற்காக இலங்கையில் முதல் முறையாக அமெரிக்க தொழில்நுட்பத்தில் பலூன் மேல் இயங்கும் வான் கதவுகளை பொறுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பித்துள்ளதாக மின்சார சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவர் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,..

காசல்ரி நீர்த்தேக்கத்தில் அணைக்கட்டிலிருந்து வான் பாயும் அளவினை உயர்த்தி சர்வதேச தரத்திற்கு அமைவாக சுமார் 28 வான்கதவுகள் பொருத்தப்படவுள்ளன.

நவீன தொழில்நுட்பத்திற்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வரும் இத் திட்டம் அமெரிக்க பொறியியலாளர்கள் மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் இணைந்து நவீன தொழில்நுட்பத்திற்கமைய முன்னெடுக்கப்பட்டு தற்போது நிர்மாண பணிகள் ஆரம்பித்துள்ளன.

இந்த செயத்திட்டத்தின் மூலம் நீரினை முகாமைத்துவப்படுத்துதல் தன்னிச்சையாக வான்கதவுகள் திறத்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுவதுடன் இதற்காக அணைக்கட்டின் மேல் வாயு பலூன் அழுத்தத்தின் ஊடாக வான் கதவுகள் செய்யப்படுகின்றன.

காசல்ரி நீர்தேக்கத்தின் நீர் பரப்பளவு 63,000 ஏக்கர்கள் ஆகும். இலங்கை மின்சாரசபைக்கு சொந்தமான இந் நீர்த் தேக்கத்திலிருந்து இலங்கை முதலாவது நீர் மின் உற்பத்தி நிலையமான விமல சுரேந்திர, லக்ஸபான மற்றும் பொல்பிட்டிய உள்ளிட்ட நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீர் விநியோகம் செய்யும் பிரதான நீர்த்தேக்கமாகும்.

இந்நிலையில் இந்த அணைக்கட்டிற்கு மேல் இந்த 28 நவீன வான்கதவுகள் நிர்மாணிப்பதனால் அணைக்கட்டுக்கு மேல் சுமார் நான்கு கண அடி வரை நீர் பரப்பு சேமிக்கப்படுகின்றன.

இந்த செயற்றிட்டத்தின் மூலம் இலங்கை மின்சார சபைக்கு தற்போது உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு மேலதிகமாக 9 ஜிகா வோட்ஸ் மின்சாரம் தயாரிக்கப்படும் என இவர் மேலும் தெரிவித்தார்.மத்திய மலைநாட்டில் தற்போது வரட்சியான காலநிலை நிலவி வருவதனால் இந்த திட்டத்தினை முன்னெடுப்பதற்கு பொருத்தமான காலப்பகுதி இதுவாகும்.

ஹற்றன் குயில்வத்தை

தமிழ் வித்தியாலயத்திற்கு திறன் வகுப்பறை

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றாக காணப்படுகின்ற ஹற்றன் குயில்வத்தை தமிழ் வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறன் வகுப்பறை அங்குரார்ப்பண நிகழ்வு பாடசாலையின் அதிபர் வேல்முருகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO) மற்றும் இரட்ணம் அறகட்டளை நிறுவனங்களின் பூரண நிதியொதுக்கீட்டில் இந்த திறன் வகுப்பறையானது மாணவர்களின் பயன்பாடுக்கு வழங்கி வைகப்பட்டது.

நிகழ்வுக்கு அதிதியாக IMHOUSA நிறுவனத்தின் உபதலைவர் வைத்தியர் தேவகாந்தன், (IMHO) நிறுவன முகாமையாளர் கந்தையா விக்னேஸ்வரன் மற்றும் (IMHO) நிறுவன உத்தியோகஸ்தர்கள், பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மகாவலி கங்கையின் நீர்மட்டம் அடி மட்டத்தில்

அக்குறணை குறூப் நிருபர்

மகாவலி கங்கையின் நீர் மட்டம் அடி மட்டம் வரை குறைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக மின் உற்பத்திக்கும் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மகாவலி கங்கையின் நீர் மட்டம் குறைவடைந்தால் உக்குவலை, விக்டோரியா, ரன்தெனிகல, ரன்தெம்பே போன்ற நீ்தேக்கங்களின் நீர் மட்டம் குறைவதுடன் மின் உற்பத்தியும் பாதிக்கப்படும்.

மழை பெய்யாத விடத்தில் நிலைமை மேலும் மோசடையலாம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மலையகத்திலும் காணி அபகரிப்பு; தடுத்து நிறுத்த ஒன்றுபடுவோம்

- வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி

ஹற்றன் சுழற்சி நிருபர்

வடக்கு, கிழக்கில் காணிகள் அபகரிக்கப்பட்டது போல, மலையக பகுதிகளிலுள்ள காணிகளையும் கையகப்படுத்தும் முயற்சி எடுக்கப்படுகின்றது. இதனை தடுத்து நிறுத்த நாம் ஒன்றுபட வேண்டும்

என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அதேவேளை எமது கட்சியின் பதுளை பிரதேச சபை உறுப்பினர் சிவநேசன் மீது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார். இச் சம்பவத்தை நாம் கண்டிக்கின்றோம். தோட்டப் பகுதியில் உள்ள காணியை பாதுகாக்க முற்பட்டதால் தான் அவர்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றார். நுவரெலியாவில் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,..

தமிழக மீனவர்களுக்கும், வடக்கு மீனவர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைப் பயன்படுத்தி மூன்றாம் தரப் பொன்று குளிர்காயமுற்படுகின்றது. இதற்கு இரு நாட்டு அரசுகளும் இடமளிக்கக்கூடாது. இப்பிரச்சினையை விரைவில் சுமுகமாக முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

இலங்கையில் வடபகுதி மற்றும் இந்தியாவில் தமிழகம் ஆகிய பகுதிகளில் வாழும் மீனவ சமுதாயத்துக்கிடையிலான பிரச்சினை பூதாகரமாகியுள்ளது. இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள், எமது நாட்டு கடல் வளத்தையும், மீனவர்களின் உபகரணங்களையும் அழிப்பதாக வடபகுதி மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழகத்திலும் தமிழர்கள்தான் வாழ்கின்றனர். வடக்கிலும் தமிழர்கள்தான் வாழ்கின்றனர். எனவே, இதனை தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள முரண்பாடாக சிலர் பார்க்கின்றனர். எனவே, இவ்விவகாரத்தை நாம் மிகவும் அவதானத்துடன் அணுக வேண்டும்.

தலவாக்கலையில் கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் பலி

ஹற்றன் சுழற்சி நிருபர்

கத்திக்குத்துக்கு இலக்காகி நபர் ஒருவர் தலவாக்கலை பகுதியில் உயிரிழந்துள்ளதாகவும் குத்திய நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை வட்டக்கொடை மடக்கும்புர வடக்கு மலை பிரிவில் உள்ள மாரியம்மன் ஆலயத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் (05) இரவு 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் முருகையா சரவணன் வயது 31 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்கான நபர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் லிந்துலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அனுப்பவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பணத் தகராறு காரணமாக இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளன.

கத்தியால் குத்திய நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மற்றும் நுவரெலியா கைரேகை அடையாளப்பிரிவு ஆகியோர் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

சென்கிளையார் காட்டுப்பகுதிக்கு தீ வைப்பு; 60 ஏக்கர் வரை எரிந்து நாசம்

ஹற்றன் விசேட நிருபர்

தலவாக்கலை சென்கிளையார் நீர் வீழ்ச்சிக்கு சுற்றுப்புற பகுதியில் நேற்று முன்தினம் (05) மாலை இனந்தெரியாத விசமிகளால் தீ வைக்கப்பட்டதால் நீர் வீழ்ச்சியினை சுற்றியுள்ள சுமார் 60 ஏக்கர் பற்றைக்காடு தீக்கிரையாகியுள்ளன. இப் பகுதியில் வரட்சியுடன் கடும் காற்றும் நிலவி வருவதனால் காட்டுத் தீயினை கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக பாதுகாப்பு பிரிவினர் தெரிவிக்கின்றனர்;.

மலையகத்தில் நிலவும் வரட்சியான காலநிலையால் வனப்பிரதேசங்களுக்கு தீ வைக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் நீர் நிலைகள் வற்றிப்போகும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளதுடன் வன விலங்குகள் நீரைத்தேடி மக்கள் வாழும் குடியிருப்புக்களை நோக்கி நகரும் அபாயமும் காணப்படுகின்றன. காடுகளுக்கு தீ வைப்பதன் காரணமாக மலையக பகுதியில் உள்ள பெறுமதிமிக்க மரக்கன்றுகள் சிறிய வகை உயிரினங்கள் எமது பிரதேசத்திற்கே உரிதான மூலிகைச் செடிகள் ஆகியன அழிந்து போகும் அபத்து ஏற்பட்டுள்ளது. சுற்றுலா பிரதேசங்களில் தீ வைப்பதால் இப்பிரதேசங்களில் இயற்கை அழகு அழிந்து சுற்றுலா பிரயாணிகளின் வருகையும் குறைவடையலாம். இதனால் இப்பிரதேச மக்களே பாதிக்கப்படுகின்றனர்.

மத்திய மாகாணத்தில் 39 இலட்சம் பேருக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தல்

அக்குறணை குறூப் நிருபர்

மத்திய மாகாணத்தில் இதுவரை 39 இலட்சம் பேருக்கு கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவிக்கிறது.

சுமார் ஒரு வருடகாலமாக கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இவ்வாறு 38,85,685 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு இது வரை தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக பெருமளவு கொரோனா மரணங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

ஒரு மாத்திரை அல்லது இரண்டு மாத்திரைகளுடன் பூஸ்டர் தடுப்பூசி வரை இவ்வாறு சுமார் 39 இலட்சிம் பேருக்கு வழங்க முடிந்ததாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

கண்டி அலதெனியவில் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகி மூதாட்டி மரணம்

அக்குறணை குறூப் நிருபர்

கண்டி அலதெனிய கரண்டுவாவ பகுதியில் தன்னந்தனியாக வசித்து வந்த 86 வயது மூதாட்டி ஒருவரின் ஆடை தீப்பற்றியதில் கடும் தீகாயமுற்று அவர் மரணித்துள்ளார்.இச் சம்பவம் சுதந்திர தினத்தன்று இடம்பெற்றுள்ளது. பி.ஜி.பிரேமாவதி என்ற மூதாட்டியே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.இவர் ஏதோ ஒரு தேவைக்கு தீ மூட்டும் போதே அது அவர் ஆடையில் பற்றி எரிந்திருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர். சம்பவ தினம் முணங்கல் சத்தம் அயலவர்களுக்குக் கேட்டதாகவும் அதனை அடுத்து அங்கு சென்று பார்த்த போதே ஆடையில் தீப்பற்றி பலத்த காயங்களுக்குள்ளாகி இருந்ததாக அயலவர்கள் தெரிவித்தனர்.

திகதி 05.02.2022 சனிக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத் — சீட்டிழுப்பு இலக்கம் : 4669 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,306,670.00
ஆங்கில எழுத்து: F — வெற்றி இலக்கங்கள்: 1 9 8 2 1 8 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 39,318,982.00

கோவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் : 2964 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,788,680.00
ஆங்கில எழுத்து: C — வெற்றி இலக்கங்கள்: 07 14 70 75 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,254,508.40

Mega Power மெகா பவர் 10 — சீட்டிழுப்பு இலக்கம் 1017 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,551,380.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 215,917,962.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 08908
ஆங்கில எழுத்து: K — சுப்பர் இலக்கம்: 13 — வெற்றி இலக்கங்கள்: 06 19 21 28

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 699 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,740,080.00
ஆங்கில எழுத்து: T — வெற்றி இலக்கங்கள்: 06 18 59 64 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,782,590.40

ஹந்தஹன ராசி சுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம் : 0010 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,764,240.00
இலக்கினம்: துலாம் — வெற்றி இலக்கங்கள்: 43 44 47 62 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,597,798.84

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1207 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,777,120.00
வெற்றி இலக்கினம்: மிதுனம் — வெற்றி இலக்கங்கள்: 3 6 6 7 6 8 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,026,248.00

ஜாதிக லொதரய மண்டலய / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.I. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 — பெக்ஸ்: 0114 669 416

திகதி 04.02.2022 வியாழக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4668 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,730,590.00
ஆங்கில எழுத்து: O — வெற்றி இலக்கங்கள்: 0 5 4 5 7 4 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 38,452,863.00

கோவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் : 2963 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,246,740.00
ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 02 24 34 48 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,926,681.60

Mega Power மெகா பவர் 10 — சீட்டிழுப்பு இலக்கம் 1016 — மெகா அதிர்ஷ்ட இலக்கம் 06765 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,953,740.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 213,314,758.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: W — சுப்பர் இலக்கம்: 17 — வெற்றி இலக்கங்கள்: 24 30 59 73

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 698 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,036,620.00
ஆங்கில எழுத்து: N — வெற்றி இலக்கங்கள்: 07 09 24 45 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,601,937.20

ஹந்தஹன ராசி சுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம் : 0009 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,066,700.00
இலக்கினம்: மகரம் — வெற்றி இலக்கங்கள்: 16 17 32 52 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,597,798.84

வாசனா சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1692 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,930,340.00
ஆங்கில எழுத்து: X — வெற்றி இலக்கங்கள்: 55 57 75 92 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,476,648.30

ஜாதிக லொதரய மண்டலய / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.I. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 — பெக்ஸ்: 0114 669 416

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 பெப்ரவரி 7
திங்கட்கிழமை

நல்லாட்சியில் உரிமைகளை கேட்டு பெற்றிருந்தால்

போராட்டம் நடத்த தேவையில்லை

மஸ்தான் எம்.பி

வவுனியா விசேட நிருபர்

நல்லாட்சியில் உரிமைகளை கேட்டு பெற்றிருந்தால் தற்போது போராட்டம் நடத்த தேவையில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியா சகாயாமாதபுரம் கிராமத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தானின் நிதி ஒதுக்கீட்டில் 20 மில்லியன் ரூபாயில் அமைக்கப்பட்ட சனசமூக நிலைய கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்,..

2019 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் நிர்ணயிக்கப்பட்டாலும் கொவிட் காரணமாக காலதாமதாக மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலங்களில் நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகின்றோம். இந்த கிராமத்திற்கு நகர சபை உறுப்பினர் பதவி வழங்கப்படும் என தேர்தலில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய அதனை நிறைவேற்றியுள்ளோம்.

அதேபோல் மக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து வருகின்றோம்.

ஒவ்வொன்றுக்கும் போராட்டம் நடத்துபவர்கள் கடந்த நல்லாட்சியில் இருந்தார்கள். அப்போது அதனை கேட்டு பெற்றிருந்தால் இப்போது போராட்டம் நடத்த தேவையில்லை. சுதந்திர தினமன்றும் போராட்டம் நடத்துகிறார்கள். 5 வருடம் நல்லாட்சி என்று இருந்த போது அந்த உரிமைகளை கேட்டு பெறவில்லை. அதனை பெற்றிருந்தால் இந்த போராட்டம் தேவையில்லை.நிரந்தர தீர்வு இல்லாவிட்டாலும் நிம்மதியாக வாழக்கூடிய நிலையை உருவாக்கி வருகின்றோம் என்றார்.

கட்டுவன் - மயிலிட்டி வீதி சர்ச்சை; சுமந்திரன் எம்.பி நேரில் ஆராய்வு

கரவெட்டி தினகரன் நிருபர்

யாழ்ப்பாணம், கட்டுவன் மயிலிட்டி வீதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கான பாதையில் 400 மீற்றர் பாதையை அபகரித்துள்ள படையினர் வீதியை விட மறுத்து தனியாருக்குச் சொந்தமான நிலத்தின் ஊடாக தற்போது பாதை அமைக்கும் விடயம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சம்பவ இடத்திற்கு சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டதோடு சட்டப்படி சுவீகரிக்காது நில உரிமையாளரின் சம்மதம் இன்றி அவர்களின் கிணறுகளை இடித்து அழித்து அதன் மேல் புதிய வீதிகளை அமைக்கின்றனர்.

அதனை நேரில் பார்வையிட்டு அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராய்வதற்காகவே சம்பவ இடத்திற்கு வருகை தந்ததாக குறிப்பிட்டதோடு அடுத்த கட்டமாக இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரோடு நில உரிமையாளர்கள், வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் உள்ளிட்டவர்களும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு அருகாமையிலுள்ள குழாய் கிணற்றை புனரமைத்து தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு அருகாமையில் உள்ள குழாய் கிணற்றை விரைவில் புனரமைத்து தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பல ஆண்டு காலமாக பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகின்ற குறித்த குழாய்க் கிணறு பழுதடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு தெரிவித்த போதும் பிரதேச சபை அதற்கான உரிய நடவடிக்கைகளை செய்யவில்லை என பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சபைக்கு எழுத்து மூலமும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் உறுப்பினர்களிடம் நேரிலும் பல தடவைகள் தெரிவித்தும் இதுவரை அதற்கான எவ் வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. சுமார் 200க்கும் மேற்பட்டோர் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இருந்த இந்த குழாய் கிணற்றை புனரமைக்குமாறு பொது மக்கள் கோரி நிற்கின்றனர்.

சண்முகம் தவசீலன்

புதையல் தோண்ட முற்பட்ட அறுவர் கைது

பரந்தன் குறூப் நிருபரை

கிளிநொச்சி இராமநாதபுரம் அழகாபுரியில் புதையல் தோண்ட முற்பட்டார்க ள் என்ற குற்றச்சாட்டில் ஆறு பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து புதையலை கண்டறிவதற்காக பயன்படுத்தபடுத்த ப்படும் ஸ்கானர் கருவி ஒன்றும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் ஐவர் தமிழர்கள் என்றும் ஒருவர் இஸ்லாமியர் என்றும் தெரியவந்துள்ளது.கைதானவர்கள் தர்மபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் சடுதியாக அதிகரிக்கும் கொரோனா

5 நாட்களில் 197

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வரும் நிலையில் கடந்த 5 நாட்களில் மாவட்டத்தில் 197 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் நேற்று (6) விடுத்துள்ள கொரோனா நிலவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,..

மன்னார் மாவட்டத்தில் நேற்று முந்தினம் சனிக்கிழமை (5) மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர்.பரிசோதனையின் போது மேலும் புதிதாக 41 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 5 நாட்களில் 197 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இவ்வருடம் 398 கொரோனா தொற்றாளர்களும் மாவட்டத்தில் தற்போது வரை 3581 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவரை 36 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளது.

மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு திறன் வகுப்பறை

வலிகாமக் கல்வி வலயத்திற்குட்பட்ட சண்டிலிப்பாய் கோட்டத்தின் பின்தங்கிய கிராமப்புறமான மாதகல் கிராமத்தின் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப பாடசாலையான மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை திறப்பு விழா நிகழ்வு பாடசாலை அதிபர் செல்வி இ.சுலோசனா தலைமையில் இடம் பெற்றது. இரட்டணம் அறக்கட்டளை நிறுவனமும், பாடசாலை அதிபர் செல்வி. இ.சுலோசனாவின் நிதியொதுக்கீட்டின் மூலம் இத்திறன் வகுப்பறையானது மாணவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கி வைக்கப்பட்டது.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பாகிஸ்தான் இரண்டாவது சவேட் குத்துச்சண்டை போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற முல்லைத்தீவு யுவதி கணேஷ் இந்துகா தேவிக்கு குத்துச்சண்டை பயிற்சி பெறுவதற்கான ஒரு தொகுதி உபகரணங்களை கொழும்பு07 மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் வழங்கி வைத்தனர்.

யாழிலும் அரச தாதி உத்தியோகத்தர்கள் வேலை நிறுத்தம்

யாழ்.விசேட நிருபர்

அரச தாதி உத்தியோகத்தர் சங்கம் இன்று வேலை நிறுத்த போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 15 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து, பதவி உயர்வு, இடர்கால கொடுப்பனவு, சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளை முன்வைத்து தீர்வு கிடைக்கும் வரையில் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அதற்கு ஆதரவளிக்கும் வகையில் யாழ்.போதனா வைத்தியசாலை, தாதி உத்தியோகத்தர்களும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வேலை நிறுத்த காலத்தில் அவசர மற்றும் உயிர் காக்கும் சேவைகளில் மாத்திரமே தாதிய உத்தியோகத்தர்கள் ஈடுபடுவார்கள் என அறிவித்துள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்ட சீர் திருத்தத்திற்கு எதிராக கையெழுத்து போராட்டம்

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

பயங்கரவாத தடைச் சட்ட சீர் திருத்தத்திற்கு எதிராக கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் (5) நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று (5) முதல் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்துப் பெறும் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளோம். மாவட்ட ரீதியாக தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியினர் செயற்படுவர். இதை தமிழரசுக் கட்சி செய்வதாக பார்க்க வேண்டாம். இது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பாதிக்கின்ற சட்டம். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்படுவதுடன் முற்போக்கு சக்தியுடைய சிங்கள மக்களும் பாதிப்படைகின்றார்கள்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக என்ன செய்தீர்களென முகநூலில் கேள்வி கேட்கின்றனர். கடந்த ஆட்சிக் காலத்தில் தான் இந்த பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக நீக்கப்படுமென்று சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டது. பங்கரவாத தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட்டு அதற்குப் பிரதியீடாக இன்னொரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சித்தது அனைவரும் அறிந்த விடயம்.

புதிய சட்டம் கொண்டு வரப்பட்டு பாராமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர் திடீர் மரணம்

கரவெட்டி தினகரன், யாழ்.விசேட நிருபர்கள்

யாழ்.கரவெட்டி பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞன் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கலட்டி கீரிப்பல்லி பகுதியை சேர்ந்த விக்கினேஸ்வரமூர்த்தி நிதர்சன் (வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரிக்கு முன்பாகவுள்ள வயலில் தனது சகோதரருடன் வேலை செய்து கொண்டிருந்தபோது திடீரென்று மயக்கமுற்று நிலத்தில் வீழ்ந்துள்ளார்.இந்நிலையில் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவில் தொடர் திருட்டில் ஈடுபட்டவர் கைது; பொருட்களும் மீட்பு

நாகர்கோவில் விசேட நிருபர்

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து பெருமளவு பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் வேதாரண்யேஸ்வரா வித்தியாலயம், யாக்கரு வித்தியாலயம் மற்றும் விக்கினேஸ்வரா வீதியில் உள்ள மாதா ஆலயம் மற்றும் கணவாய் பகுதியில் உள்ள வீடு ஆகியவற்றில் கடந்த 2021 ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

விசாரணைகளை மேற்கொண்ட காங்கேசந்துறை மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் (04) கரணவாய் பகுதியைச் சேர்ந்த ஒருவரை கைது செய்ததுடன் அவரது வீட்டில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு பொருட்களையும், விற்பனை செய்யப்பட்ட நிலையில் தொலைபேசி தங்க நகை என்பன மீட்கப்பட்டிருந்தன. மேலும் அவரது உடைமையில் வாள் ஒன்றும் மீட்கப்பட்டதாக தெரிவித்த குற்றத்தடுப்பு பிரிவினர் பிரதான சந்தேகநபர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுவிட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தெரிவித்தனர்.

கிழக்கின் குரல்

கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ள உயர்தர மாணவர்களுக்கு தனியான பரீட்சை மண்டபம்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

ஒலுவில் விசேட நிருபர்

கொவிட் தொற்றுக்குள்ளாகி கா.பொ.த உயர் தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு கல்முனை பிராந்தியத்தில் தனியான பரீட்சை மண்டபம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல். எம். றிபாஸ் ஞாயிற்றுக்கிழமை (06) தெரிவித்தார்.

கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை மற்றும் திருக்கோவில் ஆகிய வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கா.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு கொவிட்19 தொற்று அடையாளம் காணப்படும் பட்சத்தில் அவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு அட்டாளைச்சேனை ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளான மாணவர்கள் தனிமைப்படுத்தல் காலம் முடிந்தவுடன், அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது பாதுகாவலருடன் பாதுகாப்பான முறையில் சென்று பரீட்சை எழுத முடியுமென தெரிவித்தார். தொற்றுக்குள்ளாகிய மாணவர்களுக்கு பரீட்சை மண்டபத்தில் மயக்கம் மற்றும் அவசர சிகிச்சைகள் தேவைப்படும் பட்சத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும், அவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு அம்பியூலன்ஸ் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், சிகிச்சை முடிந்த பின் அவர்கள் எந்த இடையூறு இல்லாமலும் பரீட்சை எழுதுவதற்கு வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பரீட்சை மண்டபத்திற்கு செல்லும் மேற்பார்வையாளர்கள் மற்றும் மாணவர்கள் முகக்கவசம் அணிந்து செல்லுமாறும், சமூக இடைவெளியை பேணுமாறும், சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறும் கேட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 04 கொவிட் விசேட பரீட்சை நிலையங்கள்

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்

காரைதீவு குறூப் நிருபர்

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், கிழக்கு மாகாணத்தில் கொவிட் 19 தொற்றுக்குள்ளாகி, தனிமைப்படுத்தப்பட்டுள்ள பரீட்சார்த்திகளுக்காக விசேடமாக நான்கு (04) பரீட்சை நிலையங்களை அமைத்து, பரீட்சை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பரீட்சாத்திகளுக்கு பெரிய கல்லாறு மாவட்ட வைத்தியசாலையிலும் கல்முனை கல்வி வலய பரீட்சார்த்திகளுக்கு அட்டாளைச்சேனை அயுர்வேத வைத்திசாலையிலும், அம்பாறை மாவட்ட பரீட்சார்த்திகளுக்கு அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையிலும், திருகோணமலை மாவட்ட பரீட்சார்த்திகளுக்கு குச்சவெளியிலுள்ள மாவட்ட பொது வைத்தியசாலையிலும் பரீட்சையினை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களின் நலன் கருதி பரீட்சை ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைவாக இவ்வாறு விசேட நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

புதிய பெண் தவிசாளர் நியமனம்

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை காணி விசேட மத்தியஸ்த சபைக்கான புதிய தவிசாளராக திருமதி எழிலரசி சிவநேசன் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு மூலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே தவிசாளராக கடமையாற்றிய மகாத் குசன் களாஸ் தனது பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து, புதிய தவிசாளராக ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியையாக கடமையாற்றும் எழிலரசி நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் முதல் பெண் தவிசாளர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சம்மாந்துறையில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மக்களிடம் கையளிப்பு

சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சம்மாந்துறை பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் வெள்ளிக்கிழமை (4) மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டன.

சம்மாந்துறை பிரதேச செயலகம், சம்மாந்துறை பிராந்திய நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் சம்மாந்துறை பொலிஸ் நிலையம் என்பன இணைந்து நடாத்திய சுதந்திர தின நிகழ்வு இடம்பெற்றதுடன், நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கிராமிய குளங்களை அபிவிருத்தி செய்தல் திட்டத்தின் மூலம் 2.7 மில்லியன் செலவில் சம்மாந்துறை கைகாட்டி குளம் மற்றும் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் 0.8 மில்லியன் ரூபாய் செலவில் புளக் ஜே மேற்கு 2 பிரிவிலுள்ள பல நோக்கு கட்டிட வீதி என்பன புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வு சம்மாந்துறை பிராந்திய நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். கே.எஸ்.ஜயலத், மதத் தலைவர்கள், உலமாக்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்ட அதிதிகளினால் சுதந்திர தின நிகழ்வு இடம்பெற்றதோடு, குளத்தினை சுற்றிய பகுதிகளில் மரங்கள் நடுகை செய்யப்பட்டதுடன், கைகாட்டிக் குளத்தில் மீன் குஞ்சுகள் இடப்பட்டன.

விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தொழில்நுட்ப பீடத்திற்கான அடிக்கல்

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனினால் நாட்டி வைப்பு

கல்லடி குறூப், பாசிக்குடா, மட்டக்களப்புகுறூப் நிருபர்கள்

மட்டக்களப்பு கல்குடா கதிரவெளி விக்னேஸ்வரா மகா வித்தியாலய புதிய தொழிநுட்ப பீடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா சனிக்கிழமை (05) கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கதிரவெளி விக்னேஸ்வரா தேசிய பாடசாலைக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மூன்று மாடி உயர் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டட தொகுதியினை அமைப்பதற்கான அடிக்கல்லினை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் உள்ளிட்ட அதிதிகளினால் நாட்டி வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டதுடன், சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவருமாகிய சிவனேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொண்டிருந்தார்.

கௌரவ அதிதிகளாக கல்வி அமைச்சின் ஊடகச் செயலாளர் லலித் ரோஹன லியனகே, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், வாகரை பிரதேச செயலாளர் எந்திரி ஜீ.அருணன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அனைத்து மாணவரும் ஏதேனும் ஒரு துறையில் அரசாங்கத்தின் உதவியோடு பட்டப்படிப்பு வரை கல்வியை தொடர வழி வகுக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த உயர் தொழில்நுட்ப பீடம் நாடளாவிய ரீதியில் அமைக்கப்படுகின்றது.

மின்சாரம் தாக்கி காட்டு யானை உயிரிழப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், கிதுலுத்துவ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி காட்டு யானையொன்று ஞாயிற்றுக்கிழமை (6) அதிகாலை உயிரிழந்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த காட்டு யானைக்கு பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என வனஜீவராசி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கித்துல் ஊத்துவ பிரதேசத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும், அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகள் மற்றும் மனித மோதல்களைக் குறைப்பதற்கு, காட்டு யானைகள் அதிகம் காணப்படும் கந்தளே கித்துல் ஊதுவ பிரதேசத்தை உள்ளடக்கிய கிராமத்தை பாதுகாப்பதற்காக யானை வேலி அமைப்பதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காட்டு யானை இறந்துள்ள பகுதியில் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மூதூரில் இனநல்லுறவை வலுப்படுத்திய சுதந்திர தின விழா

மூதூர் தினகரன் நிருபர், தோப்பூர் குறூப் நிருபர்கள்

மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 74 வது வருட சுதந்திர தின விழா மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் வெள்ளிக்கிழமை (04) தோப்பூர் அல் ஹம்றா மத்திய கல்லூரியில் வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

தோப்பூர் சுற்றுவட்ட வளாகத்தில் இருந்து அதிதிகள் மாணவர்களின் பேன்ட் வாத்திய இசையுடன் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டு தேசிய கொடியேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. உயிர்நீத்த படைவீரர்கள், கொவிட் காரணமாக உயிர் நீத்த அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சுனாமியால் மரணமடைந்தவர்களுக்கான மௌன அஞ்சலியும் இடம்பெற்றன.

தோப்பூர் பிரதேசத்தை மையப்படுத்தி கொண்டாடப்பட்ட இச் சுதந்திர தினத்தில் நாட்டின் சுபீட்சம், வறுமை ஒழிப்பு, சமூகத்தின் உரிமை, யாவரும் இந்நாட்டு தேசத்தவர்கள் என்ற நோக்கில் கைகோர்க்க வேண்டிய பல்வேறு விடயங்கள் குறித்தும் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக், பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ் ஆகியோரினால் சுதந்திர தின சிறப்பு சொற்பொழிவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் இஸ்லாம், இந்து, பௌத்தம் மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள், மூதூர் பொலிஸ் நிலைய உதவி அத்தியட்சகர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தோப்பூர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி என்.எம்.எம்.கஸ்ஸாலி, திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மாணவர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

பாதையை புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

மண்டூர் குறூப் நிருபர்

அம்பிளாந்துறை தாமரைப்பூ சந்தியிலிருந்து மனப்பிட்டி சந்தி வரைக்குமான வால்கட்டு பிரதான பாதை குண்டும் குழியுமாக காணப்படுவதாக பிரதேச வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, மண்டூரிலிருந்து மட்டக்களப்பு நகருக்கு செல்லும் பிரதான பாதையில், தாமரைப்பூ சுற்றுவட்ட சந்தியிலிருந்து மனப்பிட்டி சந்தி வரைக்குமான 7 கிலோமீற்றர் பாதையே இவ்வாறு புனரமைப்பற்று குண்டும் குழியுமாக சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தாமரைப்பூ சுற்றுவட்ட சந்தியிலிருந்து வால்கட்டு, மனப்பிட்டி சந்தி ஊடாக காஞ்சிரங்குடா, கொத்தியாபுல, தாண்டியடி, குறிஞ்சாமுனை, வவுணதீவு, வலையிறவு பாலம் ஊடாக மட்டக்களப்பு நகருக்கு செல்லும் பிரதான பாதை மார்க்கம் பட்டிப்பளை, வவுணதீவு மற்றும் மட்டு. மண்முனை வடக்கு ஆகிய செயலக பிரிவுகளை இணைப்பதுடன், மட்டு மாவட்ட செயலகம் உட்பட நகரின் பல்வேறு அலுவலகங்களுக்கும் செல்லும் பிரதான மார்க்கமாகவும் காணப்படுகின்றது.

இப்பாதையை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச வாழ் பொதுமக்களும் சமூக மட்ட அமைப்புகளும் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் 74வது சுதந்திர தின நிகழ்வு வெள்ளிக்கிழமை(04) நடைபெற்றது. இந் நிகழ்வில், காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா, கணக்காளர் ஏ.சித்திரா, நிருவாக உத்தியோகத்தர் திருமதி ஜாயிதா ஜலால்தீன், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டபோது. படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் காரியாலத்தினரும் கல்முனை மாவட்ட தேசிய கூட்டுறவு சபையினரும் ஒருங்கிணைத்து ஒழுங்கு செய்த சுதந்திர தின நிகழ்வு வெள்ளிக்கிழமைஇடம்பெற்றது. இந்நிகழ்வில் கூட்டுறவு சபையின் தலைவர் இசட்.எ.லத்தீப் மரம் நடுவதையும், காரியாலய ஊழியர்களையும் படத்தில் காணலாம். (படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

லொத்தர் சபை விற்பனையாளர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

அநுராதபுரம் தினகரன் நிருபர்

தேசிய லொத்தர் சபையின் விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை முகவர்களை கௌரவிக்கும் முகமாக அநுராதபுரம் ஹெரிடேஜ் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்தும்

போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். லொத்தர் விற்பனையை நாடுபூராவும் முறையாக விஸ்தரிப்பதற்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக அவர்கள் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என நான் நம்புகின்றேன். அவ்வாறு செய்வதன் மூலம் விற்பனை முகவர்கள் மற்றும் லொத்தர் விற்பனையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைப்பதுடன் நாடுபூராவும் லொத்தர் விற்பனையை அதிகரிப்பதன் மூலம் சபைக்கு அதிக இலாபத்தினையும் ஈட்டிக்கொள்ள முடியும் என நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கு காசோலைகளும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, பாராளுமன்ற உறுப்பினர் கே.பி.எஸ். குமாரசிரி அநுராதபுரம் மாநகர முதல்வர் எச்.பீ.சோமதாச மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் அஜித் குணரத்ன நாரகல நிறைவேற்று அதிகாரி அநுர ஜயரத்ன உள்ளிட்ட அரச அதிகாரிகள் விற்பனை முகவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

பேதங்களை மறந்து தாய்நாட்டுக்காக ஒன்றுபடுவதே காலத்தின் தேவையாகும்

வெலிகம பிரதேச சுதந்திர தின நிகழ்வில் முன்னாள் நகர சபைத் தலைவர் மொஹமட்

வெலிகம தினகரன் நிருபர்

எமது தாய் நாட்டின் 74வது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்ற இன்றைய தினத்தில் கடந்து வந்த பாதையை நாம் ஒருமுறை மீள் பரிசீலனை செய்து பார்ப்பது காலத்தின் தேவையாகும். அன்று எமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கின்றபோது நாட்டில் வாழ்ந்த அனைத்து இனத்தவர்களும் இன, மத, பேதமின்றி தாய்நாட்டிற்காக ஒன்றுபட்டு செயற்பட்டதாலேயே எமக்கு சுதந்திரத்தை இலகுவாக அடைந்து கொள்ள முடிந்தது. அதேபோல் நாமும் ஒற்றுமையாக செயற்பட்டு எதிர்காலத்திலும் எமது நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேறிச் செல்ல பேதங்களை மறந்து செயற்படுவதே இன்றைய தேவையாகுமென வெலிகம பிரதேச பொதுஜன பெரமுன முக்கியஸ்தரும் முன்னாள் வெலிகம நகரசபைத் தலைவருமான ஹுஸைன் மொகமட் தெரிவித்தார்.

74 வது சுதந்திர தினத்தையொட்டி வெலிகம பிரதேசத்தில் (04) இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் எமது தாய் நாடு பல்வேறு சவால்களுக்கும் மத்தியில் குறிப்பாக கொரோனா தொற்றுக்கு மத்தியிலும் அபிவிருத்தியடைந்து வரும் இச்சந்தர்ப்பத்தில் நாமும் இலங்கையின் மைந்தன் என்றவகையில் அதில் பங்காளர்களாக இணைந்து கொள்வது அவசியமாகும்.

சுதந்திரம் அடைந்து 74 வருடங்கள் கடந்துள்ள இவ்வேளையில், நாம் பெற்ற சுதந்திரத்தை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் நாம் இலங்கையர்கள் என்ற தேசப்பற்றுடனும் ஐக்கியத்துடனும் செயற்பட வேண்டும். நாட்டு மக்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு காத்திரமான திட்டங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 'இலங்கை அபிவிருத்தியை நோக்கி' என்ற திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எமது நாடு பல்துறைகளிலும் முன்னேறிச்செல்ல கட்சி, இன, மத பேதங்களை மறந்து ஒற்றுமையாக செயற்பட்டலே நாம் எதிர்காலத்தில் சிறந்த வளமான இலங்கை திருநாட்டை கண்டுகொள்ள முடியும் என்றார்.

நாடளாவிய ரீதியில் "ஒரு லட்சம் அபிவிருத்தித் திட்டங்கள் " வேலைத் திட்டத்தின் கீழ் களுத்துறை பிரதேச செயலகப் பிரிவில் தும்மலமோதர வாய்க்கால் புனரமைப்பு திட்டம் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினர் ரோஹன அபேகுணவர்த்தன, நகர சபை தலைவர் ஆமிர் நஸீர், பிரதேச சபை தலைவர் எஸ். ஆரியரத்ன உள்ளிட்ட உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டுள்ளதை படத்தில் காணலாம்.
(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

விவசாய அமைச்சு
ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை
ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் கீழ்க்காணும் செயற்பாடற்ற தேயிலைத் தொழிற்சாலைகள், களஞ்சியங்கள் மற்றும் கீழ்க்காணும் மாவட்டங்களில் அமைந்துள்ள தோட்டக் காணிகளை செயற்றிட்டத்திற்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செயற்பாடற்ற தேயிலைத் தொழிற்சாலைகள்	காணி செயற்றிட்டமொன்றிற்காக காணி அமைந்துள்ள மாவட்டம்
ரஹதுன்கொட - ஹேவாஹெட்ட	புத்தளம்
கலபட - நாவலப்பிட்டி	இரத்தினபுரி
கிரேட்வெலி - தெல்தொட்ட	களுத்துறை
தெல்தொட்ட - கலஹா	மாத்தளை
தெம்பிலிகல (மஹவில) - உலப்பனை	கேகாலை
கந்தல்ஓய நாவலப்பிட்டி	நுவரெலியா
ருக்வுட் - ஹேவாஹெட்ட	மொனராகல - (சூரிய சக்தி, மின் திட்டத்திற்கு மாத்திரம்)

களஞ்சிய வசதிகள்
55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு-02

விண்ணப்பங்கள் மற்றும் விபரப் பத்திரங்களை கொழும்பு-02, வொக்ஷோல் ஒழுங்கை, 55/75இல் அமைந்துள்ள ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையின் காணிப் பிரிவில் அல்லது கண்டி ஹந்தானவத்த ஜனவசம பிரதேச அலுவலகத்தில் 2022.02.07 முதல் 2022.03.07 வரை ரூ. 5,000/- மீளளிக்கப்படாத வைப்பிற்கு உற்பட்டு விநியோகிக்கப்படும். இந்த சொத்து சம்பந்தமாக 2020.12.05ம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்காக கட்டணங்கள் இன்றி விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், தலைவர், ஜனவசம, 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு-02, என்ற முகவரிக்கு 2022.03.10 திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அல்லது அம் முகவரியில் அமைந்துள்ள ஜனவசம தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடலாம்.

தலைவர்,
ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை,
இல. 55/75, வொக்ஷோல் வீதி,
கொழும்பு-02.
தொ.பே: 011-5733112

பிரசித்த ஏல விற்பனை

09ம், 10ம் டிசம்பர் 2020, 11ம், 22ம் ஜனவரி 2021, 9ம்,10ம் பெப்ரவரி 2021, 12ம், 15ம் மார்ச் 2021, 8ம், 9ம் ஏப்ரல் 2021, 10ம், 11ம் மே 2021, 10ம், 11ம் ஜீன் 2021, 12ம், 13ம் ஜீலை 2021, 12ம், 13ம் ஆகஸ்ட் 2021, 13ம், 14ம் செப்ரம்பர் 2021, 11ம், 12ம் ஒக்ரோபர், 11ம், 12ம், நவம்பர், 10ம், 13ம், டிசம்பர், 10ம், 11ம், ஜனவரி 2022 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த முடியாத காரணங்களினால் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜீன், ஜீலை, ஆகஸ்ட், செப்ரம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் 2021" ஜனவரி 2022 மாதங்களில் ஏல விற்பனைக்கு விட தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் மற்றும் பிப்ரவரி மாதம் 2022 ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகளும் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

கிளைகள்	திகதி
பொலன்னறுவை, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகன்த, கொத்தாடுவ புதிய நகரம், கொலன்னாவ, தொட்டலங்க, தெமடகொட, கொம்பணித்தெரு, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, மெதிரிகிரிய, எம்பிலிப்பிட்டி, திஸ்ஸமஹாராம, தெஹியத்தகண்டி, நுவரெலியா, கட்டுநாயக்க-அவிரிவத்த, சிலாபம் கொச்சிக்கடை, நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, மீனுவங்கொட, நாரம்மல, குளியாபிட்டி, குருநாகல், குருநாகல் பிரீமியர் நிலையம், குருநாகல் நகர கிளை. அளுத்கம, களுத்துறை, பேருவளை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி	23 பிப்ரவரி 2022
ஹோமாகம, மஹரகம நகர கிளை, மஹரகம, கொட்டாவ, அத்துருகிரிய, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவை, கெகெல்வத்தை - பாணந்துறை, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, ரத்மலான கல்கிச, அத்திடிய, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, பிரீமியர் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி நகர கிளை, தலைமை அலுவலகம் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி கார்ப்பரேட் அலுவலகம் கொழும்பு 03. கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, கனேமுல்லை, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிடிய	24 பிப்ரவரி 2022
மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரணை, பண்டாரகம, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டி, மாத்தளை, கெலிஓயா, மாலபே, புத்தளம், மத்துகம, பதுரெலிய, ஆனமடுவ, ஜம்பெட்டா வீதி கிளை, டாம் வீதி கிளை, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொரளை, பலாங்கொடை, அவிசாவளை, எஹெலியகொட, இரத்தினபுரி, ஹங்வெல்ல, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை. கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளி, மோதறை, கிரான்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கிரான்ட்பாஸ்	25 பிப்ரவரி 2022
கராபிட்டிய, காலி தங்காலை, அம்பலாங்கொட, பதுளை, பதுளை நகர கிளை, பண்டாரவளை, சங்கராஜ மாவத்தை கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொஹுவல, ஹட்டன், மஸ்கெலியா, தம்புள்ளை, கெக்கிராவ, அனுராதபுரம் நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சி, தம்புத்தேகம, செங்கலடி, வாழைச்சேனை, மன்னார், சாவகச்சேரி, கிண்ணியா, திருகோணமலை, வவுனியா, கொக்கட்டிச்சோலை, ஆராயம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, அட்டாளைச்சேனை, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிரீமியர், யாழ்ப்பாண நகரம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, ஏராவூர் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, கல்முனை, மல்லாவி, வட்டுக்கோட்டை,சங்கானை	26 பிப்ரவரி 2022

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE

தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

விலைமனுக்களுக்கான அழைப்பு

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - சப்ரகமுவ

கஹவத்த - ஆதார வைத்தியசாலையிலுள்ள ஐந்து மாடிக் கட்டிடம் மற்றும் ICU கட்டிடத்திற்கு படுக்கை மின்னுயர்த்திகளை (Bed Lifts) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்

கீழே விபரிக்கப்பட்டுள்ள உருப்படிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சார்பில் சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

இல.	உருப்படி	எண்ணிக்கை	ஆவணக் கட்டணம் ரூபா	விலைக்கோரல் பிணை முறி பெறுமதி ரூபா
01	ICU கட்டிடத்திற்கான படுக்கை மின்னுயர்த்தி	01	7500.00	100,000.00
02	ஐந்து மாடிக் கட்டிடத்திற்கான படுக்கை மின்னுயர்த்திகள்	02	7500.00	200,000.00

1. விலைமனுதாரர் அங்கீகரிக்கப்பட்ட படுக்கை மின்னுயர்த்தி வழங்குநராகவிருத்தல் வேண்டும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் இரத்தினபுரி, இல. 75, தர்மபால மாவத்தை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022 மார்ச் 02ஆம் திகதி அல்லது அதற்கு முன் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

   பணிப்பாளர்,
   மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
   இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.

4 தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள்
   அ. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   ஆ. இயைபுடைய இயந்திரங்களை விற்பனை செய்வதில் 2022 பெப்ரவரி 07ஆம் திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது 03 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்படும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 பெப்ரவரி 07ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 7500.00 ரூபா கட்டணத்தை செலுத்தியதன் பின் மேற்குறிப்பிடப்பட்ட (03ஆம் பந்தியில்) முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றை தனித்தனியாக சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை சப்ரகமுவ - மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட தரப்பினருக்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மேற்குறிப்பிடப்பட்ட (03ஆம் பந்தியில்) முகவரியிலுள்ள கேட்போர் கூடத்தில் 2022-02-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
7. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட இரு நகல்களில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியான விலைமனுக்களை 2022 மார்ச் 03ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிமம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும். ஒவ்வொரு விலைமனுவுடனும் விலைமனு ஆவணத்தின் விபரிக்கப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப் பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் தலைப்பு தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
9. மேலே குறிப்பிடப்பட்ட முகவரியானது: தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,
இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.
2022-02-07.

பெறுகை அறிவித்தல்

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

"தொழில்முயற்சி 2022" விற்பனை மற்றும் கல்விக் கண்காட்சியில் "பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல்" மற்றும் "விளம்பர நடவடிக்கை" என்பவற்றுக்கு விலைமனு கோரல்

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறிய வியாபார அபிவிருத்திப் பிரிவினால் ''நாடெங்கும் உள்ள உற்பத்திகள் உலகமெல்லாம் விற்பனைக்கு'' எனும் கருப்பொருளின் கீழ் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் ''தொழில்முயற்சி'' விற்பனை மற்றும் கல்விக் கண்காட்சி 2022 ஏப்ரல் மாதம் 01, 02 மற்றும் 03ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப சுற்றாடலில் நடைபெறவுள்ளது. மேற்படி கண்காட்சிக்கு இயையான ''பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல்'' மற்றும் ''விளம்பர நடவடிக்கை'' என்பவற்றுக்கு இத்துறையில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவத்தைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. ஒரு விலைமனுதாரர் இந்த இரு பிரிவுகளுக்கும் மற்றும் ஒன்றுக்கு மட்டும் விலைகளைச் சமர்ப்பிக்கலாம்.
2. விலைக்கோரல் ஆவணங்களை 2022-02-07ஆம் திகதி முதல் 2022-02-25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை, கொழும்பு 07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ள இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் மூன்றாவது மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா கட்டணத்தை அமைச்சின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைகளைச் சமர்ப்பிக்கும் போது விலைக்கோரல் பிணை முறியொன்றை இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பின்வரும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரிவு	விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி	செல்லுபடிக் கால எல்லை
பொருட்கள் மற்றும் சேவைகள்	ரூபா 100,000.00	2022-02-28 - 2022-04-08
விளம்பர நடவடிக்கைகள்	ரூபா 80,000.00	2022-02-28 - 2022-04-08

4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2022-02-28ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முன் தலைவர், சிறியளவான பெறுகைக் குழு, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்படி முகவரியில் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் பி.ப. 2.00 மணியின் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2022-02-28ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன், விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
6. 2022-02-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்படி முகவரியில் அமைந்துள்ள அமைச்சின் பெறுகைப் பிரிவில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
7. மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

- பணிப்பாளர், சிறிய வியாபார அபிவிருத்திப் பிரிவு - 011-2665058/0112662002

தலைவர்,
அமைச்சின் சிறியளவு பெறுகைக் குழு,
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு,
மூன்றாம் மாடி, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07.
2022-02-03

கேள்வி அறிவித்தல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
2022ஆம் வருடத்தில் கட்டுநாயக்காவிலுள்ள வானூர்திகளுக்கு எரிபொருள் மீள்நிரப்பும் நிலையத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகள் -
B/14/2022

மேற்குறிப்பிடப்பட்ட விடயத்திற்காக கீர்த்திவாய்ந்த அமைப்பிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுக்கொள்வார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவை(ரூ. 925.93 + 8% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுக்களுடனும் 30,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-02-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

குறிப்பு, வேலைத்தள விஜயமொன்று 2022-02-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கட்டுநாயக்க வானூர்தி எரிபொருள் மீள்நிரப்பும் நிலையத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதில் கட்டாயம் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தெளிவுபடுத்தல்கள் (ஏதேனும்) இருந்தால் 011-5756955/011 2251319 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக கட்டுநாயக்க முறைமாற்று அத்தியட்சகரை நாடலாம்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,
கொழும்பு-09,
தொலைபேசி: 011-5455331
தொலைநகல்: 011-5455424

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம

பெறுகை அறிவித்தல்

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையோடு இணைந்த நிறுவனங்களுக்கு ஸ்பில்ட் மாதிரியிலான வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல்

1. இதில் ஆர்வம் காட்டும் எந்வொரு விலைமனுதாரர், பிரதிநிதியொருவர் அல்லது பெயரிடப்படுபவர் பின்வருவனவற்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-02-07ஆம் திகதி முதல் 2022-02-28ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
   - கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல்
   - கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 1500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துதல்
   - வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றைச் சமர்ப்பித்தல்.
2. 2022-03-02ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தவிசாளருக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது வடகொழும்பு போதனா வைத்தியசாலையின் பிரதான கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
3. சகல கேள்விகளும் இரு பிரதிகளில் (''மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி'') வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் குறித்த திருத்தவேலையின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
4. சகல கேள்விகளும் வழங்கப்பட்ட கேள்வி ஆவணங்களின் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களில் மாத்திரம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறல்லாத கேள்விப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.
5. கேள்வியின் பெறுமதி 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் சகல கேள்விதாரர்களும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை இணைத்தல் வேண்டும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை,
ராகம.

தொலைபேசி: 0112959261/4
தொலைநகல்: 0112959266

இலங்கை துறைமுக அதிகார சபை

திருத்தம் பற்றிய அறிவித்தல்

1. 2022 ஜனவரி 27 மற்றும் 28ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022-02-22ஆம் திகதி திறக்கப்படுவதாக பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் கேள்விகள் முடிவுறுத்தப்படும் திகதி பின்வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

கேள்வி இல.	கேள்வியின் பெயர்	முன்பு பிரசுரிக்கப்பட்ட முடிவுறுத்தப்படும் திகதி	புதிய முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்
CMS/LP/21/PT/08/056	Spares for UD Nissan Engine Fitted with UD Nissan Prime Movers	2022-02-22 பி.ப. 1.30 மணி	2022-03-22 பி.ப. 1.30 மணி

ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

வழங்கல் பிரிவு,
இலங்கைத் துறைமுக அதிகார சபை,
இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01.

தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482409, 2483766
தொலைநகல் இல. 2381652, 2470443

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG BFJ-4908 TVS Apache, 2017, Motor Cy cle. கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 008947

SG YX-6 147 Bajaj 2012, SPQZ-8390 Bajaj 2 010, NW YA-196 4 Baja j, 2010 T h reewh eel கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 008955

WP Y W -1 446 Bajaj 2011, NW HU-3874 Baja j 2 003, WP QU-9462 Bajaj 2009, WP QM-4932 Bajaj 2007, Three wheel கூடி ய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 008952

வேலைவாய்ப்பு

320
வெற்றிடங்கள்
ஹோட்டல்கள், பேக்கரிகள்

ரோல்ஸ், ரொட்டி பாஸ் ஒருவர் உடன் தேவை. கூடிய சம்பளம். 0760947339. தமிழ் ம க்கள் விசேஷம். 009444

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

விலை மனுக்கோரல்

இலங்கை பொலிஸ்
பொது பாதுகாப்பு அமைச்சு

இலங்கை காவல்துறையின் கொள்முதல் குழுவின் தலைவரினால், பொலிஸ் தலைமையகத்தின் கட்டிடப் பிரிவின் பணிப்பாளரிடம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு பொருத்தமான தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

இல.	வேலைத்திட்டம்.	செயற்திட்ட காலம் (நாட்கள்)	மதிப்பீட்டுத் தொகை (ரூ. மில்லியன்)	மனு காப்புறுதிப் பிணைத் தொகை (ரூ.மில்லியன்)	CIDA தர நிறுவன பதிவு	மீளச்செலுத்தப் படாத தொகை (ரூ).
01.	நிக்கவெரட்டிய பொலிஸ் கல்லூரி முகலன் பயிற்சி மையத்தில் தனிநபர் வீட்டை புதுப்பித்தல். LA/B7/49/2020	120	3.4	51,100.00 மட்டும்.	C8 அல்லது C7	2,000.00
02	குண்டசாலை பொலிஸ் வைத்திய சாலையின் பிரதான கட்டிடத்தின் கூரையின் மறுசீரமைப்பு மற்றும் வர்ணம் பூசுதல் LA/B7/49/2020	120	4.9	73,800.00	C8 அல்லது C7 மட்டும்	3,000.00
03.	கண்டி சங்கிந்த பொலிஸ் பரிசோதகர் வீட்டை புதுப்பித்தல் LA/B7/39/2020	90	5.1	55,000.00	C7 அல்லது C6 மட்டும்	3 ,000.00
04.	ஹுங்கம பொலிஸ் நிலையததில் அமைந்துள்ள இரண்டு மாடி கட்டிடத்தின் புனரமைப்பு LA/B1(B)/147/17	150	6.9	140,500.00	C7 அல்லது C6 மட்டும்	2,000.00
05.	குண்டசாலை பொலிஸ் கல்லூரிக்கான தனிநபர் வீட்டின் கட்டுமானம் LA/B1/12/21	180	7.7	115,500.00	C7 அல்லது C6 மட்டும்	3,000.00
06.	வெண்ணப்புவ பொலிஸ் நிலையத்திற்கான தனிநபர் வீட்டின் கட்டுமானம் LA/B1/21/21	120	8.2	123,000.00	C7 அல்லது C6 மட்டும்	2,000.00
07.	மாரவில பொலிஸ் நிலையத்தின் பிரதான கட்டிட கூரையின் மறுசீரமைப்பு LA/B1(B)/82/20	210	8.3	124,500.00	C5 அல்லது C6 மட்டும்	5,000.00
08.	புத்தளம் பொலிஸ் அதிகாரியின் அலுவலக கட்டிடத்தை புதுப்பித்தல் மறுசீரமைப்பு LA/B1(B)/38/20	180	17.3	260,000.00	C5 அல்லது C6 மட்டும்	4,000.00
09.	தலைமன்னார் தலைமை பொலிஸ் நிலையத்தின் நிர்வாக கட்டிடத்தை புதுப்பித்தல் LA/B1(B)/56/19	180	16.2	244,000.00	C5 அல்லது C6 மட்டும்	4,500.00
10.	கொழும்பு 02 கிவி வீதியில் பொலிஸ் வளாகத்தினுள் கார்பட் இடுதல் LA/B1(B)/09/19	90	5.8	90,000.00	C7 அல்லது C6 மட்டும்	2,500.00
11.	மன்னார் பொலிஸ் நிலைய பரிசோதகரின் சாப்பாட்டறை மற்றும் தனிநபர் வீட்டை புதுப்பித்தல். மறுசீரமைப்பு LA/B1(B)/05/20	120	6.3	93,900.00	C7 அல்லது C6 மட்டும்	2,500.00
12.	நாராஹேன்பிட்ட பொலிஸ் நிலைய மின்சார பகுப்பு அமைப்பினை அமைத்தல் மற்றும் தொடர்புடைய பணிகள் LA/B1/34/21	119	7.1	110,000.00	EM 03 அல்லது மேல்	2,000.00
13.	வெலிகம பொலிஸ் நிலைய கட்டிடத்தில் நீர்நிலை அமைப்பினை அமைத்தல் LA/B1/70/21	120	20.8	350,000.00	C5 அல்லது C6 மட்டும்	6,000.00

1. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறுகின்றது. இந்த திட்டங்களுக்கு பொது நிதி சுற்றறிக்கை எண் **04/2016 (ii)** விதிகள் பொருந்தும், மேலும் அந்த சுற்றறிக்கையின் விதிகளின்படி மாகாணத்திற்குள் பதிவுசெய்யப்பட்ட மனுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மேலே உள்ள அட்டவணையின் எண். 03 முதல் 13 வரையிலான திட்டங்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டவை. அத்தகைய திட்டங்களுக்கான மனுக்களை கொள்வனவு செய்ய விரும்பும் மனுதாரர்கள் மனு திறக்கும் நேரத்தில் மனு ஆவணங்களுடன் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்த PCA/03 சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
3. கொழும்பு 01 பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள பணிப்பாளர் (கட்டிடம்) அலுவலக தொலைப்பேசி எண் **0112013184** இற்கு அழைப்பினை ஏற்படுத்தி மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதுடன், மனு ஆவணங்களை, வாரத்தில் அலுவலக நாட்களில் **2022.02.07** ஆம் திகதி முதல் **2022.02.28** வரை காலை **09.00** மணி முதல் **15.00** மணி நேரம் வரை இலவசமாக பரிசீலனை செய்ய முடியும். மீள் செலுத்தப்படாத கட்டணத்தை பணிப்பாளருக்கு (கட்டிடம்) செலுத்துவதன் மூலம் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்
4. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **91 நாட்கள்** வரையாகும்.
5. மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு நிகரான மனு பாதுகாப்பு செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்து மட்டுமே பெற்றுக்கொண்ட "காவல் துறைத் தலைவர்" (IGP) என்ற பெயரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவை **2022.06.28** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **119** நாட்கள் வரையாகும்).
6. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **2022.03.02 ஆம் திகதி 10.00** மணித்தியாலங்களுக்கு முன் **கொழும்பு 01 "பொலிஸ் தலைமையகம்" ஐந்தாம் மாடியில் அமைந்துள்ள கணக்காளர் (கட்டிடம்) அலுவலகத்தில்** வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். இலங்கை பொலிஸ் கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதியானதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

இலங்கை காவல்துறையின் கொள்முதல் குழு சார்பாக,
பணிப்பாளர் (கட்டிடம்),
பொலீஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

பெறுகை அறிவித்தல்

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் சமையலறைக்கான வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விலைமனுக்கோரல் - 2022

கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய தங்கும் விடுதிகளின் சமையலறைக்காக 01 முதல் 10 வரை பின்வரும் வகுதிகளின் கீழ் தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

I. அரிசி வகைகள்
II. தானிய வகைகள்
III. பலசரக்குப் பொருட்கள்
IV. குரோசரிப் பொருட்கள் - I (உணவுப் பொருட்கள்), II (உணவுப் பொருட்கள் அல்லாதவை)
V. யோகட் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகள்
VI. கருவாடு
VII. இறைச்சி வகைகள் மற்றும் முட்டைகள் மற்றும் மீன்கள்
VIII. மரக்கறிகள்
IX. பழவகைகள்
X. பேக்கரி உற்பத்திகள்

02) இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்குத் தகைமை பெறுவதற்கான வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர்கள் பட்டியல்படுத்தப்படாதவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் உணவுப் பொருள் உற்பத்தி / வழங்குதல் தொடர்பில் வியாபாரப் பதிவு மற்றும் கம்பனிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் உணவுப் பொருட்கள் வழங்குதல் தொடர்பில் இரண்டு (02) வருட அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதை உறுதி செய்வதற்கான ஆவணங்களின் பிரதிகளை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் 24 மணித்தியாலங்களுக்குள் உணவுப் பொருட்களை விடுதிகளின் சமையலறைக்குக் கொண்டு வந்து வழங்கக்கூடிய இயலுமை கொண்டவர்களாகவிருத்தல் வேண்டும்.

03) விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து பொருட்களையும் அல்லது தெரிவு செய்யப்பட்ட வகுதியொன்றுக்காக மட்டும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வகுதி மற்றும் வகுதிகளில் உள்ளடங்கியுள்ள சகல பொருட்களுக்காகவும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04) விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் 2022.02.07ஆம் திகதி முதல் 2022.02.28ஆம் திகதி வரையான (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) அலுவலக நாட்களில் இயையுடைய பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 0112-697001 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக மேலதிகத் தகவல்களைப் விசாரித்தறியலாம்.

05) சகல விலைமனுதாரர்களும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியிலும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட விலைமனுப் காப்பொன்றை (பிணை முறியொன்றை) பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதியின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தப் பிணை முறி 2022.06.18ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

06) சகல விலைமனுக்களும் ஒப்பந்தம் கையளிக்கப்படும் தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு ஏற்புடையதாகவிருக்கும். அரசாங்கத்தினால் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ள விலைகளின் கீழ் பொருட்களை வழங்குதல் வேண்டும். பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விலையை விட 10% சந்தை விலை அதிகரிக்கும் வேளையில் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுடன் கலந்துரையாடி 03 மாதங்களுக்கு ஒரு முறை விலைகள் தொடர்பான இணக்கப்பாடொன்றுக்கு வரலாம்.

07) சகல விலைமனுக்களும் 2022-12-31ஆம் திகதி வரை மட்டும் செல்லுபடியாதல் வேண்டும்.

08) உரிய மாதிரிப் படிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ''மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி'' என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விலைமனுக்களை 2022.03.02ஆம் திகதி பி.ப. 2.00 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''தங்கும் விடுதி சமையலறைகளுக்கு உணவு வழங்குதல் - 2022 வருடத்திற்கான விலைமனுக்கள்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்களை பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு -07 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கப்படும் விலைமனுக்களை விளையாட்டு அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

09) விலைமனுக்கள் 2022.03.02ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் அன்றைய தினம் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

ஒப்பந்த இலக்கம்	விபரங்கள்	விலைமனுப் பிணை (முறி)	
DSD/P/3/ Suppliers for Hostel K.2022	விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் தங்கும் விடுதிகளின் சமையலறைக்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரல் - 2022	அரிசி	- ரூபா 66,000.00
		தானிய வகைகள்	- ரூபா 33,000.00
		பலசரக்குப் பொருட்கள்	- ரூபா 20,000.00
		குரோசரிப் பொருட்கள் - (உணவுப் பொருட்கள்)	- ரூபா 150,000.00
		II (உணவு பொருட்கள் அல்லாதவை)	- ரூபா 40,000.00
		யோகட் மற்றும் பால் உற்பத்திகள்	- ரூபா 77,000.00
		இறைச்சி மற்றும் முட்டை, மீன்	- ரூபா 259,000.00
		கருவாடு வகைகள்	- ரூபா 11,000.00
		மரக்கறி	- ரூபா 73,000.00
		பழவகைகள்	- ரூபா 118,000.00
		பேக்கரி உற்பத்திகள்	- ரூபா 100,000.00

பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,
இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு - 07.
தொலைபேசி: 0112 697934
தொலைநகல்: 0112 695822

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

சான்றிதழ் தாள்களை (Certificate Papers) வழங்குவதற்கான பெறுகை 2022

ஒப்பந்த இல. 04/04/10/2022

1. பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சான்றிதழ் தாள்களை வழங்குவதற்கான பெறுகை 2022 எனும் பெறுகைக்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

#	விலைக்கோரலின் பெயர்	எண்ணிக்கை
01	Vellum Laid (Conqueror or equivalent) - GSM 100 ± 2, 17” x 24”	ஒவ்வொன்றிலும் 500 தாள்கள் கொண்ட 30 ரிம்கள்
02	White Gold (Curious Metallics or equivalent) - GSM 120 ± 2 , 70cm x. 100cm	ஒவ்வொன்றிலும் 250 தாள்கள் கொண்ட 200 ரிம்கள்
03	Brilliant White (Conqueror or equivalent) - GSM 100± 2, 17” x 24”	ஒவ்வொன்றிலும் 500 தாள்கள் கொண்ட 20 ரிம்கள்
04	File Cover -GSM 300± 2	ஒவ்வொன்றிலும் 100 தாள்கள் கொண்ட 1600 பக்கெட்டுகள்

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் சான்றிதழ்கள் அச்சிடும் தாள்களை வழங்குவதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2786200 அல்லது 011-2785219) மற்றும் 2022-02-25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2022-02-25ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படும் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 5300.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.)
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2022-05-30) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் இலங்கை ரூபாவிற்கான (180,000.00 இ.ரூ.) விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2022-06-29ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
9 விலைமனுக்கள் 2022-02-28ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘சான்றிதழ் தாள்களை வழங்குவதற்கான பெறுகை - 2022”, ஒப்பந்த இல.: 4/4/10/2022 என குறிப்பிடப்படல் வேண்டும்.
11. பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் ஏற்படுத்துதல் அல்லது பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற எவ்விதக் கடப்பாடும் இன்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும் எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்கோரல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கும் எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சைகள் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
15-07-2019.

விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சு, கிழக்கு மாகாணம்

கேள்வி கோரல்

கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் விடயம் தொடர்பான பெறுகைக்கான கேள்வி கோரப்படுகின்றது.

கேள்வி இல.	விபரம்	எண்ணிக்கை
GOSL/EP/06/FI/ Procurement/ 2022	**மீன்பிடி உபகரணங்கள்**	
	நீரின் தரம் பார்க்கும் கருவி	02 set
	மீன்பிடி வலைகள்	880
	வேலி வலைகள்	2450 மீற்றர்
	பறவைகள் தடுப்பு வலை	2045 மீற்றர்
	புகை கருவாட்டுப் பெட்டி	02
	நண்டு கூடு	02
	நன்னீர் மீன்பிடித் தோணி	35
	ஒட்சிசன் வாயு சிலிண்டர்	01
	Equipment for Repairing Culture Facilities	
	கடற் பாசி விதை வங்கி	01

மேற்படி கேள்வி கோரலுக்கிணங்க கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சில் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதற்காக இலங்கை வங்கி, திருகோணமலை பிரதான கிளையில் (கிளை இல: 006) செயலாளர், விவசாய அமைச்சு என்ற பெயரில் கணக்கு இல. 0005849124 இற்கு மீளளிக்க முடியாத வைப்புப் பணமாக ரூபா 1,000.00 செலுத்தி அப்பற்றுச்சீட்டை சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை 2022.02.07 தொடக்கம் 2022.02.27 வரை அலுவலக கடமை நாட்களில் (காலை 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணிவரை) அமைச்சிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்விகள் மூடப்பட்ட உறையிலிட்டு 2022.02.28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், அமைச்சு பெறுகைக்குழு, விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சு, கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தையும் அதன் உபதலைப்பையும் எழுதி அனுப்பவும்).

கேள்வி ஆவணங்கள் 2022.02.28ஆம் திகதி பி.ப. 2.01 மணிக்கு திருகோணமலை, கன்னியா வீதி, வரோதயநகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சில் திறக்கப்படும். இதற்காக கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் உரிய அத்தாட்சி ஆவணத்துடன் பங்குபற்ற முடியும்.

கேள்வி ஆவணங்களை அலுவலக நேரத்தில் திருகோணமலை கன்னியாவீதி, வரோதயநகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சில் இலவசமாக பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களை கன்னியா வீதி, வரோதயநகர் திருகோணமலை கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சின் மீன்பிடிப் பிரிவில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைபேசி இல: 026 - 2222184

தொலைநகல் இல: 026 - 2220393, 026-2222184

கலாமதி பத்மராஜா,
தலைவர் பெறுகைக்குழு,
விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி,
மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சு,
கிழக்கு மாகாணம்.
கன்னியாவீதி, வரோதயநகர்,
திருகோணமலை.

சக்தி மற்றும் சுற்றாடல் பற்றிய ஊடகப் பாடநெறி – மூன்றாவது குழு

சக்தி மற்றும் சுற்றாடல் ஆகியன பற்றிய அறிவுடைய ஊடகவியலாளர்களை உருவாக்கும் நோக்கில் சக்திப் பாதுகாப்பு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி பற்றிய ஒரு வருட காலப் பாடநெறியொன்றை நடத்த நிலைபெறுதகு சக்தி அதிகார சபையினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இலவசமாக நடத்தப்படுகின்ற இந்த பாடநெறி ஓர வருட காலத்திற்கு இலவசமாக நடத்தப்படும்: ஒரு மாதத்திற்கு ஒரு நாள் வீதம்
- சக்தி, சக்திப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான விரிவுரைகள் மற்றும் விஜயங்கள் (மின்னுற்பத்தி நிலையங்கள்/ உரிய நிறுவனங்கள்*) என்பன இந்தப் பாடநெறியில் உள்ளடங்கும்.
- உரிய துறையில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களினால் விரிவுரைகள் நடத்தப்படும். இந்தப் பாடநெறிக்கு மட்டுப்பட்டளவு ஊடகவியலாளர்களை சேர்த்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த பாடநெறிக்கு, சுயாதீன ஊடகவியலாளர்களும் விண்ணப்பிக்கலாம்.
- பங்குபற்றும் ஒவ்பொரு ஊடகவியலாளர்களுக்கும் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களின் சுயவிபரமும் தொழில் விபரமும் அடங்கிய ஒரு விண்ணப்பப் படிவத்தை 2022ஆம் ஆண்டு மாசி (பெப்ரவரி) மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் கீழ்ககாணும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0112575030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

பணிப்பாளர் நாயகம்.
இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை
இலக்கம் 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,
கொழும்பு 07

N-18

பொருட் கொள்வனவு அறிவித்தல்

அரசாங்க அச்சுத் திணைக்களம்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பொருட் கொள்வனவுத் தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருகின்றார்.

Items.

01. CTP Thermal (Komori) 605mm x 760mm - 0.25mm - 0.30mm - 3,000 Nos.
02. CTP Thermal Plate (SM74) 605mmx745mm - 0.25mm-0.30mm - 3,000 Nos.
03. CTP Thermal Plate (SORD) 715mmx915mm - 0.25mm - 0.30 mm - 1,000 Nos.
04. CTP Thermal Plate (SM102) 770mmx1030mm - 0.25mm-0.30mm - 500 Nos.
05. CTP Thermal Plate (KORD) 550mmx650mm - 0.25mm-0.30mm - 1,000 Nos.
06. CTP Thermal Plate (Computer Form Printing Machine) size 400mm x 510mm - 0.14mm - 500 Nos.
07. Plate Developer - 320 Ltr.
08. Plate Replenisher - 500 Ltr.
09. Plate Gum - 200 Ltr.

Opening Date : 21.02.2022

Bid Reference No : SCP02/NCB07/TH/Plate/2022-7

விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம் :- 2022.02.21ஆந் திகதி

பி.ப. 2.00 மணி வரையாகும்.

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000/- கொண்டதும் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலை மனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்கள், கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கங்கானி லியனகே,
பொருட் கொள்வனவும் தலைவர்,

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு-08.
2022.02.07
தொலைபேசி - 011-2694898
இணையதளம் - www.documents.gov.lk

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை அறிவித்தல்

2022 ஆம் ஆண்டில் வாகனங்களின் தகர வேலை மற்றும் பெயிண்ட் பூசுதல் ஆகியவற்றிற்காக ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் வாகனங்களுக்கான வேலைகளுக்காக தகர வேலை மற்றும் பெயிண்ட் பூசுதல் ஆகியவற்றிற்காக ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வாகனங்களின் அனைத்து தகர வேலைகள் மற்றும் பெயிண்ட் பூசுதல் ஆகியன பின்வரும் நிபந்தனைகளின் கீழ் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை இன் இடப்பரப்பிலேயே நிறைவேற்றப்படல் வேண்டும்.

i. மனிதவலு, தேவைப்படும் அனைத்து கருவிகள், வெல்டிங் கியர் போன்றவைகளை ஒப்பந்தக்காரரே வழங்கல் வேண்டும்.

2022.02.22 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் கிடைக்கும் வகையில் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களுடன் பின்வரும் தகவலை விண்ணப்பங்களுடன் அனுப்புதல் வேண்டும்.

i. ஒப்பந்தக்காரரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள்.
ii. உரித்தான சான்றிதழ்களுடன் வாகனங்களின் தகர வேலை மற்றும் பெயிண்ட் பூசுதல் ஆகியவற்றின் அனுபவம்.
iii. முன்னைய அனுபவம் தொடர்பாக இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள்.
iv. வாகனங்களின் விபத்து பழுதுபார்த்தல்களை கையேற்பதற்காக காப்புறுதி கம்பனிகள்/ கூட்டுத்தாபனங்களுடன் தம்மை பதிவு செய்யுமாறு ஒப்பந்தக்காரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும்/ அல்லது அவர்களின் குடும்ப அங்கத்தினர்கள் ஆகியோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்கள் அல்லர்.

பிரதான பொறியியலாளர் (பொறிமுறை பொறித்தொகுதி)
பொறிமுறை பொறித்தொகுதி பொறியியல் பிரிவு
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை
இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி
கொழும்பு.

தொலைபேசி : 2482960
தொலைநகல் : 2324071

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

2022 பெப்ரவரி 09ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 77,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

முதிர்வுக் காலம்	91 நாட்கள்	182 நாட்கள்	364 நாட்கள்	மொத்தம்
ஐஎஸ்ஐஎன்*	LKA09122E136	LKA18222H128	LKA36423B107	
முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.)	37,000	15,000	25,000	77,000

ஏல விற்பனைத் திகதி	:	2022 பெப்ரவரி 09
தீர்ப்பனவுத் திகதி	:	2022 பெப்ரவரி 11
வழங்கப்படும் திகதி	:	2022 பெப்ரவரி 11
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும்	:	2022 பெப்ரவரி 09, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை	:	ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட்	2206297
இலங்கை வங்கி	2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட்	2317777
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி	2639883
என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட்	2425010
மக்கள் வங்கி	2206783
சம்பத் வங்கி பிஎல்சி	2305842
செலான் வங்கி பிஎல்சி	2456340
வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட்	2675096

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

எம். இசட். எம். ஆசிம்
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்

வழங்கும் அலுவலகம்:

பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

பெறுகை அறிவித்தல்

மேல் மாகாண சுகாதாரத் திணைக்களம்

ஹோமாகம ஆதார வைத்தியசாலை

உள்ளக மின்சார பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்குதல் 2022/2023

2022/2023ஆம் வருடங்களினுள் வைத்தியசாலையின் உள்ளக மின்சார முறைமையைப் பராமரிப்பதற்காக அந்தத் துறையில் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. ICTAD (CIDA) பதிவானது குறைந்தபட்சம் C8 நிலையில் இருத்தல் வேண்டும்.
3. அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வெற்றிகரமாக மின்சார பராமரிப்பு வேலைகளை மேற்கொண்டமை தொடர்பில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. இது தொடர்பில் ஆர்வம் காட்டுபவர்கள் விலைமனுக்களுக்காக 2,000.00 ரூபா மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தை ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-02-07ஆம் திகதி முதல் 2022-02-28ஆம் திகதி வரையான சாதாரண கடமை நேரங்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. விலைமனுக்களுடன் ஹோமாகம, ஆதார வைத்தியசாலை, மருத்துவ அத்தியட்சகருக்கு நாற்பதாயிரம் ரூபாவை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட மே.மா.1 பற்றுச்சீட்டையும், அத்துடன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் 2022-02-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் இந்த அலுவலகத்திற்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் மின்சார பராமரிப்பு வேலைகள் 2022/2023” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
6. 2022-02-28ஆம் திகதி மு.ப. 10.00 மணி கடந்ததும் உடனடியாக ஹோமாகம வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
7. இயைபுடைய விலைமனுக்களை பெறுகை சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் ஏற்றுக்கொள்ளும் மற்றும் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
ஆதார வைத்தியசாலை,
ஹோமாகம.
தொலைபேசி: 011-2855200, 011-2098824, 011-2098825

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Sunday Observer ADZ
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

Any Single Newspaper	Two Newspapers	Three Newspapers
ரூ. 500/- (Except Thinakaran Varamanjari)	ரூ. 700/- (Except Thinakaran Varamanjari)	ரூ. 850/-

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

விலைமனுக்களுக்கான அழைப்பு

சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு - மத்திய மாகாணம்

பெறுகை அமைப்பு : **சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், கண்டி**
செயற்றிட்டத்தின் பெயர் : ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுவூட்டல் செயற்றிட்டம், உலக வங்கி.
செயற்றிட்ட ID : **P 163721**
பெறுகைத் தலைப்பு : மருத்துவமற்ற உபகரணங்களின் பெறுகை
ஒப்பந்த இல. : **CPC/RDHS/KY/F13/NCB/1/2022**
பிரசுரிப்புத் திகதி : 2022.02.07

01. நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் அதிக ஆபத்தான சனத்தொகையுள்ள பகுதிகளில் தொற்றா நோய்களை அடையாளம் காணல் மற்றும் முகாமைத்துவ வலியுறுத்தலுடன் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்படுத்தல் மற்றும் தரத்தை அதிகரிக்கும் இலக்குடன் இலங்கையில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுவூட்டல் செயற்றிட்டமானது அமுல்நடாத்தப்படுகின்றது.
02. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மருத்துவமல்லாத உபகரணங்களின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கண்டி, பிராந்திய சுகாதார சேவைகளின் பணிப்பாளரின் அலுவலக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
03. விலைமனுதாரர்களின் தகைமை மற்றும் தகுதித்தன்மை தேவைப்பாடுகள் ஆகியன விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன.
04. ஒவ்வொரு வகுதிக்கும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரியில் குறிப்பிட்டுள்ளவருக்கு 2022.02.07 ஆம் திகதியிலிருந்து 2022.02.25 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
05. ஆர்வம், தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெறுகை அலுவலர் திரு. உபாலி குணவர்தனவிடமிருந்து பெற்று வேலை நாட்களில் மு.ப. 10 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் கண்டி, சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் நிதிப் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். (தொலைபேசி: 0714415335/0812236452. மின்னஞ்சல் முகவரி: **rdhskandysupply123@gmail.com)**
06. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் புகழ்வாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் கண்டி, சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதுமாகவிருத்தல் வேண்டும் அல்லது கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொகையை கண்டி, சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கண்டி, சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகளின் மாகாண அமைச்சின் கேட்போர் கூடத்தில் 2022.02.15 ஆம திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
08. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.02.28 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ''தலைவர், பெறுகைக் குழு, சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், த.பெட்டி 56, எஹெலப்பொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கண்டி, சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வகுதிப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் மற்றும் "Quotation for Non-Medical Equipments" என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.
09. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கீழேயுள்ள முகவரியில் நடைபெறவுள்ள விலைமனுக்களின் திறத்தலுக்கு நேரடியாக சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளின் மூடுதலின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
10. சமர்ப்பிக்கப்படும் அனைத்து விலைமனுக்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படுமென்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

தொ. இல.	அம்சத்தின் பெயர்	அலகுகளின் எண்ணிக்கை	மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் (ரூபாவில்)	விலைமனுப்பிணை (ரூபாவில்)	
				விலைமனுப் பிணை	ரொக்கப்பண வைப்பு
வகுதி இல. 01: அலுவலக தளபாடம் (1)					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-1/2022					
1.1	கண்ணாடி கதவுகளுடனான உருக்கு கப்போட்	175	2500.00	61,250.00	30,625.00
வகுதி இல. 02: அலுவலக தளபாடம் (2)					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-2/2022					
2.1	Safety Locker with Stand	5	1000.00	5,000.00	2,500.00
வகுதி இல. 03: அலுவலக தளபாடம் (3)					
ஒபந்த இல: CPC/RDHS/KY/F13/NCB/1-3/2022					
3.1	நிறைவேற்று அலுவலகருக்கான மேசை	20	2500.00	44600.00	22300.00
3.2	கணினி மேசை	30			
3.3	இலாச்சிகளுடனான அலுவலக மேசை	180			
வகுதி இல. 04: அலுவலக தளபாடம் (4)					
ஒப்பந்த இல.:CPC/RDHS/KY/F13/NCB/1-4/2022					
4.1	ஹைபிரிட் கதிரை	300	2500.00	57000.00	28500.00
4.2	கையுடனான குஷன் கதிரை	180			
4.3	கையில்லாத குஷன் கதிரை	180			
வகுதி இல.: 05: வைத்தியசாலை தளபாடம்					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-5/2022					
5.1	பெட் சையிட் லொக்கர்	200	2500.00	60000.00	30000.00
வகுதி இல. 06: வைத்தியசாலை பணிநிலை அலுவலர்களுக்கான தளபாடம்					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-6/2022					
6.1	பணிநிலை அலுவலர்களுக்கான மெத்தையுடனான கட்டில்	50	1000.00	18100.00	9050.00
6.2	டவல் ராக்கை	31			
வகுதி இல. 07: மேசை கணினி					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-7/2022					
7.1	மேசை கணினி	40	3000.00	100000.00	50000.00
வகுதி இல. 08: மடிக்கணினி மற்றும் துணைப்பாகங்கள்					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-8/2022					
8.1	மடிக்கணினி	20	2500.00	57100.00	28550.00
8.2	கணனி மொனிடர்	5			
8.3	யுபிஎஸ் 300வி	60			
8.4	யுபிஎஸ். 2கேவிஏ	4			
வகுதி இல.: 09: மின்சார உபகரணம் (1)					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-9/2022					
9.1	வளிச் சீராக்கல் இயந்திரம்	10	2500.00	37500.00	18750.00
9.2	பெடெஸ்டல் விசிறி	20			
9.3	நிழற்படப்பிரதியாக்கல் இயந்திரம்	5			
9.4	குளிரூட்டி	10			
9.5	கழுவும் இயந்திரம்	3			
வகுதி இல. 10: மின்சார உபகரணம் (2)					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-10/2022					
10.1	நீர் மோட்டர்	2	1000.00	8400.00	4200.00
10.2	புல் வெட்டும் இயந்திரம்	12			
வகுதி இல. 11: நீர் தாங்கி					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-11/2022					
11.1	நீர் தாங்கி 5000 லீட்டர்	2	1000.00	3700.00	1850.00
11.2	நீர் தாங்கி 2000 லீட்டர்	4			
11.3	நீர் தாங்கி 1000 லீட்டர்	5			
வகுதி இல. 12: மின்பிறப்பாக்கி (குறைந்த அழுத்தம்)					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-12/2022					
12.1	மின்பிறப்பாக்கி 7 கேவிஏ	5	3000.00	75000.00	37500.00
வகுதி இல.: 13: மின்பிறப்பாக்கி (உயர் அழுத்தம்)					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-13/2022					
13.1	மின்பிறப்பாக்கி 15 கேவிஏ	1	2500.00	20000.00	10000.00
வகுதி இல. 14: காட்சிப்படுத்தும் போட்கள்					
ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13/NCB/1-14/2022					
14.1	அறிவித்தல் பலகை	31	1000.00	4650.00	2325.00
14.2	வெள்ளைப் பலகை	31			

தலைவர்,
பெறுகைக் குழு,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அலுவலகம்,
ஏஹெலப்பொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி.

it's what you want
www.adz.lk
Hotline: 0112 429 359 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

கம்பளை நகர சபை

கேள்வி அறிவித்தல்

2022ஆம் வருடத்தினுள் கம்பளை நகர சபைக்கு சொந்தமான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீன் கடைகளில் விற்பனை உரிமையை குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன

02. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2022-02-08ஆம் திகதி தொடக்கம் 2022-02-28ஆம் திகதி வரை மு.ப. 10.30 மணி வரை மேற்கொள்ளப்படும்.
03. இந்த அட்டவணையில் கூறப்பட்டவாறு தொடர் இலக்கம் மூலம் தரப்பட்டுள்ள ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறாக கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்வி நிபந்தனைகளை உள்ளடக்கிய இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப் படிவத் தொகுதியொன்றை 1000.00 ரூபா செலுத்தி 2022-02-07ஆம் திகதி தொடக்கம் 2022-02-27ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை கம்பளை நகர சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (2022-02-26 மற்றும் 27 இரு நாட்களிலும் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளதால் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை கேள்வி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பி.ப. 3.30 மணியின் பின் விண்ணப்பங்கள் வழங்கப்படுதல் முடிவுறுத்தப்படும்.)
05. 5000.00 ரூபா தொகையை மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகையாக கம்பளை நகர சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
06. குறித்த பிணைத் தொகையை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதி, விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் முறையாக பூர்த்தி செய்த கேள்வி விண்ணப்பப்படிவத்தின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறாக உறைகளில் இட்டு முத்திரை இட்டு அந்த உறைகள் இரண்டையும் வேறொரு உறையில் இட்டு முத்திரை இட்டு அதன் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கடையின் இலக்கத்தை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் **"தலைவர், கம்பளை நகர சபை" எனும் முகவரிக்கு** 2022-02-28ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். அவ்வாறில்லையேல் மேலுள்ளவாறு தயாரிக்கப்பட்ட ஆவணங்களை நகர சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் மேற்காட்டப்பட்டுள்ள நேரத்தினுள் உள்ளிடல் வேண்டும்.
07. கேள்விப்படிவங்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின்னர் கேள்விப் பெட்டி முத்திரையிடப்படும். அதன் பின்னர் 2022-02-28ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விக் குழு கிடைத்திருக்கும் அனைத்து கேள்விகளும் திறக்கப்படும் என்பதோடு, ஒவ்வொரு கேள்விதாரர்களும் விண்ணப்பித்துள்ள கடை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த தொகை என்பன பகிரங்கமாக வாசிக்கப்படும். விற்பனை உரிமையை குத்தகை விடுவது தொடர்பிலான தீர்மானம் வெற்றிபெற்ற கேள்விதாரருக்கு அச்சந்தர்ப்பத்திலேயே அறிவிக்கப்படும். அதனால் அன்றைய தினத்தில் கேள்விதாரர் அல்லது பிரதிநிதி ஒருவர் வருகை தருவது அவசியமாகும்.
08. வெற்றிபெற்ற கேள்விமனுதாரர்கள் மூலம்,
    - மீன் கடையின் நீர் மற்றும் மின்சாரத்திற்காக 20,000.00 பிணைத் தொகை ஒன்றையும், அந்தந்த கடைகள் தொடர்பில் விண்ணப்பித்த தொகையின் (25%) முத்திரைக் கட்டணத்துடன், பாதுகாப்பு பிணை வைப்பாக அன்றைய திகதியிலேயே கம்பளை நகர சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
    - ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் எஞ்சிய 75% தொகையை முத்திரைக் கட்டணத்துடன் 2022.08.31ஆம் திகதிக்கு முன்னர் சமமான 06 தவணைகளில் மாதாந்தம் கம்பளை நகர சபைக்கு செலுத்துதல் வேண்டும். முதல் தவணையை 2022-03-10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என்பதோடு, அடுத்து மாதம் 10ஆம் திகதிக்கு பின்னர் தாமதித்தால் 5% தண்டப்பணம் அறவிடப்படும்.

❖ தபாலில் ஏற்படுகின்ற தாமதங்கள் தொடர்பில் கம்பளை நகர சபை பொறுப்பேற்காது.
❖ கேள்விக் குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

பீ.எம். சமன்த அருண குமார
தலைவர்,
கேள்விக் குழு,
கம்பளை நகர சபை.

அட்டவணை

	இடம்	கடை இலக்கம்	வியாபாரம்	2022 குறைந்தபட்ச கேள்வி	மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை	மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம்
01	பொதுச் சந்தை	30	மீன்	166,666.00	5000.00	1000
02	பொதுச் சந்தை	31	மீன்	250,000.00	5000.00	1000
03	பொதுச் சந்தை	32	மீன்	250,000.00	5000.00	1000
04	பொதுச் சந்தை	33	மீன்	250,000.00	5000.00	1000
05	பொதுச் சந்தை	34	மீன்	250,000.00	5000.00	1000

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
பெருந்தெருக்கள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகார சபை

"செழிப்பின் நோக்கு மற்றும் மகிமை" எனும் அரசாங்கத்தின் கொள்கையின் கீழ் 100,000 கி.மீற்றர் மாற்று வீதிகள் முறைமையை செயற்படுத்துதல்

விலைமனுக்களுக்கான அழைப்பு

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள அயகம - குக்குலேகம வீதி மற்றும் இரத்தினபுரி நகர மேம்பாட்டு செயற்றிட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மாகாண பணிப்பாளர் அலுவலகம் (சப்ரகமுவ), பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

உருப்படி இல.	ஒப்பந்த இல.	செயற்றிட்டத்தின் உருப்படி	எண்ணிக்கை	ஒப்பந்தக் காலம்	விலைக் கோரல் பிணை முறி (ரூபா)
அயகம - குக்குலேகம வீதி					
1	SAB/RAD/PD/TEN/ RAT/2022/03	ABC பொருட்களை வழங்குதல்	500,000	1 வருடம்	100,000.00
இரத்தினபுரி நகர மேம்பாட்டு செயற்றிட்டம்					
2	SAB/RAD/PD/TEN/ RAT/2022/04	இன்டர்லொக் புளொக் கற்களை வழங்குதல் (220x110x80) G40	சிவப்பு - 300,000 கறுப்பு - 20,000	6 மாதங்கள்	125,000.00
3	SAB/RAD/PD/TEN/ RAT/2022/05	நடைபாதை ஓரக் கற்களை (Kerb) வழங்குதல்	Flat - 6,000 Drop - 500	6 மாதங்கள்	35,000.00
4	SAB/RAD/PD/TEN/ RAT/2022/06	நடைபாதை ஓரக் கற்களை (Kerb) மூடும் ஸ்லெப் (800x600x100)	(சிவப்பு) 2000 (எம்போஸ்ட் வகை)	6 மாதங்கள்	45,000.00
5	SAB/RAD/PD/TEN/ RAT/2022/07	ABC பொருட்களை வழங்குதல்	$2500m^3$	6 மாதங்கள்	30,000.00
6	SAB/RAD/PD/TEN/ RAT/2022/08	கற் துகள்கள் வழங்குதல்	$1000m^3$	6 மாதங்கள்	10,000.00

2. தேசிய போட்டி ரீதியான நடைமுறை மூலம் விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இலங்கை அரசாங்கத்தில் வியாபாரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்கள் மற்றும் இலவசமாக விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்தல் என்பவற்றை பின்வரும் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் மேற்கொள்ளலாம்.

   மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் (சப்ரகமுவ), வீதி அபிவிருத்தி அதிகார சபை, இரத்தினபுரி.

   (தொலைபேசி இல. 045-2222608 தொலைநகல்: 045-2222471)
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-02-07ஆம் திகதி முதல் 2022-02-28ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 3000.00 ரூபா (வரிகள் உட்பட) செலுத்தி இரத்தினபுரி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் (சப்ரகமுவ) அவர்களுக்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிட்டு 2022-03-02ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, மாகாண பணிப்பாளர் அலுவலகம் (சப்ரகமுவ), வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 04, பண்டாரநாயக்க மாவத்தை, இரத்தினபுரி'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

   விலைமனுக்கள் 2022-06-02ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. சகல விலைமனுக்களுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணை முறியொன்றை 2022-06-30ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் ''மாகாண பணிப்பாளர் (சப்ரகமுவ), வீதி அபிவிருத்தி அதிகார சபை'' எனும் முகவரிக்குப் பெற்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
மாகாண பணிப்பாளரின் அலுவலகம் (சப்ரகமுவ),
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
இரத்தினபுரி.

கண்டி மாநகர சபை

பிரேரணை இல. CPC/KMC/FD/M06/TPB/01

தலைப்பு - கண்டி முஸ்லிம் பள்ளிவாசல் வீதி, 24ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கண்டி மாநகர சபைக்குச் சொந்தமான மாநகர வாகனத் தரிப்பிடத்தின் மேல் மாடியில் நூற்றாண்டு பூங்காவில் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் / சுயதொழிலாளர்களின் உற்பத்தி விற்பனையை மேம்படுத்துவதற்காக தொழில்முயற்சியாளர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோருதல்

01. கண்டி மாநகர சபைக்குரித்தான மாநகர வாகனத் தரிப்பிடத்தில் அமைக்கப்பட்டுள்ள நூற்றாண்டு பூங்காவில் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் / சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர் தமது உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக விஸ்தரிப்பதற்காக அவர்களின் உற்பத்தியை விற்பனை செய்தல் மற்றும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உற்பத்தி இயல்புகளுக்காக உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் / உற்பத்தியாளர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் கண்டி மாநகர சபையின் பிரதான மாநகர கணக்காளருக்கு இத்துடன் உள்ள விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம்.

03. பின்வரும் அனுமதிக்கப்பட்ட உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும்.
   I. உள்நாட்டு கைப்பணிப் பொருட்கள்
   II. பத்திக் மற்றும் உள்நாட்டு சிறிய கைத்தொழில் உற்பத்திகள்
   III. பித்தளைப் பொருட்கள் உற்பத்தி விற்பனை
   IV. லாக்ஷா/கோரைப்புல் கைத்தொழில் உற்பத்தி விற்பனை
   V. மரச் சிற்ப ஆக்கங்களின் விற்பனை
   VI. சித்திரப் படைப்புகளின் விற்பனை
   VII. உள்நாட்டில் பொதிசெய்யப்பட்ட உணவு விற்பனை
   VIII. உள்நாட்டில் பதப்படுத்தப்பட்ட தோற்பொருள் உற்பத்தி
   IX. ஆயுர்வேத உற்பத்திகள்
   X. உள்நாட்டு வாசனைத்திரவிய உற்பத்தி விற்பனை (பொதி செய்யப்பட்டவை)
   XI. உள்நாட்டு இனிப்புப் பண்ட உற்பத்தி விற்பனை (பொதி செய்யப்பட்டவை)
   XII. உளநாட்டு பழங்களிலிருந்து தயாரித்து பொதிசெய்யப்பட்ட உற்பத்திகளின் விற்பனை
   XIII. இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண விற்பனை
   XIV. தேசிய வாசனைத்திரவிய உற்பத்திகள் மற்றும் அது சார்ந்த ஏனைய பொருத்தமான உற்பத்திகள்

04. உள்நாட்டு ரீதியாக தெரிவு செய்யும் போது கண்டி மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஐம்பது வீதமும் (50%) மிகுதி ஐம்பது வீதம் (50%) உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் உற்பத்தி மற்றும் கலைத்துவமான படைப்புகளை விற்பனை செய்வதற்காக இயைபுடைய நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உற்பத்தியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

05. பதிவு செய்து கொள்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தல் கண்டி மாநகர சபையினால் நியமிக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவினால் மேற்கொள்ளப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும்போது தொழில்முயற்சியாளர்கள் உற்பத்திகள் தொடர்பான தன்மைகள், தரம் மற்றும் குணவியல்புகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

06. பதிவு செய்து கொள்வதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு விற்பனைக் கூடங்களை வழங்குவதற்கு முறையான ஒழுங்குவிதிகளின் மூலம் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
   i. விற்பனைக் கூடங்கள் நாளாந்தம் கட்டணம் அறவிடும் அடிப்படையில் வழங்கப்படும். இதன் பிரகாரம் நாளாந்தக் கட்டணத்தை (சகல வரிகளும் உட்பட) விண்ணப்பதாரரினால் குறித்த தினத்தில் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு முன் செலுத்துதல் வேண்டும்.
   ii. விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டிருக்கும் நேரம் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 10.00 மணி வரையாகும்
   iii. பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் 5000.00 ரூபா மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை கண்டி மாநகர சபையில் ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்.
   iv. நாளின் முடிவின் போது வியாபார வளாகத்தைச் சுத்தம் செய்தல் நாளாந்த கட்டண அறவீட்டு அடிப்படையில் விற்பனைக் கூடங்களைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்களினால் மேற்கொள்ளல் வேண்டும். உரிய வகையில் சுத்தம் செய்தல் மற்றும் குப்பைகளை அப்புறப்படுத்தும் வேலைகளைச் செய்யாவிட்டால் மீண்டும் விற்பனைக் கூடங்களை நாளாந்த கட்டண அறவீட்டு அடிப்படையில் வழங்காதிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

07. விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம்: 2022-02-18 மு.ப. 10.00 மணிக்கு முன்

08. விண்ணப்பப் படிவங்களை 2022-02-18ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கண்டி, தபோவன வீதியிலுள்ள கண்டி மாநகர சபையின் தலைமை மாநகர கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறித்த பெட்டியில் உள்ளிட்டதன் பின் கையொப்பமிடும் ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

09. விண்ணப்பதாரர்கள் 081-2223832 அல்லது 081-2222275 நீடிப்பு 233 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது 081-2223832 எனும் தொலைநகல் இலக்கம் அல்லது revenuekmc20@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியின் ஊடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

10. உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு விற்பனைக் கூடங்களை வழங்குதல் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை கண்டி மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பத்தையும் எந்தவொரு காரணமும் காட்டாமல் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கண்டி மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

மாநகர ஆணையாளர்
கண்டி மாநகர சபை.

அலுவலக பயன்பாட்டிற்கு

மாநகர வாகனத் தரிப்பிடத்தின் மேல் மாடியிலுள்ள நூற்றாண்டு பூங்காவில் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் / சுய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் உற்பத்தி விற்பனையை மேம்படுத்துவதற்காக தொழில்முயற்சியாளர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

(ஒருவர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்)

1. வியாபாரத்தின் பெயர்: .....
2. உரிமையாளரின் பெயர்: .....
3. தொலைபேசி / தொலைநகல் இல. .....
4. இணையதள முகவரி: .....
5. மின்னஞ்சல் முகவரி: .....
6. i. மாவட்டம்: .....
   ii. பிரதேச செயலாளர் பிரிவு: .....
7. வியாபாரத்தின் தன்மை தொடர்பான தகவல்கள்

மேற்கொள்ளப்படும் குறித்த வியாபாரத்தின் தன்மைக்கு முன்னால் அடையாளமிடவும்.

i.	உள்நாட்டு கைப்பணிப் பொருட்கள்	
ii.	பத்திக் மற்றும் உள்நாட்டு சிறிய கைத்தொழில் உற்பத்திகள்	
iii.	பித்தளைப் பொருட்கள் உற்பத்தி விற்பனை	
iv.	லாக்ஷா/கோரைப்புல் கைத்தொழில் உற்பத்தி விற்பனை	
v.	மரச் சிற்ப ஆக்கங்களின் விற்பனை	
vi.	சித்திரப் படைப்புகளின் விற்பனை	
vii.	உள்நாட்டில் பொதிசெய்யப்பட்ட உணவு விற்பனை	
viii.	உள்நாட்டில் பதப்படுத்தப்பட்ட தோற்பொருள் உற்பத்தி	
ix.	ஆயுர்வேத உற்பத்திகள்	
x.	உள்நாட்டு வாசனைத்திரவிய உற்பத்தி விற்பனை (பொதி செய்யப்பட்டவை)	
xi	உள்நாட்டு இனிப்புப் பண்ட உற்பத்தி விற்பனை (பொதி செய்யப்பட்டவை)	
xii	உள்நாட்டு பழங்களிலிருந்து தயாரித்து பொதிசெய்யப்பட்ட உற்பத்திகளின் விற்பனை	
xiii	இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண விற்பனை	
xiv	தேசிய வாசனைத்திரவிய உற்பத்திகள் மற்றும் அது சார்ந்த ஏனைய பொருத்தமான உற்பத்திகள்	
viii	ஏனையவை (i முதல் xiv வரை முன்னுரிமை வழங்கப்படும்)	

8. உற்பத்தி கொள்ளவு தொடர்பான தகவல்கள் (ஏற்புடையதானால் மட்டும்)

	உற்பத்தி வகை	நாளாந்த உற்பத்தி (எண்ணிக்கை / அளவு)	வருடாந்தம்
1			
2			
3			

9. தொழில்முயற்சியாளராகப் பதிவு செய்துகொண்டுள்ள நிறுவனம் உண்டானால் அது தொடர்பான விபரங்களைத் (இணைப்பு சகிதம்) தரவும்.

நிறுவனம்: .....
பதிவிலக்கம்: .....

மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் சான்றுபகர்கிறேன். தெரிவு செய்தல் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

.....
விண்ணப்பதாரரின் கையொப்பம்

அறிவுரைகள்:
1. நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் 2022-02-18ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கண்டி மாநகர சபையின் பிரதான மாநகர கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் பெட்டியில் உள்ளிட்டதன் பின் கையொப்பமிடும் பதிவேட்டில் கையொப்பமிடுதல் வேண்டும்.

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

2021 (2022) க.பொ.த. சாதாரண தரத்திற்கான பயிற்சி வினாத்தாள்களை அச்சிடல் மற்றும் விநியோகித்தலின் பெறுகை

CP/EDU/F/08/13/22/01

2021 (2022) க.பொ.த. சாதாரண தரத்திற்கான பயிற்சி வினாத்தாள்களை அச்சிடல் மற்றும் விநியோகித்தலின் பெறுகைக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கல்வித் திணைக்களம் (மத்திய மாகாணம்) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

2). கீழுள்ள அட்டவணையில் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

கூறு இல.	தரம்	ஒவ்வொரு மொழி மூலத்திற்காகவும் வினாத்தாள் தொகுதியின் எண்ணிக்கை (தோராயமானது)			விலைமனு பிணை பெறுமதி (இ.ரூபா)	விநியோகிக்க வேண்டிய திகதி (வலய கல்வி அலுவலகங்கள்)
		சிங்களம்	தமிழ்	ஆங்கிலம்		
1./2/3	11	29,000	15,150	2,700	80,000/-	2022.03.18

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூறுகளுக்காக விலைமனுதாரர் கூறுவிலையிடலாம். ஒவ்வொரு கூறில் அனைத்து பாடங்களுக்கும் கூறுவிலையிடல் வேண்டும். ஒவ்வொரு கூறும் தனித்தனியாக மதிப்பிடப்படும்.

விநியோகிக்க வேண்டிய இடம்: மத்திய மாகாணத்தின் 15 வலயக் கல்வி அலுவலகங்களில் வழங்கல் மற்றும் விநியோகத்தை மேற்கொள்ளல் வேண்டும். (கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா)

3). தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

4). ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மாகாண கல்வித் திணைக்களம் (மத்திய மாகாணம்), பெறுகை அலுவலகத்தில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ./ தொலைநகல்: 081-2224041) என்பதோடு 2022.02.07 ஆம் திகதி தொடக்கம் 2022.02.25 ஆம் திகதி வரை (09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை) வேலை நாட்களின் அலுவலக நேரங்களில் மேற்கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

5). தேவையான தகைமையில் உள்ளடங்குவன:
   i. கீழ் குறிப்பிடப்பட்டவாறு கடந்த மூன்று ஆண்டுகளில் வினாத்தாள்களை அச்சிடுவதன் குறைந்தபட்ச சராசரி புரள்வு. (2019-2021)

கூறு இல.	புரள்வு
1/2/3	ரூபா 3 மில்லியன்

   ii. வினாத்தாள்களை அச்சிடுவது தொடர்பில் குறைந்தது கடந்த 3 ஆண்டுகள் அனுபவம்.
   iii. அச்சிடலில் குறைந்தது கடந்த 5 ஆண்டுகள் அனுபவம்.
   iv. தொழில்நுட்ப ரீதியில் அனுபவம் பெற்ற மற்றும் திறமையான பணிக்குழுவுடன் தொழிற்சாலை ஒன்றை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

6). 2022 பெப்ரவரி 7 அன்று தொடக்கம் 2022 பெப்ரவரி 25 அன்று வரை வேலை நாட்களின் அலுவலக நேரங்களில் (09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை) மாகாண கல்வி பணிப்பாளருக்கு (வ.மே.மா.) ஒரு பொதிக்காக ரூபா ஆயிரத்து ஐந்நூறு (ரூபா 1,500/-) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழுள்ள பந்தி 08 உள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கீழுள்ள பந்தி 8 இல் உள்ள முகவரியின் மாகாண கல்வித் திணைக்களத்தில் 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி இடம்பெறும்.

7). முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''தொடர்புடைய கூறின் பெயர் மற்றும் கூறின் இலக்கத்தை'' குறிப்பிடல் வேண்டும் என்பதோடு விலைமனுக்களை 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மாகாண கல்வி திணைக்கள (மத்திய மாகாணம்), தலைமை கணக்காளரின் அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள ''விலைக்கேட்புப் பெட்டியில்'' இடுவதற்கு வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி 10.00 மணிக்கு கண்டி, மாகாணக் கல்வி திணைக்கள (மத்திய மாகாணம்), தலைமை கணக்காளரின் அலுவலகத்தில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேல் குறிப்பிடப்பட்டவாறு ''விலைமனு பிணை'' ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

8). மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:
எம்.ஜி. அமரசிறி பியதாச
தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
மாகாண கல்வித் திணைக்களம் (மத்திய மாகாணம்), கண்டி.
தொலைபேசி: 081-2224041/ தொலைநகல்: 081-2223343/ 081-2203774
இணையதள முகவரி: www.centralpedu.sch.lk
திகதி: 2022 பெப்ரவரி 03

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு

விலைமனுக்கோரல்

அதிவேக வீதி செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவில் கொடகம முதல் மத்தல ஹம்பாந்தோட்ட வரை இடை நிலை பரிமாற்ற அலுவலகம் மற்றும் காசாளர் கூடத்திற்கு அருகில் பராமரிப்பு விடயங்களுக்காக தொழிலாளர்களை வழங்குவதற்கான விலைமனுக் கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிவேக வீதி செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக்குழுத் தலைவரினால், வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக தெற்கு அதிவேக வீதி பகுதி மற்றும் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டம் தொடர்பாக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

ஒப்பந்த இலக்கம்	செயற்றிட்டத்தின் பெயர்	நாளொன்றிற்கான தொழிலாளர்களின் தொகை	ஒப்பந்த காலம் (மாதம்)	மொத்த தொழிலாளர் தின நாட்கள்	விலை மனுப் பிணை (ரூ)
RDA/ EOM&M/ GOSL/ESEP/ IC-MNT/ 2022/06	அதிவேக வீதி செயற்பாட்டு பராமரிப்பு, முகாமைத்துவ பரிவில் கொடகம முதல் மத்தல ஹம்பாந்தோட்ட வரை இடை பரிமாற்ற அலுவலகம் மற்றும் காசாளர் கூடத்திற்கு அருகில் பராமரிப்பு விடயங்களுக்கு தொழிலாளர்களை வழங்குதல்.	16	12	4,800	150,000.00

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அ.மா.மெ.ஹ மற்றும் க பிரிவு நடைமுறைப்படுத்தும் முகவராண்மையாகும்.
03. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக விலைமனுக்கோரல் மேற்கொள்ளப்படும்.
04. ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள், இது தொடர்பான நிகரான கொள்ளளவையுடைய, தொழிலாளர்களை வழங்குவது தொடர்பான அனுபவத்தைக் கொண்டிருப்பது தகைமையாகக் கொள்ளப்படும்.
05. விலைமனு மூடப்படும் திகதியிலிருந்து 91 நாட்கள் **(2022.06.01)** வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியைக் கொண்டுள்ள விலைமனுப்பிணையைக் கொண்டிருத்தல் வேண்டும். **(2022.06.29** வரை செல்லுபடியாதல் வேண்டும்.) செல்லுபடியாகும் விலைமனுப் பிணையைக் கொண்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. விலைமனுதாரர்களினால் விலைமனு ஆவணங்களுக்குரிய அனைத்துப் பக்கங்களும் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரை பதியப்படல் வேண்டும்.
08. ஒரு முன்னோடி விலைமனுக் கூட்டம், **2022.02.15** அன்று மு.ப. **11.30** மணிக்கு கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய, "அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்தில் நடைபெறும்."
09. இது தொடர்பாக ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்களுக்கு சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட, முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணத் தொகுதியொன்றை, மீளளிக்கப்படாத ரூ. **3,500.00 + 280.00 (VAT)** கட்டணத்தை ரொக்கப்பணமாகச் செலுத்துவதன் மூலம் கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய, "அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின்னர் **2022.02.07** முதல் **2022.02.28** அன்று மு.ப.9.00 மணி முதல் பி.ப.14.30 வரையான காலத்தினுள் பெற்றுக்கொள்ளலாம். 1987 இலக்கம் 03உடைய பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம், முகவராண்மை/பிரதிநிதி மற்றும் வெற்றியாளரான விலைமனுதாரர் பதிவாளர் இணையத்தளத்தில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். **2022.03.02** அன்று பி.ப. **2.00** மணிக்கு விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படுவது முடிவடையும்.
10. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளை கொண்டதாக, **2022.03.02** அன்று பி.ப. **02.00** மணிக்கு முன்னர் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவோ அல்லது நேரில் வந்து கையளிக்கப்படவோ வேண்டும். விலைமனுப்பத்திரங்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"அதிவேக வீதி செயற்பாட்டு பராமரிப்பு முகாமைத்துவ பிரிவில் கொடகம முதல் மத்தல ஹம்பாந்தோட்ட வரை இடை பரிமாற்ற அலுவலகம் மற்றும் காசாளர் கூடத்திற்கு அருகில் பராமரிப்பு விடயங்களுக்கு தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல்"** எனக் குறிப்பிட வேண்டும்.
11. வீதி அபிவிருத்தி அதிகார சபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரியில் அமைந்துள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் விலைமனுக்கள் பொறுப்பேற்பது முடிவடைந்தவுடன் உடனடியாக மேற்படி விலைமனு திறக்கப்படும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் அச்சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ளலாம்.
12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இலக்கம்

பொறியியல் (பராமரிப்பு - அ.மா.மெ.ந மற்றும் க பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகார சபை,
தொ.பே. இலக்கம் - 0113047806

தலைவர்,
அதிவேக வீதி பராமரிப்பு, மற்றும் முகாமைத்துவ பிரிவு பெறுகைக் குழு
அதிவேக வீதி பராமரிப்பு முகாமைத்துவ பிரிவு
வீதி அபிவிருத்தி அதிகார சபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம.

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer ADZ Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer ADZ

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

பதவி வெற்றிடம்

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொடர்புடைய பதவிகளுக்கான தகமைகள் மற்றும் இப்பதவி தொடர்பான மேலதிக தகவல்கள் **www.cfc.gov.lk** இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

01. பொது முகாமையாளர் (ஒப்பந்த அடிப்படையில்)

விண்ணப்பத்தாரர் கல்வித்தகைமை மற்றும் அனுபவம் தொடர்பான விடயங்களை உள்ளடங்கிய சுயவிபர கோவையுடன் (CV) கல்வித்தகைமை மற்றும் அனுபவ சான்றிதழிலுடன் உறவினரல்லாத இருவரின் பெயர் மற்றும் தொலைப்பேசி இலக்கம் உட்பட அனைத்து விடயங்களும் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிட்டு **2022.02.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக** தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15.
தொலைபேசி இல : 011 2 523689/ 011 2 540455
மின்னஞ்சல் : chairman@cfc.gov.lk

இலங்கை துறைமுக அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

கேள்வி இல.	கேள்வியின் பெயர்	கேள்விப் பிணைத் தொகை (ரூபா)	ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது)	முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம்
CMS/LP/21/PT/15/057	Engine Spares for Terberg Terminal Tractors	16,000.00	1,000.00	25-02-2022 பி.ப. 1.30 மணி
CMS/LP/21/PT/14/060	05 Nos. Fuel Actuators for Cummins 855 Engines	16,000.00	1,000.00	25-02-2022 பி.ப. 1.30 மணி
CMS/LP/21/PT/14/057	01 No. Power Transformer 33/11KV 2MVA	65,000.00	1,000.00	28-02-2022 பி.ப. 1.30 மணி

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 பெப்ரவரி 07ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுக அதிகார சபை,
இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.

தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் இல. 2381652, 2470443

இலங்கை துறைமுக அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

கேள்வி இல.	கேள்வியின் பெயர்	கேள்விப் பிணைத் தொகை (ரூபா)	ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது)	முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம்
CMS/LP/22/PT/09/001	Steel Materials for Construction of Main Stores	160,000.00	3,500.00	18-02-2022 பி.ப. 1.30 மணி
CMS/LP/21/PT/09/051	Wall Tiles and Floor Tiles	34,000.00	1,000.00	24-02-2022 பி.ப. 1.30 மணி
CMS/LP/21/PT/15/051	2400MM X 1200MM MS Plates (25MM- 20 Nos.& 8MM -60 Nos.)	27,000.00	1,000.00	24-02-2022 பி.ப. 1.30 மணி

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 பெப்ரவரி 07ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுக அதிகார சபை,
இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.

தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் இல. 2381652, 2470443

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்
சுகாதார அமைச்சு

திகதி	2022 பெப்ரவரி 07 ஆம் திகதியன்று
கடனிலக்கம் மற்றும் செயற்றிட்டத்தின் தலைப்பு	சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் ஒட்சிசன் அவசர வழங்கல் - மேலதிகமான நிதியிடல் இல.: 51107-003
ஒப்பந்த இல. மற்றும் பெறுகையின் தலைப்பு	MH/PB/08/CEPC/51/2021 (ADB/02 Tanks) G10(AF)
	கிரையோஜெனிக் திரவ ஒட்சிசன் களஞ்சியப்படுத்தல் முறைமைகளின் பெறுகை
விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி	2022 மார்ச் 8 ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக

1. இலங்கை சுகாதார அமைச்சின் ஆகுசெலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது நிதியிடலைப் பெற்றுள்ளதுடன் இந்த நிதியிடலின் பெறுகைகளின் பாகமொன்றை மேலே பெயர் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் இவ்விலைமனுக்கோரலில் பங்குபெற்றலாம்.

2. பின்வரும் உபகரணங்களின் பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சானது (பெறுகைதாரர் என அழைக்கப்படுபவர்) அழைக்கின்றது. பண்டங்களின் இனங்கள் மற்றும் தொடர்பான சேவைகளின் சுருக்கமான விளக்கமொன்று கீழே வழங்கப்பட்டுள்ளது.

Lot No.	Brief Description of Goods and related Services	Quantity
1.	Cryogenic Liquid Oxygen Storage System with Vessel Capacity of 10,000 L and Industrial Training to Technical Staff on the use of the Equipment	4
2.	Cryogenic Liquid Oxygen Storage System with Vessel Capacity of 6,000 L and Industrial Training to Technical Staff on the use of the Equipment	2
3.	Cryogenic Liquid Oxygen Storage System with Vessel Capacity of 3,000 L and Industrial Training to Technical Staff on the use of the Equipment	9

3. சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள ஒப்படைப்பு மற்றும் பூர்த்தி செய்தல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அமைவிடங்களுக்கு பண்டங்களை ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன், ஒப்படைப்பு, நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியன ஒப்பந்தத்தை கையொப்பமிடுதலிருந்து 63 நாட்களுள் பூர்த்தி செய்யப்படல் வேண்டுமென்பதுடன் உபகரணத்தின் பாவனைக்கான தொழில்நுட்ப ஊழியர்களுக்கான பயிற்சியானது செயற்பட வைத்தலுக்கு முன்னராகவே ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

4. பகிரங்க போட்டிரீ தியிலான விலைமனுக்கோரலானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் தனிக்கட்ட:தனியுறை விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக நடாத்தப்படுமென்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளிலிருந்து அனைத்து விலைமனுதாரர்களும் பங்குபெற்றலாம். விலைமனுக்கோரல் செயற்பாட்டை ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதித்தன்மை சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் கட்டுப்படுத்தும்.

5. ஒன்று அல்லது பல எண்ணிக்கையுள்ள லொட்டுகளுக்கான விலைமனு. விலைமனுக்கோரல் ஆவணத்தில் மேலும் வரையறுக்கப்பட்டவாறு ஒன்று அல்லது பல ஒப்பந்தங்களுக்கான (லொட்டுக்கள்) விலைமனுவை சமர்ப்பிக்கலாம். ஒரு ஒப்பந்தத்திற்கு அதிகமானவைகளை விலைமனுதாரரொருவர் பெற்றுக் கொண்டதனால் விலைக்குறைப்பொன்றை முன்வைக்க விரும்பும் விலைமனுதாரர்கள் அவ்வாறான விலைக்குறைப்புக்களை விலைமனு சமர்ப்பித்தல் தாளில் அடக்கப்படுவதன் மூலம் அப்படியான சலுகைக்கு உரித்தாவார்.

6. இந்த விலைமனுக்கோரலில் பின்வரும் முக்கிய தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே பங்குபெறலாமென்பதுடன் தகைமை திறன்கள் அதிக முழுமையாக விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளன.

- பின்வருவனவற்றிற்காக Cryogenic Liquid Storages and Medical Gas system equipment இன் வழங்கல் மற்றும் நிறுவுதலின் ஆகக்குறைந்த ஒட்டுமொத்த பெறுமதியானது கடந்த 7 வருடங்களில் பிரதான வழங்குநராக சித்திகரமாக பின்வரும் வகையில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

Lot No.	Brief Description of the Lot	LKR (Mn)
1	Cryogenic Liquid Oxygen Storage System with Vessel Capacity of 10,000 L	43.9
2	Cryogenic Liquid Oxygen Storage System with Vessel Capacity of 6,000 L	14.2
3	Cryogenic Liquid Oxygen Storage System with Vessel Capacity of 3,000 L	49.5

விலைமனுக்கோரல் ஆவணங்களின் 6 ஆம் பிரிவிற்கமைவான (வழங்கல் அட்டவணை) ஒப்படைப்பு மற்றும் பூர்த்தி செய்தல் ஆகியவற்றில் கொள்வனவுக்காரரின் தேவைப்படுத்தலின் பிரகாரம் இனம், அளவு மற்றும் தொகையை வழங்க இயலுமென்பதை விலைமனுதாரர் அல்லது உற்பத்தியாளர் காட்சிப்படுத்தல் வேண்டும்.

- பின்வருவனவற்றிற்கான ஆகக்குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வு:

Lot No.	Brief Description of the Lot	LKR (Mn)
1	Cryogenic Liquid Oxygen Storage System with Vessel Capacity of 10,000 L	175
2	Cryogenic Liquid Oxygen Storage System with Vessel Capacity of 6,000 L	56
3	Cryogenic Liquid Oxygen Storage System with Vessel Capacity of 3,000 L	197

கடந்த 3 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்டது.

- வரலாற்று ரீதியிலான நிதியிடல் செயற்பாடு - விலைமனுதாரரின் தற்போதுள்ள நிதியிடல் நிலபரத்தின் தன்மையை காட்சிப்படுத்துவதற்காக கடந்த மூன்று வருடங்களுக்கான (2018/2019, 2019/2020 மற்றும் 2020/2021) கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுதாரரின் குறைந்த பட்சம் மொத்த ஆதனங்களின் மொத்த கடன் பொறுப்புக்களினதும் வேறுபாடாக கணக்கிடப்பட்ட சராசரி தேறிய பெறுமானம் சாதகமாக இருத்தல் வேண்டும்.

7. மேலதிக தகவலை பெறுவதற்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை வேலை நாட்களில் இலவசமாக அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்) பரீட்சிப்பதற்காக, விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

மேலதிக செயலாளர் (பெறுகை),
மெடிஹவுஸ் கட்டிடம், 2 ஆம் மாடி,
இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு-10, இலங்கை.

தொலைபேசி இலக்கம்: +94 112 112 714. தொலைநகல்: +94 112 112 745
மின்னஞ்சல்: addlsecpb@health.gov.lk

8. 2022 பெப்ரவரி 21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் தொழில் வழங்குநரினால் நடாத்தப்படும் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு அனைத்து விலைமனுதாரர்களும் சமுகமளிக்குமாறு கண்டிப்பாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

9. 2022 மார்ச் 7 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்காக **Cryogenic Liquid Oxygen Storage Systems** இன் பெறுகைக்காக மேலேயுள்ள முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணங்களை கோருவதற்காக மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 இலங்கை ரூபாவிற்கான (100 அ.ஐ.டொ.) பணக்கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டுடன் ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக எழுத்து மூலமான கோரிக்கை/விண்ணப்பமொன்றை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலிருத்தல் வேண்டும் அல்லது வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் 7040244 என்ற கணக்கிலக்கத்திற்கு நேரடியாக வரவு வைக்கப்படல் வேண்டும்.

11. 9 ஆம் பந்தியின் கீழ் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்திற்கு மேலாக, மேலதிகமாக முறையே அ.ஐ.டொ. 100 ஐ வெளிநாட்டு ஒப்படைத்தலுக்காகவும் 5000 இலங்கை ரூபாவை உள்ளூர் ஒப்படைத்தலுக்காகவும் செலுத்திய பின்னர் விலைமனுக்கோரல் ஆவணமானது வெளிநாட்டு ஒப்படைத்தலுக்காக விமான கடித மூலமாகவும் தரை மார்க்கமாக அல்லது தூதஞ்சல் மூலமாகவும் அனுப்பப்படலாம். இழப்பு மற்றும் தாமதமான ஒப்படைத்தலுக்காக கடப்பாடு எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

12. விலைமனுக்கள் 2022 மார்ச் 8 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மேலேயுள்ள 7 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறான விலைமனுப்பிணையொன்றுடன் ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுப் பிணையானது வங்கி உத்தரவாதப் பாங்கில் விலைமனுதாரரினால் ஒப்படைக்கப்படின், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் விலைமனுக்கோரல் படிவங்களின் 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கேற்றவாறும் ''சுகாதார அமைச்சின் செயலாளரின்'' பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

13. விலைமனுக்கள் அவற்றை திறக்கும் திகதியிலிருந்து (அதாவது 2022 ஜுன் 6 ஆம் திகதியன்று) 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து (அதாவது 2022 ஜுலை 4 ஆம் திகதியன்று)119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

14. விலைமனுக்கள் அவற்றின் இறுதி நேரம் முடிவடைந்ததும் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

15. விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவிற்கும் அல்லது செலவினங்களுக்கும் சுகாதார அமைச்சானது பொறுப்பேற்க மாட்டாது.

தலைவர், கொவிட் அவசர பெறுகைக் குழு,
மெடிஹவுஸ் கட்டிடம், 2 ஆம் மாடி,
இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு-10, இலங்கை.

தொலைபேசி இலக்கம்: +94 112 112 714. தொலைநகல்: +94 112 112 745

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2022 பெப்ரவரி 7 திங்கட்கிழமை

தந்தையை இழந்த நிலையில்

சாதிக்க துடிக்கும் யோகராசா நிதர்சனா!

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மற்றும் ஒரு தந்தையை இழந்த யுவதி டுபாயில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள குத்துச்சண்டை போட்டிக்கு செல்லவுள்ளார் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் கைவேலி மருதமடு பகுதியில் வசிக்கும் யுவதி யோகராசா நிதர்சனா தனது விடாமுயற்சியின் பயனாக டுபாயில் நடைபெறும் குத்துச்சண்டை போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

போட்டியில் கலந்துகொள்ளவுள்ள நிலையில் தனது குடும்ப நிலமை தொடர்பிலும் தனது இலக்கு தொடர்பிலும் கருத்து தெரிவித்த யோ. நிதர்சனா இந்த போட்டியில் தங்கம் வென்று ஆசிய போட்டியில் பங்குபற்றுவேன் என தெரிவித்தார்.

01 ஆம் வட்டாரம் மருதமடு வீதி கைவேலி புதுக்குடியிருப்பில் வசிக்கும் யோகராசா நிதர்சனா தந்தை இல்லாத நிலையில் மிகவும் வறுமைக்குட்பட்ட குடும்பத்தில் வாழ்ந்து வரும் இவர் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியின் மாணவியாக இருந்தபோது 2015 ஆம் ஆண்டு தொடக்கம் குத்துச்சண்டையில் ஆர்வம் கொண்டு குத்துச்சண்டை பயிற்சிகளை பெற்று போட்டிகளில் பங்கெடுத்து பதக்கங்களை வென்றுள்ளார்.

2015 ஆம் ஆண்டு கண்டியில் நடைபெற்ற குத்துச்சண்டை தேசிய போட்டியில் சிறந்த குத்துச்சண்டை வீராங்கனையாக தெரிவுசெய்யப்பட்டு தங்க பதக்கத்தினை வென்றுள்ளதுடன் 48 தொடக்கம் 50 கிலோ எடைகொண்ட போட்டிகளில் கடந்த 5 ஆண்டுகளாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்டு தங்கப்பதக்கங்களை வென்ற இவர் சர்வதேச தெரிவு 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் சிறப்பாக விளையாடியும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை பெரும்பான்மை இன பெண்ணிற்கே வெற்றி கிடைத்தது.

இதனை கருத்தில் கொண்டு எனது இடைவிடாத முயற்சியினை மேற்கொண்டு டுபாயில் நடைபெறவுள்ள போட்டியில் பங்கேற்க ஆர்வமாக இருந்தேன் நான் செல்வதற்கான நிதி பற்றாக்குறை காணப்பட்டுள்ளது ஒருதரும் உதவி செய்யாத நிலையில் எனது இறுதி முயற்சியாக படித்த பாடசாலையில் உதவிகேட்டேன் மத்திய கல்லூரியில் அதிபர் கதைத்து உதவுவதற்கான தொடர்பாளர்களை காட்டினார்.

தாய்த்தமிழ் பேரவை எனக்கு முழுமையாக உதவி செய்வதாக முன்வந்தார்கள் அவர்கள் தந்த நம்பிக்கையும் எனக்கு அவர்கள் செய்த உதவியும் இன்னும் இன்னும் குத்துச்சண்டையில் சாதிக்க வேண்டும் என்ற உத்வேகம் வந்துள்ளது எதிர்வரும் 26 ம் திகதி டுபாயில் நடைபெறவுள்ள போட்டியில் நான் பங்கேற்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் செயற்படவுள்ளேன்

இதனை தொடர்ந்து நேபாளத்தில் நடைபெறவுள்ள சர்வதேச விளையாட்டு போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற இலட்சியத்துடன் பயணிக்கின்றேன்.

எம்.ஏ.எஸ் குத்துச்சண்டை பயிற்சி கல்லூரியில் தான் பயிற்சி பெற்று வந்தேன் கொரோனா காரணமாக நான் எனது வீட்டிற்கு வந்துவிட்டேன் முல்லைத்தீவு மாவட்டத்தில் குத்துச்சண்டைக்கான சரியான பயிற்சி வசதிகள் இல்லாத நிலையில் தற்போது நான் வவுனியாவிற்கு சென்று பயிற்சிகளையே மேற்கொண்டு வருகின்றேன். வீட்டில் கூட பொக்சிங் கிற்குரிய பொருட்கள் இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றேன்.

என்னைப்போன்ற பல யுவதிகள் திறமைகளுடன் இருந்தும் அவர்கள் கஸ்ரத்தின் மத்தியில் அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரமுடியாத நிலை காணப்படுகின்றது நானும் கஸ்ரப்பட்ட ஒரு யுவதிதான் தாய்த்தமிழ் பேரவையின் உதவியால் டுபாய்க்கு செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

டுபாய் செல்வதற்கான ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம் ரூபாவினை தாய்த்தமிழ் பேரவையினர் பொறுப்பெடுத்துள்ளதுடன் முதற்கட்டமாக 75 ஆயிரம் ரூபா பணத்தினை யுவதிக்கு தாய்தமிழ் பேரவையினர் வழங்கியுள்ளார்கள்.

வீட்டிற்கு சென்ற தாய்த்தமிழ் பேரவையின் நிறுவுனர் மற்றும் இணைப்பாளர்கள் யுவதியுடன் கலந்துரையாடி யுவதியின் நிலை அறிந்து குத்துச்சண்டையில் யுவதி கலந்துகொள்வதற்கான பண உதவிகளை வழங்க முன்வந்துள்ளார்கள்.இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள யுவதிகளை ஊக்கிவித்து விளையாட்டில் சாதனைபடைக்க வேண்டும் என்று யோகராசா நிதர்சனா தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மூன்று பேர் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சண்முகம் தவசீலன்...✍

இளையோர் உலகக் கிண்ணம்

மகுடம் சூடியது இந்திய அணி

ஐசிசி இன் 19 வயதின்கீழ் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணியை 4 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி 5ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றது.

16 அணிகள் பங்குகொண்ட ஐசிசி இன் 19 வயதின்கீழ் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 14ஆவது அத்தியாயம் மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வந்தது.

இம்முறை 19 வயதின்கீழ் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஏ குழுவிலிருந்து இங்கிலாந்தும் பி குழுவிலிருந்து இந்தியாவும் தோல்வி அடையாத அணிகளாக இறுதிச் சுற்றுக்கு முன்னேறின.

சம்பியன் பட்டத்தை வெல்லும் அணி எது என்பதை தீர்மானிக்கும் இறுதிப் போட்டி அன்டிகுவாவில் உள்ள சேர் விவியன் ரிச்சட்ர்ஸ் மைதானத்தில் நேற்று (05) நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது.

ஆரம்ப வீரர் ஜேக்கப் பெத்ஹெல் 2 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் டொம் பிரெஸ்ட் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் பெவிலியன் திரும்பினர். இதனையடுத்து மற்றுமொரு ஆரம்ப வீரரான ஜோர்ஜ் தோமஸ் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஒருமுனையில் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் நிதானமாகவும், பொறுப்பாகவும் விளையாடிய ஜேம்ஸ் ரெவ் அரைச்சதம் கடந்து அணிக்கு நம்பிக்கையளித்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பின்வரிசை வீரர்களும் வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினர். பின் சதமடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஜேம்ஸ் ரெவ் 95 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனால் இங்கிலாந்து அணி 44.5 ஓவர்களில் 189 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்திய அணி தரப்பில் ராஜ் பவா 5 விக்கெட்டுகளையும், ரவி குமார் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதன்பின்னர் 190 ஓட்டங்கள் வெற்றி என்ற இலக்குடன் இந்திய களமிறங்கியது. எனினும், ஆரம்ப வீரரான ரகுவன்ஷி ஓட்டம் எதுவும் எடுக்காமல் (0) வெளியேற, மற்றொரு ஆரம்ப வீரரான ஹர்னூர் சிங் 21 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். இதனையடுத்து உப தலைவர் ஷெய்க் ரஷித் அபாரமாக விளையாடி அரைச்சதம் எடுத்து ஆட்டமிழக்க, அணித்தலைவர் யாஷ் துல் 17 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

நிஷாந்த் சிந்து, ராஜ் பவா ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டனர். ராஜ் பவா 35 ஓட்டங்களுடனும், கௌசல் தாம்பே ஒரு ஓட்டத்துடனும் அடுத்தடுத்து பெவிலியன் திரும்ப போட்டியில் பரபரப்பு ஏற்பட்டது.

இறுதி முன்று ஓவர்களில் இந்தியாவின் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 48ஆவது ஓவரின் முதல் பந்தை நிஷாந்த் பவுண்டரிக்கு அனுப்பினார். அதே ஓவரின் மூன்றாவது மற்றும் நான்காவது பந்தை சிக்ஸருக்கு அனுப்பிய தினேஷ் பானா இந்திய அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இந்திய அணி 47.4 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 195 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியீட்டி சம்பியாகத் தெரிவாகியது.

இறுதி வரை ஆட்டமிழக்காமல் நிஷாந்த் 50 ஓட்டங்களையும், தினேஷ் 13 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய 19 வயதின்கீழ் அணி 5ஆவது முறையாக இளையோர் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. முன்னதாக இந்திய அணி 2000, 2008, 2012, 2018 ஆகிய ஆண்டுகளில் இளையோர் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது.

இந்திய அணிக்காக சகலதுறையிலும் பிரகாசித்த ராஜ் பவா, இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவாக, தொடர் நாயகன் விருதை இம்முறை இளையோர் உலகக் கிண்ணத்தில் அதிக ஓட்டங்களைக் குவித்த (506) தென்னாபிரிக்க வீரர் டிவோல்ட் பிரேவிஸ் பெற்றுக்கொண்டார்.

5ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணிக்கு பிசிசிஐ தலைவர் சவுரவ் கங்குலி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் தனது டுவிட்டரில், இந்திய 19 வயதின்கீழ் அணிக்கும், பயிற்சியாளர்களுக்கும், தேர்வுக்குழுவினருக்கும் உலகக் கிண்ணத்தை இவ்வளவு சிறப்பாக வென்றதற்கு வாழ்த்துகள். அத்துடன், நாங்கள் அறிவித்துள்ள 40 இலட்சம் ரொக்கப் பரிசு ஒரு சிறிய பாராட்டுச் சின்னம்தான். ஆனால் அவர்களின் முயற்சிகள் நாங்கள் வழங்கும் மதிப்பிற்கு அப்பாற்பட்டவை என்று அதில் கங்குலி பதிவிட்டுள்ளார்.

இதனிடையே, இளையோர் உலகக் கிண்ணத்தில் சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக ஒவ்வொரு வீரருக்கும் தலா ரூ.40 இலட்சமும், அணி உதவியாளர்களுக்கு ரூ.25 இலட்சமும் பரிசுத் தொகையாக வழங்கப்படும் என்று பிசிசிஐ செயலாளர் ஜெய்ஷா அறிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணியை 2 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்திய அவுஸ்திரேலிய அணி, இம்முறை இளையோர் உலகக் கிண்ணத்தில் 3ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

குளிர்கால ஒலிம்பிக்

நியூசிலாந்துக்கு முதல் தங்கம் வென்ற வீராங்கனை

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் நியூசிலாந்துக்கு முதல் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத் தந்தார் ஸோய் சடோவ்ஸ்கி.

நியூசிலாந்து குளிர்கால ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வது வரலாற்றில் இதுவே முதன்முறை.

பெண்களுக்கான பலகைப் பனிச்சறுக்கின் Slopestyle இறுதிச் சுற்றில் அவர் வென்றார்.

அவர் அமெரிக்காவின் ஜூலியா மரினோவுடன் இறுதிச் சுற்றில் களமிறங்கினார்.

20 வயது சடோவ்ஸ்கி போட்டியின் இறுதியில் மிக லாவகமாகக் குதித்து வெற்றியைக் கைப்பற்றினார்.

அது தமது வாழ்நாளில் செய்யப்பட்ட சிறந்த முயற்சி என்று வெற்றிப் பெருமிதத்துடன் கூறினார் சடோவ்ஸ்கி.

டென்னிஸ் போட்டிகளில் இருந்து விலகுவதாக மெட்வெடேவ் அறிவிப்பு

உலக டென்னிஸ் தர வரிசையில் 2ஆம் இடத்தில் உள்ள ரஷ்யாவை சேர்ந்த முன்னணி வீரர் டேனியல் மெட்வெடேவ், டென்னிஸ் போட்டிகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்திரேலிய பகிரங்க போட்டியில் தவறவிட்ட டென்னிஸ் நட்சத்திரம் தனது டுவிட்டர் பக்கத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

போமியுலா1 கார் பந்தயத்துக்கான பயிற்சியை தொடங்கி இருப்பதால் தாம் டென்னிஸ் போட்டிகளில் இருந்து விலகுதாக கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் உலகின் முதல் நிலை வீரரான நோவெக் ஜோகோவிச்சை வீழ்த்தி முதல் கிராண்ட்ஸ்லம் பட்டத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

டயலொக் தேசிய சுப்பர் லீக் போட்டி

தனஞ்சயவின் சதத்துடன் ஜப்னா அணிக்கு வெற்றி

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் டயலொக் தேசிய சுப்பர் லீக் 50 ஓவர் கொண்ட போட்டித்தொடரின் ஜப்னா அணியை தம்புள்ள அணி எதிர்கொண்டதுடன், காலி அணியை கொழும்பு அணி எதிர்கொண்டது.

இதில் தம்புள்ள அணிக்கு எதிரான போட்டியை ஜப்னா அணி 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிக் கொண்டதுடன், கொழும்பு அணிக்கு எதிரான போட்டியை காலி அணி 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிக் கொண்டது.

பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியில் தனஞ்சய டி சில்வா இந்த தொடரில் தன்னுடைய முதல் சதத்தை பதிவு செய்ய ஜப்னா அணி இலகுவான வெற்றியினை பதிவு செய்தது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜப்னா அணிக்கு, ஏனைய வீரர்கள் சறுக்கலான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும், தனஞ்சய டி சில்வா சதமடித்து அசத்தியிருந்தார்.

இவர், 120 பந்துகளில் 10 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 101 ஓட்டங்களை குவிக்க, மறுமுனையில் சந்துஷ் குணதிலக்க 39 ஓட்டங்களையும், ரவிந்து பெர்னாண்டோ 37 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில், லஹிரு சமரகோன் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தம்புள்ள அணிக்கு லசித் அபேரத்ன 35 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து நிதானமாக ஓட்டங்களை குவித்தாலும், ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். ஒரு கட்டத்தில் 101 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தம்புள்ள அணி தடுமாறியது.

இவ்வாறான நிலையில், சமீர சந்தமல் 46 ஓட்டங்களையும், துவிந்து திலகரட்ன 42 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து வலுவளித்தனர். இருப்பினும் தம்புள்ள அணியால், 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 215 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. பந்துவீச்சில் நுவான் பிரதீப் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தம்புள்ள அணியானது விளையாடிய 5 போட்டிகளிலும் தோல்வியடைந்து புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தை பிடித்துக்கொண்டிருக்கும் நிலையில், ஜப்னா அணி 18 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளது.

தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில், காலி அணியின் 9ம் இலக்க துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய கவிஷ்க அஞ்சுலவின் அபாரமான ஆட்டத்தின் உதவியுடன் கொழும்பு அணிக்கு எதிரான போட்டியில் 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் காலி அணி வெற்றிபெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காலி அணி ஆரம்பம் முதல் தடுமாற்றத்தை காட்டிய நிலையில், 103 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. தனியாளாக ஓட்டங்களை குவித்த கவிஷ்க அஞ்சுல ஒரு சிக்ஸர் மற்றும் 9 பௌண்டரிகள் அடங்கலாக 73 பந்துகளுக்கு 75 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

மறுமுனையில் இவருக்கு உதவியாக அகில தனன்ஜய 22 ஓட்டங்களையும், சலன டி சில்வா 27 ஓட்டங்களையும் பெற, காலி அணி 49.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 225 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. கொழும்பு அணியின் பந்துவீச்சில் லஹிரு மதுஷங்க வெறும் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கொழும்பு அணிக்காக திமுத் கருணாரத்ன மற்றும் லஹிரு மதுஷங்க போன்ற வீரர்கள் பிரகாசிப்புக்களை வெளிப்படுத்தியிருந்த போதும், சீரான இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்ததால், 45.5 ஓவர்கள் நிறைவில் 181 ஓட்டங்களுககு சகல விக்கெட்டுகளையும் இழந்து கொழும்பு தோல்வியை சந்தித்தது.

அதிகபட்சமாக லஹிரு மதுஷங்க 43 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 42 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க, பந்துவீச்சில் சலன டி சில்வா 3 விக்கெட்டுகளையும், பிரியமல் பெரேரா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இந்த போட்டியில் வெற்றிபெற்ற காலி அணி புள்ளிப்பட்டியலில், 13 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தை பிடித்துள்ளதுடன், கொழும்பு அணி 9 புள்ளிகளுடன் நான்காவது இடத்தை பிடித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 7ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.